# ஜனோபிமானி

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

THE PEOPLE'S FRIEND.

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 8. Vol. 8. | நளஹு, ஆடிமீ, JULY—AUGUST, 1916. | ஸஞ்சிகை 7. No. 7.

## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. | | | | Foreign. | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Rs. | A. | P. | | Rs. | A. | P. |
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | ... ... | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| 1/10 do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *nett* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:—**The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விபரம்.

| | உள் நாடு. | | | | அந்ய நாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 | 0 | 0 | ... | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் | ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ ,, | ,, | ,, | 2 | 8 | 0 |
| ¼ ,, | ,, | ,, | 1 | 4 | 0 |
| 1/10 ,, | ,, | ,, | 1 | 0 | 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேண்டும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்

ஜனாபிமானி

புஸ்தகம் 8.] நள ஹு ஆடி மீ. [ஸஞ்சிகை 7.

## THE COST OF THE WAR.

## யுத்தத்தின் செலவு.

தற்போதைய யுத்தத்தில் மருந்து, குண்டுகள், ஆயுதங்கள் இவைகளுக்காகும் செலவு ஏராளமாயிருக்கிறது. ஸோல்ஜர்களுக்கு வேண்டியிருக்கும் ஆகாரம், வைத்ய உதவி முதலியவைகளுக்கும் ஏராளமாய்ச் செலவழிகிறது. இவைகளைத்தவிர அநேக வ்யாபாரக்கப்பல்களும், யுத்தக்கப்பல்களும் நாசமடைகின்றன. லக்ஷக்கணக்கான ஜனங்கள் கொல்லப்பட்டும், ஒருவேலையும் செய்யமுடியாமல் காயப்பட்டும் போகிறார்கள். இப்படி யுத்தத்தில் நேரிடும் பற்பல செய்கைகளால் த்ரவ்ய நஷ்டம் எவ்வளவு ஏற்படுகிறதென்பதை சரியாய்க கணக்கிட்டுச் சொல்வது கஷ்டமான கார்யமாகும். அப்படிக் கணக்கிட்டாலும் அந்தத் தொகைகளை மனஸில் க்ரஹிப்பது ச்ரமமானது.

இந்த யுத்ததில் முதல்வர்ஷத்துக்கு ஏற்பட்டிருக்கும செலவு எவ்வளவு என்பதைப்பற்றி மிஸ்டர் எட்கார் க்ராம்மண்ட் என்பவர் தெரிவித்த கணக்குகளை ஏற்கனவே 'ஜனாபிமானி'யில் தெரிவித்திருக்கிறோம். அவர் போட்டிருக்கும மதிப்புகள் ரொமபக் குறைவென்று ஒரு அமெரிக்கர் சொல்லுகிறார். அந்த அமெரிக்கருடைய கணக்குகளின்படி முதல் வர்ஷத்திய செலவு பின்வருமாறு.

| | ரூபா. |
|---|---|
| பெல்ஜியம் | 709,31,70,000 |
| ப்ரான்ஸ் | 1,951,38,72,000 |
| ரஷ்யா | 2,503,80,00,000 |
| இங்க்லண்ட் | 1,342,76,40,000 |
| ஆஸ்ட்ரியா-ஹங்கேரி | 1,839,99,60,000 |
| ஜெர்மனி | 2,764,36,80,000 |
| இட்டலி | 347,40,00,000 |
| துருக்கி, பல்கேரியா, ஸெர்வியா முதலியவைகளும், நடுநிலைமைத் தேசங்களின் நஷ்டமும் | 450,00,00,000 |
| மொத்தம். | 11,909,03,22,000 |

அதாவது கிட்டத்தட்ட 12,000 கோடிரூபாயாகும்.

இநதத் தொகையைக் கக்ஷிவாரியாகப் பிரித்தால்ஜெர்மன்கக்ஷியின்நஷ்டம்5,100,00,00,000 ரூபா யாகும். இங்க்லீஷ் கக்ஷியின் நஷ்டம் 6,809,03,22,000 ரூபாயாகும.

இரண்டாவது வர்ஷத்தில் யுத்தம் நடக்கும் இடங்கள் அதிகமாயின. ஸப்மரீனின் தொந்தரவுகளும் அதிகமாயின. 5-வாரத்துக்குக் கணக்கெடுத்ததில் ஒருநாளுக்கு நான்கு கப்பல்வீதம் நாசம் அடைந்தன. இந்த விகிதப்படியே கப்பல்கள் நாசமடைந்தால் ஒரு வர்ஷத்தில் 40-லக்ஷம் டன்கள் நிறையுள்ள கப்பல்கள் நாசமடைந்திருக்கும். முதல் வர்ஷத்தில் மாத்ரம் 25-லக்ஷம் டன்கள் நிறையுள்ள கப்பலகள் மூழ்கடிக்கப்பட்டன.

இரண்டாவது வர்ஷத்தில் யுத்தச்செலவு இன்னும் அதிகமாயிருக்கிறதென்று தெரிகிறது. இங்க்லண்ட் விஷயத்தில் மாத்ரம் சென்ற 1915-ம் வர்ஷம ஏப்ரல்மாஸம முதல் ஜூன் மாஸம் முடிய தினமொன்றுக்கு 4-கோடி 5-லக்ஷம ரூபாய் செலவாயிற்று. சென்ற டிஸம்பர் ஜனவரி மாஸங்களில் தினப்படி செலவு $7\frac{1}{2}$-

லக்ஷம் ரூபாயாகும். இது இங்க்லண்டின் இரண்டாவது வர்ஷத்து சராசரிச் செலவாகுமென்று வைத்துக்கொள்ளலாம். ஆகவே இங்க்லண்ட்மாத்ரம் 2,745 கோடி ரூபாய் செலவழிக்குமென்று சொல்லலாம்.

இது முதல வர்ஷத்தியதைவிட இரண்டு மடங்கு அதிகமானது. மற்ற யுத்ததேசங்களுக்கும் யுத்தச்செலவு இரண்டுமடங்கு அதிகரித்திருக்குமென்பதில ஸந்தேகமில்லை. ஆகவே 1916-ம வர்ஷம் ஜூலைமாஸம் 31-தேதியோடு முடிகிற இரண்டுவர்ஷத்திய மொத்த யுத்தச் செலவு 36,000 கோடி ரூபாயாகும.

| | கோடி ரூபா. |
|---|---|
| முதல்வர்ஷத்திய செலவு உத்தேசமதிப்பு. | 12,000 |
| இரண்டாவது வர்ஷத்திய செலவு | 24,000 |
| இரண்டு வர்ஷத்திய செலவு | 36,000 |

இவ்வளவு பெரிய தொகையை மனஸால் பாவிப்பதுகூட முடியாது. ஆனல் அதை நமது தேசத்துச் செல்வத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

ஸர். ஆர். க்ரிப்பின் என்பவர் இந்தியாவிலுள்ள ஜனங்களில் சராசரியில் ஒவ்வொருவருக்கும் 150 ரூபாய் ஆஸ்தியுண்டென்று தெரிவித்திருக்கிறார். இந்தியாவில் 31 கோடி ஜனங்கள் உண்டென்று வைத்துக்கொண்டால், இந்தியர்களின் மொத்த ஆஸ்தி 4,650-கோடி ரூபாயாகும். இதத் தொகையையும் ஐரோப்பிய யுத்தத்தின் இரண்டு வர்ஷச் செலவையும் ஒப்பிட்டுப்பார்த்தால், இந்தியர்களின் மொத்த ஆஸ்தியைப்போல் 8-மடங்குள்ள தொகை செலவழிந் திருக்கிறதென்று தெரியவரும்.

| | கோடி ரூ. |
|---|---|
| யுத்தச் செலவு | 36,000 |
| இந்தியாவின் ஆஸ்தி | 4,650 |

அப்படியானல் யுத்தத்தில் இவ்வளவு அபரிமிதமாய்ச் செலவழிக்குமபடியாக அவ்வளவு ஆஸ்தி ஐரோப்பிய தேசங்களுக்குண்டா என்று ஒரு கேள்வி ஏறபடுகிறது. அந்த தேசங்களுக்கு ஏராளமாய் ஆஸ்தி உண்டென்றே தெரியவருகிறது. அதன் விவரம் வருமாறு.

தேசங்களின் ஆஸ்தி
(1914-ம் வர்ஷம்)

| | கோடி ரூபாய்கள் |
|---|---|
| க்ரேட்ப்ரிட்டன் | 26,418 |
| ஜெர்மனி | 24,975 |
| ரஷ்யா | 18,048 |
| ப்ரான்ஸ் | 17,700 |
| ஆஸ்ட்ரியா | 16,674 |
| இட்டலி | 6,000 |
| பெல்ஜியம் | 3,600 |
| மொத்தம் | 1,13,414 |

ஆகவே யுத்தத்தில் சேர்ந்துள்ள தேசங்களின் மொத்த ஆஸ்தி 1,13,415 கோடி ரூபாயாகும. இதில் 37,500 கோடி ரூபாய் இரண்டு வர்ஷத்தில் தீர்ந்து போய்விட்டது. அதாவது மூன்றில் ஒரு பாகம செலவழிந்திருக்கிறது.

இந்த யுத்தத்தில் ஜனச்சேதம் ஏராளமானது. 1915-ம் வர்ஷம் ஜூலை மாஸத்தில் யுத்த தேசங்களின் மொதத ஸைன்யம் 2 கோடியே 35½ லக்ஷம் பேர்களாகும. இதோடு இட்டலி, பல்கேரியா இவைகளின் ஸைன்யத்தையும், (14 லக்ஷம்) புதிதாய்ச் சேர்நதிருக்கும ரஷ்யாவின் ஸைன்யத்தையும் சேர்த்தால் மொத்தம் ஸைன்யங்களின் மதிப்பு 3 கோடியாகலாம். யுத்த ஆரம்பத்தில் ஜனச்சேதம் நூற்றுக்கு 11 முதல் 33 வரையில் இருந்ததென்று மிஸ்டர் எட்கர் க்ராமமண்ட் என்பவர் தெரிவித்தார். இரண்டு வர்ஷத்துக்கும் சேர்த்துப் பார்த்தால் யுத்தத்தில் ஜனச்சேதம், இறந்தவர்கள், வேலைசெய்ய லாயக்கில்லாதவர்கள் இவர்களை மாத்ரம் கவனித்தாலும், நூற்றுக்கு 40 வீதமிருக்கு மென்னலாம.

இதன்படி பார்த்தால், 2-வர்ஷத்துக்கு மொத்தம் ஜனச்சேதம் 1 கோடியே 20 லக்ஷமாகும். மிஸ்டர் க்ராம்மண்ட் சொல்லுகிறபடி ஒரு மனிதர் ஸம்பாதிக்கக்கூடிய ஸொத்தின் மதிப்பு சராசரியில் 8,859 ரூபாய் என்று வைத்துக்கொண்டால் ஜனச்சேதத்தால் ஏற்பட்ட நஷ்டம் 10,558 கோடி ரூபாயாகும். வேறு சிலர் இந்த மதிப்பு ரொம்பக் குறைவானதென்று சொல்லுகிறார்கள் அவர்கள் கணக்குப்படி, ஜனச்சேதத்தால் ஏற்பட்ட நஷ்டம் 22,070 கோடி ரூபாயாகிறது. நமது தேசத்தின் மொத்த ஆஸ்தியை 1-என்று வைத்துக்கொண்டால் இந்தத் தொகையானது 5-மடங்காகும்.

முன்னமே நாம் யுத்தத்தால் தேசங்களுக்கு இந்தியாவின் ஆஸ்தியைப்போல் 8 மடங்கு லொத்து நஷ்டமாயிற்றென்று தெரிவித்தோம். இந்த ஜனச்சேத நஷ்டத்தையும் சேர்த்தால் மொத்த நஷ்டம் இந்தியாவின் ஆஸ்தியைவிட 13 மடங்காகும்.

| | கோடி ரூ |
|---|---|
| மொத்தம் செலவு நஷ்டம் முதலியவை | 58,070 |
| இந்தியாவின் ஆஸ்தி | 4,650 |

## THE BRAIN.

BY A. K. SUNDARA RAJAN.

## மூளை.

தேகத்திலுள்ள எல்லா உறுப்புகளும் இயங்குவதற்கும் இவ்வியக்கத்தினால் நமக்குண்டாகும் ஸகல உணர்ச்சி பேதங்களுக்கும மூளையே ப்ரதானமானது. அதை ஆன்மாவின நிலையென்று மனோதத்வ சாஸ்த்ரிகள் கூறுவர். தேகத்திலுள்ள கரணங்கள், தத்வங்கள் முதலிய யாவற்றினும் அது மிகவும் சிறந்ததென்பது, தேகத்தின் எல்லாப் பாகங்களினும் மிகவும் திண்ணிய மண்டைஓடு அல்லது கபாலத்துக்குள் கடவுள் அதை அமைத்துவைத்திருக்கும் அருமையினாலேயே தெளிவாய் விளங்குகிறது.

"நான் நினைக்கிறது நெஞ்சி லிருக்கிறது, வாயில் வரவில்லை," "அவன் வயிற்றைக் கிழித்தால் வாயடைக்கும் அக்ஷரம் கிடையாது" என்னும் ஸாதாரண வழக்கச்சொற்களை ஆதாரமாகக்கொண்டு, மூளையினுடைய அருமைப்பாட்டையும், ஸகல எண்ணங்களுக்கும் அதுவே உற்பத்திஸ்தான மென்பதையும் புராதன ஹிந்துக்கள் அறிந்திலரென்று சில நவீன சாஸ்த்ரிகள் கூறுகிறார்கள். லலாடஸ்தானம், பிரமமரந்திரம், துவாதசாந்தம் என்னும பதப்ரயோகங்களையும் "எண்சாணுடம்புக்கு சிரஸே ப்ரதானம்" என்னும் பழமொழியின் தத்வார்த்தத்தையும், ஸகல வ்யாதிகளுக்கும் தைல வர்க்கங்களைக் கொண்டு சிரஸில் ப்ரயோகிக்கவேண்டியதென்று ஹிந்துக்களின் ஆயுள்வேதம் முறையிடும் உண்மைகளையும் அவர்கள் உணரவில்லைபோலும்! ஏனைய எல்லா உறுப்புகளையும் இயக்கத்தக்க ஆத்மநிலையும், உணர்ச்சிஸ்தானமும், எண்ணமுதிக்கும் ஆதி பீடமும் சிரஸென்பதை அறிந்தே நம்மவர்கள் சிரஸை ப்ரதானமாகக் கொண்டார்கள்.

விடாது வருந்தி வாசிப்பதினால் மூளையின் சக்தி அதிகரித்துப் புத்தி விசாலப்படுகிறது, அதனால் மூளை எவ்வளவுங் கெட்டுப்போகிறதில்லை. தேக அஸௌக்யத்தினாலும், மனோவ்யாகூலங்களினாலும், பயம், திகில் முதலிய ஸங்கடங்களினாலுமே மூளை வெகுவாய்க் கெட்டுப்போகிறது.

புருசே என்பவர் மூளையைப் பற்றிப் பின் வரும் வ்ருத்தாந்தமொன்றை வெளியிட்டிருக்கிறார்.—சேனையில் காப்டனாயிருந்த தாவானீர் என்பவர் தேகாரோக்யஸ்திதியி லிருக்கையில் கெட்ட ஸமாசாரம் அடங்கிய ஒரு கடிதத்தை வாசிக்கையில் இடிவிழுந்தாற்போல அசைவற்று நின்று, பாரிசவாய்வு கண்டு, பேசச் சக்தியற்றவரானார். சில நாளைக்குப் பின்பு ஸ்வஸ்தமாகி வருகையில், அவருடைய மனைவியி னிடத்தி

விருந்து ஒரு கடிதம் வந்தது ; அதை வாசித்த வுடனே உதிரம் தலைக்கேறிப் பேச்சற்று, அசை வற்று, அறிவுகெட்டு மூன்று தினத்தில் இறந்து போனார். அவருடைய தலையைப் பரிசோதித் துப்பார்க்கையில், தலையிலுள்ள ரத்த நாடிகளில் உதிரம் அடைத்துக்கொண்டு மூளையில் சிறு கட்டிகள் எழும்பியிருந்தன.

இதயாதி அனுபவ ப்ரஸித்தமான கார்யங் களை வாசிக்கும்போது மூளை கெட்டுப்போவதற் குக் காரணம் மனோ வ்யாகூலத்தை விளக்கத் தக்க தோற்றங்களென்றே தெரியவருகிறது. வருநதி வாசிப்பதினாலேயே மூளை கெட்டுப் போகிறதென்பது சாஸ்த்ர அயுக்தம். தேகத்தை ஆரோக்யஸ்திதியில் வைத்துக்கொண்டும், போஜ னம் உட்கொண்டவுடனே ஒருமணிநேரம் வரை யில் மூளைக்கு அதிக வேலை தராமலும் மாதரம் இருப்போமாகில், எவ்வளவு ப்ரயாஸைப்பட்டு நாம் வாசித்தல் முதலிய மனோவேலைகளைச் செய்துகொண்டுவந்தாலும், மூளை கெட்டுப்போ வதற்கு இடமிராது. காலக்ரமம் தப்பிப் போஜ னம் உட்கொள்ளுவதினாலும், அமிதமாய்ச் சாப் பிடுவதினாலும், ச்சாப்பிட்டவுடனே ஆசோதை யின்றி மனோ வேலையில் ப்ரவர்த்திப்பதினாலும், வ்யாகூலங்கள் முதலிய ஸஞ்சலங்கள மனதைக் கவரவொட்டுவதினாலுமே தான் மூளை கெட்டுப் போய் அகால மரணம் நேரிடுகிறது.

மத்யதரைக்கடலில் நேரிட்டிருந்த ஓர் கப்பற் சண்டையிலே அதி வீராவேசத்துடன் போர் புரிந்துகொண்டிருந்த ஒருவன் சிரஸில் குண்டு ஒன்று தாக்கியது. உடனே அவன் ப்ரஜ்ஞை யற்றுக் கீழே விழுந்தான். ப்ராணன் முற்றும் நீங்கிய ப்ரேதம்போல் அவனிருந்திருப்பானு யின் அவனை உடனே அடக்கம் செய்ய கப்பல் களிலிருந்தவர்கள பரயத்தனப்பட்டே யிருப் பார்கள். ச்வாஸப்பை, ரத்தாசயப்பை முதலிய வற்றின் இயக்கக்குறிகள் வெளியே காணப்பட்ட படியால், அவனை அங்கிருந்த ராணுவ வைத்ய பரிசிலர்கள் ஜிப்ரால்டருக்கு அனுப்பினார்கள். அவ்விடத்தில் தேக தத்வ சாஸ்த்ரத்திலே மிக வும் பாண்டித்யம் பெற்ற சில வைத்யர்கள் பல வாறாக முயன்றும், அவன் அதேஸ்திதியி லிருந் தான். பிறகு அப்பிணியாளனை வைத்யர்கள் இங்கிலாந்துக்கு அனுப்பினார்கள். அவ்விடத் திலே சில மாஸம் வரையில் சரீர அங்க தர்மங் கள் மாத்ரம் இயங்கிக்கொண்டிருந்தும், அவன் ப்ரக்ஞை தப்பின நிலையிலேயே இருந்தான். இந்நிலைமையிலேயே ஒரு வர்ஷத்துக்கு மேற் பட்டு அவனிருந்தும், எவ்வகைப்பட்ட சிகித் ஸையும் அவன் விஷயத்தில் பயன்படவில்லை. இப்படியிருக்கையில், கபால லக்ஷண வித்தை யிலே அதிக பாண்டித்யமடைந்து நுட்ப புத்தி யைப்பெற்ற ரணவைத்யர் ஒருவர் அப்பிணி யாளியின் கபாலத்தைச் சோதித்துப்பார்க்கை யில் அவனுடைய மூளையில் ஓர் எலும்புத்துண்டு அழுந்திக்கிடந்ததைக் கண்டார். அவர் அதனை அதற்கேற்ற ரணவைத்யக் கருவியைக்கொண்டு மெல்லத் தூக்கிவிட்டவுடனே, அவனுக்கு ப்ரஞ் ஞைவந்தது. அப்போது அருகிலிருந்த யாவ ரும் வியக்கத்தக்க அற்புதம் ஒன்று நடந்தது. மேற்கண்டபடி அப்பிணியாளியின் கபாலத்தில் குண்டு தாக்கியபோது அவன் தன் கூட்டாளி ஒருவனை நோக்கி சத்ருக்களின் மரக்கலங்களில் சிலவற்றைப் பிடிப்பதற்கேற்ற வழி வகைகளைக் குறித்துப பேசிக்கொண்டிருந்தான். அவன் வச னித்துக்கொண் டிருந்த வாக்யத்தைப் பூர்த்தி செய்வதற்குமுன், இடையில் குண்டு தாக்கிய காரணத்தால், அவனுடைய மூளைக்குப் பங்கம் நேரிட்டபடியினாலே, அவ்வாக்யம் முடிவு பெறா மல் அம்மட்டிலேயே நின்றிருந்தது : மூளையை அழுத்திக்கொண்டிருந்த எலும்புத்துண்டு மேற் கண்டபடி எடுபடவும், அப்பிணியாளி அவ்வாக் யத்தின் எஞ்சிய பாகத்தைச் சொல்லிமுடித் தான். அவ்வாக்யத்தில் எஞ்சி நின்ற பாகம் அவன் வாய்விட்டு வெளிப்பட்டது தான் ப்ரக்

னைவு வந்தவுடனே அவனிடத்துண்டாகிய முதற் செய்கை. இதை யாவரும் வியந்தார்கள். இடையில் ஒருவருஷத்துக்கு மேற்பட்டுக் காலம்கழிந்ததைக்குறித்தும், அவனுடைய தேகத்துக்கு விளைந்தனவற்றைக் குறித்தும் அவனுக்கு ஒன்றும் தெரியாது. இடையில் விட்டுப்போன வாக்யத்தை முடிக்குந் தொழிலையுடைய மூளை நரம்புகள் விட்ட குறையை ஒரு வருஷமாகியும் மறவாதிருந்தது ஆச்சரியம்!

சரீரத்தைச்சார்ந்த ஏனைய அங்கங்கள் எவ்வளவு நன்றாய் இயங்கிக்கொண்டிருந்தாலும், ஸகல தோற்றங்களுக்கும் உணர்ச்சிக்கும் மூலாதார பீடமாகிய மூளை மாத்ரம் நல்லஸ்திதியில் இராவிட்டால், மனிதன் பரேதத்துக்கு ஸமானமாவான்.

எ. கே. ஸுந்தரராஜன்.

## ALUMINIUM.

## அல்யூமினியம்.

அல்யூமினியம் என்னும் உலோகம் ஸுமார் 25-வர்ஷங்களுக்கு முன்னால் ரஸாயன சாஸ்த்ரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. அதுமுதல் அதன் உபயோகம நாளடைவில் வ்ருத்தியாகி பற்பல தொழிலகளிலும் அது உபயோகிக்கப் பட்டுவருகிறது. ஆரம்பத்தில் அதை தாதுவர்க்கங்களிலிருந்து பிரித்தெடுக்க ரொம்ப செலவாயிற்று. அப்போது அல்யூமினியமானது ஒரு ஔன்ஸ் முக்கால் ரூபாயாக விற்கப்பட்டு வந்தது. அதாவது ரூபாயெடை 4½-அணாவாக விற்றது. ஆனால் நாளடைவில் அதிகமாகத்தயார் செய்யபபடவே, அதன் விலை குறைந்துபோய் சென்ற 1913-ம் வர்ஷத்தில் ராத்தல் 13-அணாவாக விற்றது.

அல்யூமினியமானது பூமியில் ஏராளமாயிருக்கிறது. களிமண்ணிலுள்ள மூலப்பொருள்களில் முக்யமானது அல்யூமினியந்தான். ஆனால் களிமண் ஸுலபமாய்க் கிடைக்கக் கூடியதாயிருந்தும், அதிலிருந்து அல்யூமினியம் தயார்செய்ய நாளதுவரையில் ரஸாயன சாஸ்த்ரிகளுக்கு ஸாத்யப்படாமலே இருக்கிறது. தற்போது அல்யூமினியம் பாக்ஸைட் என்னும் தாதுப்பொருளிலிருந்து தயார் செய்யப்படுகிறது. இந்த பாக்ஸைட்டும் எல்லாவிடங்களிலும் கிடைப்பதில்லை. இந்தியாவில் மத்யமாகாணங்களில் இநத தாதுப் பொருள் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதை சுத்திசெய்து, இதிலிருந்து அல்யூமினியம் தயார் செய்தால், அது இந்தியா, ஜப்பான், சீனாமுதலிய ஆசியாகண்டத்து தேசங்களுக்கு போதுமானதாயிருக்கும். ஆனால் இதுவரையில் எவரும் இந்தியாவிலுள்ள பாக்ஸைட்டிலிருநது அல்யூமினியம் தயார்செய்ய முயற்சி செய்யவில்லை. இப்போது நாம் உபயோகிக்கும அல்யூமினியம் எல்லாம் அன்ய தேசங்களிலிருந்தே வருகிறது.

பாக்ஸைட் என்னும் தாதுப்பொருளில் அல்யூமினா என்னும் அல்யூமினிய*பஸ்மம் இருக்கிறது. உயர்ந்த பாக்ஸைட்டில் இது 100-க்கு 75-பாகத்துக்கு மேலும் உண்டு. ரொம்ப தாழ்ந்த பாக்ஸைட்டானால் நூற்றுக்கு 31-பாகம் இருக்கும். பாக்ஸைட்டிலிருந்து முதலில் அல்யூமினாவைப் பிரித்தெடுத்து, அல்யூமினாவிலிருந்து மின்ஸார சக்தியால் அல்யூமினியத்தைப் பிரித்தெடுப்பார்கள்.

பாக்ஸைட்டானது ப்ரான்ஸின் தென்பாகத்திலும், அமெரிக்கா ஐக்யநாடுகளிலும், வேறு சில இடங்களிலும் கிடைக்கிறது.

சென்ற 1908-ம் வர்ஷத்தில் ஸுமார் 17,000 டன் அல்யூமினியம்கிடைத்தது. சென்ற 1914-ம் வர்ஷத்தில 68,200 டன் அல்யூமினியம் கிடைத்தது. உலகத்தில் கிடைக்கும் மொத்த அல்யூமினியத்தில் பெரும்பாகம் அமெரிக்கா ஐக்யநாடுகளில்தான் தயார் செய்யப்படுகிறது. ஸுமார் 25-வர்ஷங்களுக்குமுன் அதாவது 1890-ம் வர்ஷத்தில் அங்கே 27-டன் அல்யூமினியந்தான்

தயார்செய்யப்பட்டது. ஆனால் சென்ற சில வர்ஷங்களாக அத்தொழில் ரொம்ப வ்ருத்தியடைந்திருக்கிறது. அதன்விவரம் வருமாறு:—

| வர்ஷம். | தயார் செய்யப்பட்ட அல்யூமினியத்தின நிறை டன். |
|---|---|
| 1900 | 3,190 |
| 1905 | 5,060 |
| 1910 | 21,300 |
| 1912 | 29,290 |
| 1913 | 32,300 |
| 1914 | 35,320 |
| 1915 | 64,280 |

இந்த அட்டவணையால் அந்த தேசத்தில் அல்யூமினியம் செய்யும் தொழிலானது, 15-வர்ஷகாலத்தில் 20-மடங்கு வ்ருத்தியடைந்திருப்பதாகத் தெரிகிறது.

ஐரோப்பாவில் உள்ள தேசங்களுள் ப்ரான்ஸில்தான் அதிகமாக அல்யூமினியம் செய்யப்படுகிறது. அதன்விவரம் வருமாறு.

| வர்ஷம். | டன். |
|---|---|
| 1908 | 3,500 |
| 1909 | 5,000 |
| 1910 | 5,400 |
| 1914 | 18,000 |

இப்படி அல்யூமினியம் ஏராளமாக தயார் செய்யப்பட்டு வருவதற்குக் காரணம், அது அநேக கார்யங்களுக்கு ஏராளமாக உபயோகிக்கப்பட்டு வருவதே. அதன் உபயோகங்களில் சிலவற்றை இங்கு எழுதுகிறோம்.

அல்யூமினியமானது ஸெப்பலின் செய்வதற்கு இன்றியமையாதது. ஏரோப்ளேனகள் செய்வதற்கும் அது உபயோகப்படுகிறது. மோட்டார் வண்டி செய்வதிலும் அது ஏராளமாய் உபயோகிக்கப்படுகிறது. வெடிகுண்டுகள் தயார் செய்வதிலும், செம்புக்கு பதிலாக தந்திக்கம்பிகள் செய்வதிலும் அதை உபயோகித்து வருகிறார்கள். வீட்டிற்கு வேண்டிய சமையல் பாத்ரங்களும், ஸைன்யங்களுக்கு வேண்டிய சமையல் பாத்ரங்களும் அதனால் செய்யப்பட்டு, வெகுவாய் உபயோகப்படுகின்றன. அநேக தேசங்களில் குண்டுகளுக்கு வேண்டிய ப்யூஸ் என்னும் திரிகளை அதனால் செய்து உபயோகிக்கிறார்கள்.

ஸாமான்களைச் சுற்றுவதற்கு மெல்லிய வெள்ளீயத்தகடுகளை உபயோகித்ததற்கு பதிலாக, இப்போது அநேகர் அல்யூமினியத்தால் செய்யப்பட்ட மெல்லிய தகடுகளை உபயோகிக்கிறார்கள். இதுவர்ணம் செய்வதிலும், நெசவுத்தொழிலிலும், உபயோகப்படுகிறது. அல்யூமினியத்தால் பற்பல குழாய்கள் செய்யப்படுகின்றன. அவைகள் ரொம்ப உறுதியாயிருக்கின்றவைவாம். அல்யூமினியம் ரொம்ப லேசான உலோகமானதால், தாம்ரம், பித்தளை, ஆகிய இவைகள் உபயோகப்பட்டுவந்த தொழில்களில் அல்யூமினியத்தை விசேஷமாக உபயோகித்து வருகிறார்கள். யுத்தத்தால் அல்யூமினியத்துக்கு ரொம்ப க்ராக்கி ஏற்பட்டிருக்கிறது. ஸைன்யங்கள் உபயோகிக்கும் பெரிய தகரப் போகணிகள் இப்போது அல்யூமினியத்தாலேயே பெரும்பாலும் செய்யப்படுகின்றன. குண்டுகளில் வைக்கும் திரிகளுக்கும், யுத்தத்துக்கு வேண்டிய மோட்டார் வண்டிகள் செய்வதற்கும அல்யூமினியம் ஏராளமாய் வேண்டியிருக்கிறது. இதனால் 1913-ம் வர்ஷத்தில் ராத்தல் 9-அணாமுதல் 13-அணாவாக விற்ற அல்யூமினியம் 1915-ம் வர்ஷத்தில் 15-அணாவாக விலை ஏறிவிட்டது. சென்ற வர்ஷத்தில் அது ராத்தல் 1-ரூ. 14-அணாவாக விற்றது.

காதல் வெற்றி.

ஹாஸ்யரஸமான நாவல், விலை 4-அணா. ஜனவினோதினி சந்தாதாரர்களுக்கு 3-அணா. ஜி. எ. வைத்யாராமன் & கம்பெனி, மதராஸ்.

## LOVE NEVER LOST.

BY A V. RAMASWAMI.

## அன்புக்கும் அழிவோ?

(ஆனி மாஸத்து ஸஞ்சிகையில் 276-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஸம்பாஷணையை துரைஸாமி உள்ளேயிருந்து கேட்டுக்கொண்டிருந்தான். தன் தாயாரெண்ணத்தை அவர்கள் கலைப்பதற்காக அப்படிப் பேசுகிறார்களென்று அவன் தெரிந்துகொண்டான்? செல்லம் அழகில்லை யென்றும், எல்லாம் கல்யாண விஷயத்தைப்பற்றி அடுத்த விசை பார்த்துக்கொள்ளலாமென்றும் சொன்னதும், அவனுக்குத் தன்னைமீறி கோபம் வந்துவிட்டது. "நாம எவ்வளவு கஷ்டப்பட்டு அவளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று ப்ரயத்தனப்படுகிறோம. அதை மாற்றுகிறார்கள், பார்த்தாயா" வென்று எண்ணிக்கொண்டு, விரைவாகச் சென்று, அவர்களை வம்பர்களென்றும், பிறர் வாழ்ந்தால் பார்க்க ஸகியாதவர்களென்றும், தன்வீட்டு விஷயத்தில் ஏன் அவர்கள் ப்ரவேசிக்கவேண்டுமென்றும், அவர்களைத் தாறுமாறாகத் திட்டி யனுப்பிவிட்டு, தன் தாயாரிடம் அவர்கள் பேச்சில் நம்பிக்கைவைக்கலாகாதென்று தெரிவித்து, 'கல்யாணத்தை நிறுத்த யோசனை செய்யாதே' யென்று சொன்னான். இந்தச் செய்திகளெல்லாம் செல்லத்தின் காதிற்கு எட்டின. ஒருவேளை ஸுப்பலக்ஷ்மியின் மனம் மாறி எங்கு மறுத்துவிடப் போகிறாளோ வென்றெண்ணி வருத்தப்பட்டாள். கல்யாணம் இப்பொழுதாகி முடிந்ததும் ஸந்தோஷம் பிறந்துவிட்டது.

ராமநாதய்யர் கல்யாணம் நடந்த நான்கு நாட்களிலும் ஊரையழைதது போஜனம் செய்வித்தார். ஊரிலுள்ளோ ரனைவரும் இதுவரையில் இவ்வளவு பணம செலவழித்து கல்யாணம் செய்தவர்களைப் பார்த்ததேயில்லை யென்று சொல்லிப் புகழ்ந்தார்கள். இப்படிக் கல்யாணம் மிகவும விமரிசையாக நடந்தேறியது. செல்லமும் துரைஸாமியும் தமது எண்ணம் நிறைவேறிவிட்டதென்று அகமகிழ்ந்தார்கள்.

### V - அத்யாயம்.

கல்யாணத்திற்கு வநதிருந்தவர்க ளெல்லாம் ராமநாதய்யர் விருப்பத்தின்படி கொஞ்சநாளிருந்துவிட்டு தத்தம ஊர்போய்ச் சேர்ந்தார்கள். பள்ளிக்கூடம் திறந்துவிட்டதனால், துரைஸாமியும் பட்டணம் போய்விட்டான். தான் ஊருக்குப் போகுமுன் செல்லத்தினிடம் தனக்கு அடிக்கடி கடிதம போட்டுக்கொண்டிருக்கும்படி சொல்லிவிட்டுப் போனான். பட்டணம் வந்ததும் பற்பல விதமான அதிக விலையுள்ள பட்டு ரவிக்கைகளும் சேலைகளும் வாங்கி, தன் தாயார்பேருக்கு அனுப்பி, செல்லத்தினிடம் கொடுக்கச் சொன்னான். ஊரிலுள்ளோர் "இன்னும் கல்யாணமாகி பூரா ஒருமாஸமாகவில்லை. அதற்குள் தனது மனைவிக்கு பட்டு பட்டாக புடவைகளும் ரவிக்கைகளும் வாங்கி யனுப்புவதைப் பார்" என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள். செல்லம் தனக்கு ஏதாவதொன்று வேண்டுமென் றெழுதினல் உடனே வாங்கி அனுப்பிவிடுவான். குறைந்தது மாஸத்திற் கொருதடவை வந்துபார்த்துவிட்டுப் போவான். ராமநாதய்யரும், விசாலாக்ஷியும் "அந்தமட்டும் செல்லத்திற்கு நல்ல அகமுடையான் அகப்பட்டானே; பையன் மிகவும் யோக்யன். பெண்டாட்டியை நன்றாக வைத்துக்கொண்டிருப்பான்" என்றுசொல்லி ஸந்தோஷப் பட்டார்கள்.

தினந்தோறும் செல்லம் தன் புக்ககத்திற்குப் போய், தன் மாமியாருக்கு ஒத்தாசையாக சில கார்யங்களைச் செய்துவிட்டு, அங்கேயே இருந்து தலையை வாரிப் பின்னிக்கொண்டு ஸாயங்காலம் வீட்டுக்கு வருவாள். ஸுப்பலக்ஷ்மியும் தன்னெண்ணத்தின்படி செல்லம் தனக்கு நாட்டுப்பெண்ணாக வந்ததை நினைத்துக்கொண்டு, ஸந்தோஷப்பட்டாள். ஒவ்வொருநாள் அவள் செல்

லத்தை அகத்திலேயே நிறுத்திக்கொண்டு ராமநாதய்யருக்கு ஸமாசாரம் சொல்லியனுப்பி விடுவாள். இப்படி செல்லம் இங்குமங்குமாக இருந்துவந்தாள். கொஞ்சநாளைக்கெல்லாம் புஷ்பவதி ஆனாள். அதன்பிறகு அவள் வெளியிலெங்கும் போவதில்லை. ஸுப்பலக்ஷ்மி ராமநாதய்யர் வீட்டுக்கு வந்து அவளை அடிக்கடி பார்த்துவிட்டுப் போவாள்.

துரைஸாமிக்கு பீ. ஏ. பரீக்ஷை முடிய எட்டு மாஸமிருந்தது. பரீக்ஷை முடிந்ததும் சாந்திமுகூர்த்தத்திற்கேற்பாடு செய்யலாமென்று ராமநாதய்யர் சொன்னார். ஸுப்பலக்ஷ்மியும் அப்படியே செய்யலாமென்று ஒத்துக்கொண்டாள். செல்லம் பெரியவளானபிறகு வெட்கத்தினால் துரைஸாமிக்குக் கடிதமெழுதுவதை நிறுத்திவிட்டாள். அதை யறியாத துரைஸாமி "என்ன செல்லம் கடிதம் போடுவதை நிறுத்திவிட்டாள். வாரத்திற் கொருகடிதமாவது போடாமலிருக்க மாட்டாளே. என்ன காரணமோ தெரியவில்லையே? என்பேரில் ஒருவேளை கோபமோ? அதற்கும் காரணமில்லையே. அவள் போடுங் கடிதங்களுக்கெல்லாம் உடனே பதிலெழுதிவிடுகிறேன். ஏதாவது வாங்கி யனுப்பும்படி யெழுதினால் உடனே வாங்கி யனுப்பிவிடுகிறேன்" என்று எண்ணி, தன் தாயாருக்கு அவளிடத்தினின்றும் கடிதம் வராத காரணத்தை உடனே தெரியப்படுத்தும்படி கடிதமெழுதினான். அவள் மீனம்பாளை, செல்லம் வெட்கத்தினால் கடிதமெழுதுவதில்லை யென்று பதிலெழுதச்சொன்னாள். அந்தக் கடிதம் துரைஸாமிக்குச் சேர்ந்ததும் அவன் "கல்யாணமாயும் என்னுடன் ஸஹஜமாகப் பேசிக்கொண்டிருந்த உனக்கு இப்பொழுதானா வெட்கம் வந்துவிட்டது" என்று செல்லத்திற்கு பரிகாஸமாக ஒரு கடிதமெழுதினான். அதன்பிறகு செல்லமும் கொஞ்சம் வெட்கம் தணிந்து முன்போலவே கடிதமெழுத ஆரம்பித்தாள். நாளும் ஓடிற்று. துரைஸாமிக்கு பரீக்ஷையும் முடிந்தது. அவன் ஊருக்கு வந்தபொழுது செல்லத்திற்குப் பற்பலவித வாஸனை ஸாமான்களும் இன்னும் இதர வஸ்துக்களும் வாங்கிக்கொண்டுவந்தான். கொஞ்சநாளைக்கெல்லாம் ராமநாதய்யர் நல்லநாளாக ஒன்று பார்த்து துரைஸாமிக்கும் செல்லத்துக்கும் மிகவும் விமரிசையாக சாந்திமுகூர்த்தம் செய்தார். அதற்கு நாலுநாளைக்கெல்லாம் துரைஸாமி பரீக்ஷையில் பாஸ் செய்த ஸமாசாரம் தெரிந்தது. துரைஸாமி மேற்கொண்டு படிக்காமல் ஒரு தடவை பட்டணத்திற்குப் போய் 125 ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலையை ஒத்துக்கொண்டு ஸௌகர்யமான வீடாக ஒன்று வாடகைக்கு ஏற்பாடு செய்துவிட்டு, எல்லாரையும் அழைத்துக்கொண்டுபோவதற்காக ஊருக்குவந்தான். நல்லநாள் ஒன்று பார்த்து எல்லாரும் புறப்பட்டார்கள். ஸுப்பலக்ஷ்மி, விசாலாக்ஷியினிடம் சென்று, தான் போய்வருவதாகவும், அவள் தன் கணவனுடன் இன்னும் பத்துநாளில் பட்டணத்திற்கு ஒருதரம் வந்துவிட்டுப் போக வேண்டுமென்றும் சொல்லிவிட்டு வண்டியில் ஏறிக்கொண்டாள். அவளுடன்கூடவே மீனம்பாளும் ஏறிக்கொண்டாள். துரைஸாமியும் தன் மாமியாரிடம் போய் வருவதாகச் சொல்லிவிட்டு, செல்லத்தை "ஏன், ரெயிலுக்கு நாழிகையாகிறது புறப்படு" என்றான்.

இதுவரையில் செல்லம் தன் பெற்றோர்களை விட்டுப் பிரிந்ததில்லை. இப்பொழுது பெற்றோரை விட்டுப் பிரிகிறோமேயென்று ஒருபக்கத்தில் வருத்தமும், கணவனுடன் சென்று ஸுகமாய் குடித்தனம் செய்யப்போகிறோமே யென்று ஒரு பக்கத்தில் ஸந்தோஷமும், உண்டாயிற்று. தான் வண்டியில் ஏறுமுன் தன் தாயாரிடம் சென்று, நமஸ்காரம் செய்து, தான் போய்வருவதாகச் சொல்லிப் புறப்பட்டாள். அவளும் செல்லத்திற்கு மாமியாரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும், கணவனிடத்தில்

எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும சொன்னாள். செல்லமும் அப்படியே நடப்பதாகச் சொல்லிவிட்டு வண்டியில் ஏறிக்கொண்டாள். துரைஸாமியும் ஏறிக்கொண்டான். ராமநாதய்யரும் ஸ்டேஷன் வரையில் போய்வரக் கருதி ஏறிக்கொண்டார்.

ரெயில் வர சற்றுநேரந்தானிருந்தது. ராமநாதய்யர் அதற்குள் நால்வர்க்கும் டிக்கட்டுகள் வாங்கினார். ரயில் வந்ததும் நால்வரும் ஏறிக்கொண்டார்கள். ராமநாதய்யர் செல்லத்தினிடம் இருபது ரூபாயைக் கொடுத்து "உனக்கு ஏதற்காவது செலவுக்கு வைத்துக்கொள்" என்று சொல்லி, அடிக்கடி க்ஷேம ஸமாசாரத்தைப் பற்றி கடிதமெழுதும்படி சொன்னார். இதற்குள் ரெயிலும் நகர்ந்தது. ராமநாதய்யர் துரைஸாமியை போய்ச்சேர்ந்ததும் கடிதம் போடும்படி சொல்லிவிட்டு, நின்றுகொண்டு ரெயில் கண்ணுக்கு மறையுமட்டும் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு வீட்டுக்கு வந்துசேர்ந்தார். அன்றையதினம் ராமநாதய்யருக்கும் விசாலாக்ஷிக்கும் வீடு வெறிச்சென்று தோன்றிற்று. அன்று முழுவதும் செல்லத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். சற்று நேரத்திற்கு ஒருதரம் விசாலாக்ஷி ராமநாதய்யரை "இந்நேரத்திற்கெல்லாம் எவ்விடம் போவார்கள்? இந்நேரத்திற்கு வீடு போய் சேர்ந்திருப்பார்களா?" என்று கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்கு அன்றையதினம் கார்யத்தின்மேல் புத்தி செல்லவேயில்லை.

ஸாயங்த்ரம் 6-மணிக்கு துரைஸாமியும் மற்ற மூவரும் பட்டணம் வந்து சேர்ந்தார்கள். ஒரு வண்டியை அமர்த்திக்கொண்டு வீடுபோய் சமைத்து சாப்பிட்டு விட்டு நால்வரும் படுத்துத் தூங்கினார்கள். மறுநாள் காலை 10-மணிக்கெல்லாம் செல்லம் சமைத்தாள். துரைஸாமி சாப்பிட்டு விட்டு ஆபீஸுக்கு போய்விட்டான். பிறகு செல்லம் தன் மாமியாருக்கும மீனாம்பாளுக்கும் சாதம் போட்டு தானும் சாப்பிட்டுவிட்டு வீட்டுக் கார்யங்களை சீக்ரமே செய்துவிட்டாள். ரூபலக்ஷ்மி செல்லத்தைப்பார்த்து "சற்றுநேரம் படுத்துக்கொள், கார்யங்களையெல்லாம் ஸாயங் காலம் வெயில் தாழ்ந்த பிறகு செய்யலாம்" என்று சொல்லி, தான் படுத்துக்கொண்டு தூங்கி விட்டாள். செல்லத்திற்கு தூக்கம் வரவில்லை, அவளுக்கு கண்ணைக்கட்டி காட்டில விட்டது போலிருந்தது. நேற்றையதினம காலை 12 மணிக்கெல்லாம் ஊரிலிருந்தோம், இன்றையதினம் இங்கிருக்கிறோமேயென்று எண்ணிக் கொண்டாள். பெற்றோர்களைப் பார்த்து பத்து வர்ஷமானது போல் தோன்றியது. எப்பொழுது ஸாயங்காலம் வரும; கணவன் ஆபீஸிலிருந்து வருவாரென்று எதிர்பார்த்திருந்தாள். மணி ஐந்தானதும் ராத்ரிக்கு சமைக்க அடுப்பு மூட்டினாள். அதற்குள் அவள் மாமியார் எழுந்து தான் சமைப்பதாகச் சொன்னாள். சற்றுநேரத்திற்கெல்லாம் துரைஸாமி கையில் இரண்டுகுலை தாழம்பூவுடனும், ஒருசெண்டு மல்லிகைப்பூவுடனும், வந்து சேர்ந்தான். ரூபலக்ஷ்மி சமைத்தானதும செல்லத்திற்கும், மீனாம்பாளுக்கும் பூவைத்து நன்றாகப் பின்னிவிட்டாள். ராத்ரி எல்லாரும சாப்பிட்டானதும ரூபலக்ஷ்மியும மீனாம்பாளும தாழ்வாரத்தில் படுத்துக்கொண்டார்கள். துரைஸாமி, செல்லம் இருவரும் அத்தாழ்வாரத்திற்கு பக்கத்திலிருந்த அறையில் படுத்துக்கொண்டார்கள். துரைஸாமியினிடம் செல்லம் தனக்குப் போது போகவில்லையென்றும், அன்று ஒருநாள்போனது ஒருயுகம்போலிருந்ததென்றும் சொன்னாள். மறுநாள் துரைஸாமி ஆபீஸிலிருந்து வந்தபொழுது, பத்து தமிழ் நாவல்களை வாங்கிக்கொண்டுவந்து அவளிடம் கொடுத்து, 'சுதேசமித்திரன்'' பத்ரிகைக்கு பணம்கட்டியிருப்பதாகவும் சொன்னான். அதன் பிறகு தினந்தோறும் செல்லம தன் கார்யங்களானதும் முதலில் பேபரைப் பார்த்துவிட்டு பிறகு புஸ்தகத்தை வைத்துக்கொண்டு வாசிப்

பாள். அப்பொழுது அவளுக்கு போதுபோவதே தெரியாமலிருந்தது. நாளாக ஆக எல்லாம் ஸஹஜமாய் விட்டது. தன் பெற்றோர்களுக்கு தான் ஸௌக்யமாயிருப்பதாகவும், அவர்களை ஒருதடவை வந்துவிட்டுப் போகும்படிக்கும், அடிக்கடி கடிதம் எழுதுவாள். ஸுப்பலக்ஷ்மியும் செல்லத்தின்மேல் மிகவும் அன்பாக இருந்தாள். அவளை அநேகமாய் கார்யம்செய்ய விடுவதில்லை. செல்லமும அவளிடம் மிகவும் மரியாதையாகவே நடந்துகொண்டாள். செல்லம் தன் கணவனிடம மாமியார் தன்னைக் கார்யம் செய்யவிடாமல் தானே செய்து கஷ்டப்படுவதாகச் சொன்னாள். அதன்பேரில் அவன் ஒரு சமையலகாரனை வேலைக்கு அமர்த்தினான். அதற்குப் பிறகு செல்லத்திற்காவது, ஸுபபலக்ஷ்மிக்காவது அதிக வேலையே கிடையாது. இப்படிக் கொஞ்சநாள் செல்லம் ஒருவித கஷ்டமும் மனவருத்தமு மில்லாமல் குறையற்று ஸுகமாக தன் கணவனுடன் கூடிவாழ்ந்து வந்தாள்.

செல்லந் தான் மத்யானங்களில் புஸ்தகங்களை வாசித்துக் காலத்தைப் போக்கிவிடுகிறாள். ஸுப்பலக்ஷ்மி என்ன செய்வது ? போய் ஒரு மாதமட்டும் அவள் வெளியிலெங்கும் போகாமல் வீட்டிலேயே இருந்துவந்தாள். அதன் பிறகு மத்யான்ம சாப்பிட்டானதும் அடுத்தகத்தில் குடியிருநத காமாக்ஷி யென்னும் பெயர்கொண்ட ஒரு விதந்துவை ஸ்நேகிதம் செய்துகொண்டு அவளிடம்போய் வமபுபேசி காலத்தைக்கழித்து வந்தாள்.

காமாக்ஷிக்கு ஒரேபிள்ளை. அவன்பெயர் ராகவன். அவனுக்கு மதராஸ் பாங்கியில் 50-ரூபாய் சம்பளம். அவன் மகா ஸாது. தன் தாயாருக்கு அஞ்சி நடப்பவன். அவள சொல்வது தனக்கு நல்லதானாலும், கெட்டதானாலும உடனே செய்துவிட்டுத் தான் மறுவேலை பார்ப்பான். காமாக்ஷி மிகவும் பொல்லாதவள. அந்தக் காரணத்தினாலேயே எல்லாரும் அவள் பிள்ளைக்கு பெண் கொடுக்க நடுங்கினார்கள். ராகவனுக்கு ரொம்ப நாள் வரையிலும் கல்யாண மாகாமலிருந்து, கடைசியில் கனகம் என்ற பெண் ஒருத்தி மனைவியாக அமைந்தாள். அவளை இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம். பசுங்கிளி போல் அவ்வளவு அழகுடையவள். கனகத்தின் பெற்றோர்கள் அவள சிறு குழந்தையா யிருந்த பொழுதே இறந்துவிட்டதனால், அவள் தன் மாமன்வீட்டில் வளர்ந்துவந்தாள். அவளுக்கு வயது பதினொன்றானதும், அவள் மாமன் மாப்பிள்ளை தேடி எங்கும் அகப்படாமையால், எப்படியாவது கல்யாணம் செய்துகொடுத்து விடுவோமென்ற எண்ணத்துடன், ராகவனுக்கு மணமசெய்து கொடுத்து விட்டான். கனகம பெரியவளாய் வீட்டுக்கு வந்தவுடன் காமாக்ஷி தன் முழு அதிகாரத்தையும் செலுத்த ஆரம்பித்தாள்.

ஐயோ பாவம்! கனகத்தின் பெற்றோர்கள் உயிருடனிருந்திருக்கும்பக்ஷத்தில் மனந்துணிந்து ரூபத்தில் லக்ஷ்மியை யொத்த அவளை, ஒரு பசுங்கிளியை குரங்கு கையில் கொடுப்பதைப்போல, அந்த இடத்தில் கொண்டு கொடுத்து ஸமபந்தம செய்திருப்பார்களா? ஒருக்காலும் கொடுத்திருக்கமாட்டார்கள். பெற்றோர்களைத் துறந்துவிட்டு நிற்பவர்கள் எவ்வளவு துர்பாக்யமுடையவர்கள பாருங்கள். கனகம் பூர்வஜன்மத்திற்செய்த தீவினைப்பயனால்தான் தன் பெற்றோர்களைத்துறந்து காமாக்ஷிக்கு நாட்டுப்பெண்ணாக வர நேர்ந்தது. ஜனங்களெல்லாம் "ஐயோ! இவ்வளவு அழகுடைய பெண்ணை எப்படித்தான் மனந்துணிந்து அவள் மாமன், காமாக்ஷியின் தீக்குணங்களெல்லாம் தெரிந்திருந்தும், அவ்விடத்தில் கொடுத்தானோ. தன பெண்ணாயிருந்தால் இப்படிக் கொடுத்திருப்பானா?" என்று சொல்லி வருத்தப்பட்டார்கள.

ராகவனுக்கு வாழ்க்கைப்பட கனகத்திற்கு கொஞ்சங்கூட இஷ்டமில்லை. ஆனால் எப்படி மறுத்துச் சொல்வது? அவளென்ன செய்யக்

கூடும்? 'தனக்காக கணவன் தேடிய மாமனுக்கு தன் துரதிருஷ்டததினுல் எங்கும் வரன் அகப்படவில்லை. எப்படியிருந்தாலும் கல்யாணமென்னமோ ஆகவேண்டும். ராகவனைக் கல்யாணம செய்து கொள்ள இஷ்டமில்லை யென்று தனது மாமனிடம சொன்னுல், அவனுக்கு கோபம பிறந்து, "உனக்குப் பிடித்தவனைப் பார்த்துக் கலியாணம் செய்துகொள்" என்று சொல்லிவிட்டால் என்னசெய்கிற தெனறெண்ணி, பேசாம லிருந்துவிட்டாள்.

இந்தக் காலத்தில் பெண்களின் அழகையும் புத்தியையும் பார்த்து யார் கல்யாணம செய்து கொள்ளுகிறுர்கள்? மாமனுர் எவ்வளவு பணக்காரர், எவ்வளவு ஆஸதியிருக்கிறது, எவ்வளவு எதிர் ஜாமீன் கொடுப்பார், கல்யாணமான பிறகு மாப்பிளளையின் முடுக்கைக்காட்டி பயமுறுத்தி, எவ்வளவு பணம் பிடுங்கலாம்' என்பதை யோசிததுக் கல்யாணம் செய்து கொள்ளுகிறுர்கள். எதிர் ஜாமீன் கொடுக்கும்பக்ஷத்தில் பெண் மூதேவியைப் போலிருநதாலும் மிக்க அழகாய் விடும். மூடபுததியை யுடையதாயிருந்தாலும ஸரஸ்வதியாய்விடும. இநதக்காலததில் இரண்டு மூன்று பெண்களைப் பெற்றுவிடுபவர்களுக்கு வேறு நரகமேயில்லை யென்று சொல்லலாம; அவ்வளவு கஷ்டங்களையும் அவர்கள் இநத உலகத்திலேயே அனுபவித்து விடுகிறுர்கள். முதலில் மாப்பிள்ளை தேடுவது கஷ்டம். எங்கேயோ ஒருவனை தேடிக் கல்யாணம செய்தால், அவன் ஏழையாயிருககும் பக்ஷத்தில கொஞ்சநாளைக்குள் முன்னிருந்த நிலைமையை முற்றும் மறந்து, தனக்கு வேண்டிய வீண் செலவுகளுக்கெல்லாம் பணம கொடுக்கும்படி மாமனுரைக் கேட்க ஆரம பிக்கிறுன. கொடுக்காவிட்டால் கோபம் பிறந்துவிடும். உடனே தன் மனைவியை பிறந்தகததிற்கு அனுபபி வாழாமல் வைத்துவிடுகிறுன. இந்த உலகததில் பெண்களைப் பெற்ற எலலாருமே பணக்காரர்களா யிருக்கிறுர்களா? எவ்வளவுபேர் ஸர்வ ஏழைகளாயிருக்கிறுர்கள். அவர்களுக்குப் பெண் பிறந்துவிட்டால்என்னசெய்வது? பெண்களுக்கு வயதிலோ கல்யாணமாகவேண்டும். இல்லாவிட்டால அபகீர்த்திககு ஆளாகவேண்டியிருக்கும். பணமோ கிடையாது. பணமில்லாவிட்டால் மாப்பிள்ளைகளோ அகப்படுவதில்லை. பெண்களாகபபெற்ற ஸர்வ ஏழைகளாகிய அவர்கள் என்னசெய்வார்கள், பாவம்! அவர்கள் மனம் என்னிலையிலிருக்கும? அதை நினைப்பார் ஒருவருமில்லையே! தங்கள் பிள்ளைகளுக்கு எதிர்ஜாமீன் கொடுக்கும்படி கேட்கும் பெற்றேர்கள் தாம் அந்த நிலையிலிருப்பாராஞல், தமது மனம் எப்படி வருந்துமென்பதை யோசித்துப் பார்ப்பாரேயானுல், வாய்கூசாமல் வரதக்ஷிணை கேட்க இச்சிப்பார்களா? ஒருநாளும் மனமிசையார்கள். இது தவிர, இவ்வுலகில் அநேகமாய் மிக்க பணக்காரர்களுக்கு குழநதைகள் பிறப்பதில்லை. குடிக்கக் கஞ்சியுமில்லாத தரித்ரதசையி லிருப்பவர்களுக்கே அதிக குழந்தைகள் பிறக்கின்றன. அவைகளும் அநேகமாய் பெண்களாகவே பிறக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றிற்கும் கல்யாணத்தின்போது பணம கொடுக்கமுடியுமா?

எப்பொழுதும் பணத்திற்கிச்சிக்காமல் தமது மனதுக்கு இசைந்தவளாக பெண்ணின் அழகையும் புத்தியையும் பார்தது கல்யாணம செய்து கொள்ள வேண்டும். ஆனுல் அபபடிப்பட்டவர்கள அநேகமாய் இந்த உலகில் ஒருவருமில்லை. எல்லாருமே துரைஸாமியைப்போ லிருக்கிறுர்களா? எவ்வளவுபேர்கள் பணத்திற்காக ஆசைப்பட்டு கல்யாணம் செய்துகொள்ளுகிறுர்கள். "அழகைப்பார்த்து கல்யாணம் செய்துகொள்வது" என்பதொன் றிருந்திருக்கும்பக்ஷத்தில் கனகத்தைக் கல்யாணம் செய்துக்கொள்ள அநேகம்பேர் போட்டியுடன் முன்வநதிருக்கவேண்டும. பணத்துக்காக ஆசைப்படுபவர்கள் அநாதையான கனகத்தை மணம் செய்துகொள்வார்களா? ஆகையால் ராகவனுக்கு மனைவியாகி காமாக்ஷியி

னிடம் அகப்பட்டுக்கொண்டு அவதிப்பட வேண்டியதாயிற்று..

காமாக்ஷிக்கு, தாய் தகப்பனற்று அநாதரவாயிருக்கும் ஓர் பெண்ணை படுத்தலாமா என்ற எண்ணம் தோன்றாமல் போனது மிக்க அதிசயமே அந்தப்பெண் மனம் எவ்வாறு தவிக்குமென்பதும் அவளுக்குத் தெரியாமல்போயிற்று ஒருவேளை தனக்கு ஓர் பெண்ணிருந்து அவளை அவள் மாமியார் படுத்தினால் தெரிந்திருக்கும். அவள் செய்த புண்ய வசத்தினால் அவளுக்கு ஒரு பெண்ணில்லாமல் போயிற்று. அல்லது தான் ஒரு மாமியாரிடமிருந்து பார்த்திருந்தால் தெரிந்திருக்கும். அவள் செய்த அத்ருஷ்ட வசத்தினால் அதுவும் இல்லாமல் போயிற்று. ஏனென்றால் அவள் புக்ககத்திற்குப் போவதற்கு முன்னமேயே அவள் மாமியாரிறந்துவிட்டாள்.

கனகத்திற்கு அவ்வளவு கொடிய மாமியாரிடமிருந்து குடித்தனம் செய்ய நேரிட்டது விஸனிக்கத் தக்கதே. அவளுக்கு ஒருநாள் போவது ஒரு யுகமாயிருந்தது. தினந்தோறும் ராகவன் ஆபீஸிலிருந்து ஸாயங்காலம வீட்டுக்கு வந்ததும் காமாக்ஷி, கனகம் அப்படிச் செய்தாள், இப்படிச் செய்தாளென்று சொல்லிக்கொடுப்பாள். ராகவனும் ஸமாசாரத்தை யொன்றும விசாரியாமலே, அகாரணமாக கனகத்தைப் போட்டு புடைத்துவிடுவான. காமாக்ஷி கனகத்திற்கு வயிறு நிறையக்கூட சாதம் போடுவதில்லை. வீட்டு வேலைகளை யெல்லாம் கனகந்தான் செய்யவேண்டும். காமாக்ஷி துரும்பை யெடுத்துப் போடமாட்டாள். வேலைதான் ஒன்றுமில்லையே, பேசாமலிருக்கக்கூடாதா? காலைநீட்டி உட்கார்ந்துகொண்டு கனகத்தை அதிகாரஞ் செய்வாள். 'இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை, யென்று வாயில் வந்தபடி யெல்லாம் திட்டுவாள். காலையில் சாப்பிட உட்கார்ந்தால் "கல்சட்டி நிறைய பழையது எடுத்துக் கொட்டிக்கொள். வாய்க்கு இன்பமாக நிறைய ஊறுகாய் மிளகாயும், நாரத்தங்காய் ஊறுகாயும் போட்டு வைத்திருக்கிறது" என்று சொல்லுவாள்.

கனகமோ அறியாதவள். வீட்டுக் காரியங்களை யெல்லாம தானே செய்யவேண்டும். காலையிலெழுந்தவுடன் சாப்பிடாவிட்டால் எப்படிக்காரியங்களைச் செய்யமுடியும்?

கனகம் தன் புக்ககத்திற்கு வந்த கொஞ்சநாள் வரையில் ராகவன் அவளிடம மிக்க அன்பாயிருந்தான். தனக்கு அதிக நாள்வரையில் கல்யாணமாகாமலிருந்து கடைசியில் ஓர் அழகான பெண் கிடைத்ததைபபற்றி ஸந்தோஷங் கொண்டான். இதையெல்லாம் பார்த்த காமாக்ஷி "நமது பிள்ளை தன் பெண்டாட்டியினமேல் மிக்க அன்பாயிருக்கிறான். இப்படியே நாம விட்டுவிட்டால் அவள்பேரில் அவன் வைத்திருக்கும் அன்பு முற்றிவிடும். பிறகு நம்மை லக்ஷ்யம் செய்ய மாட்டான். ஒரு வேளை அவள் பேச்சைக் கேட்டுக்கொண்டு நம்மை அடித்துத துரத்திவிட்டாலும் விடுவான். நமககோ இவனை விட்டால் வேறு கதி கிடையாது. போவதற்குக்கூட வேறு இடமொன்றுமில்லை", என்று எண்ணி, தனக்குத் தெரிந்த ஒரு மூலிகையைக் கொண்டு ராகவனுக்கு மருந்திட்டாள். அதன் பிறகு கொஞ்சங் கொஞ்சமாக ராகவனுக்கு கனகத்தின்மேல வெறுப்புண்டாகி கடைசியில அதிகமாய்விட்டது. அவளைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. தன் தாயாரிஷ்டப்படியே நடந்துவந்தான். அவள் பேச்சைக் கேட்டுக்கொண்டு கனகத்தை நன்றாக அடித்துவிடுவான்.

கனகம் பொறுமைசாலி யானதால் தனக்குப் போவதற்கு வேறு இடமில்லாமல் கதியற்றிருப்பதை நன்கு அறிந்து, தன் விதியை நொந்துகொண்டு அவர்களிடம் ஆக்ஞைகளுக்கெல்லாம உள்பட்டு தவறாது நடந்துவந்தாள். சில ஸமயங்களில அவள், தன தாய் தந்தையரிருக்கும் பக்ஷத்தில் அப்படி தான் கஷ்டப்படப பார்த்

திருப்பார்களா? அனாதையாய் விட்டோமே யென்று நினைத்துக்கொண்டு கண்ணீர் விட்டழுவாள். தானே தன் குறைகளையெல்லாம் ஒவ்வொன்றாக நினைத்துக்கொள்வாள். "ஐயோ, நான் என் மாமியாரிடத்தில் மிக்க மரியாதையாக நடந்துகொள்கிறேன். என்னை ஏன் அவள் கண்ணில் காணவொட்டாமல் கரிக்கிறாளோ தெரியவில்லையே? அவள் கண்ணுக்கு நான் எதைப்போல் காணப்படுகிறேனோ? நான் எந்தக் காரியங்களை எவ்விதமாகச் செய்தாலும் சண்டைக்கு வருகிறாள். அவளுக்கு என்னை வைத்துக் கொண்டு குடித்தனஞ்செய்ய இஷ்டமில்லையோ என்னமோ! அப்படியானால் வேறொருத்தியை தன் பிள்ளைக்குக் கல்யாணம்செய்து, அவளையாவது என்னைப்போல் படுத்தாமல் வைத்துக் கொள்ளட்டுமே. நான் அவர்களிருவருக்கும் ஊழியம் செய்துகொண்டிருக்கிறேன். என்னை அவர்கள் இதைவிட வருத்தினாலும் நான் அவர்கள் நன்மையைத்தான் கோருவேன். இப்பொழுது மாத்ரமென்ன. நான் ஒரு வேலைக்காரிக்கும் கீழாகத்தான் மதிக்கப்பட்டிருக்கிறேன். என்னைப்பற்றி தன் பிள்ளையினிடம் ஏன் அபாண்டமாகப் பொய்சொல்லி அடிவாங்கி வைக்கிறாளோ தெரியவில்லையே? அரிசி, பருப்பைக்காணோம், இவள்தான் எடுத்து விற்றுவிட்டாளென்கிறாளே. அப்படி யென்றைக்காவது எனக்கு வழக்கமுண்டா? இரண்டுமாதமாக வருவாரும், போவாரும் ஜாஸ்தியல்லவா? அதையவள் கவனிக்காமல் நான் எடுத்து விற்றேனென்று பார்த்ததுபோல் நிச்சயமாகச் சொல்லிவிடுகிறாளே! எண்ணெய் ஆடி இன்னும் 20 நாளாகவில்லை; அதற்குள் குடம் உருண்டுவிட்டதென்று திட்டுகிறாளே. எண்ணெய் ஆடி மூன்று மாதமாகப்போகிறதே, எண்ணையை யெடுத்து நான் குடித்துவிட்டேனா என்ன? தலைக்குத் தேய்த்துக்கொளவதும் ஒருமாதத்திற் கொரு தடவைதான். என்னாலேயா எண்ணெயெல்லாம் செலவழிந்துவிட்டது. பொழுதுபோய் பொழுது விடிந்தால் யாராவது பத்துப்பேர்கள் சாப்பாட்டுக்கு வந்தபடியே யிருக்கிறார்கள். அவர்களுக்கு எட்டுவிதம் உடனே சமயல் செய்யவேண்டும். பண்டங்கள் செலவாகாமல் எப்படிச் சமைப்பது? அவர்களுக்கு சிப்பல்தட்டு, சிப்பல் தட்டாக வடாமும், அப்பளாமுமாகப் போடவில்லையா? எண்ணெய் ஆய்விட்டதென்றால் எப்படி ஆகாமலிருக்கும்? எந்தக் காரணத்தைக் கொண்டாவது என்னை திட்டிக்கொண்டேயிருக்கிறாள். அவளுக்கு அதே தொழிலாய்விட்டது. நான் என்னாலானமட்டும் செட்டாகத்தான் குடித்தனம் செய்கிறேன். நான் என்ன மற்றவர்களைப்போல் அது இல்லை, இது இல்லை என்கிறேனா? விதம் விதமாக பட்டுப்புடவைகள் வேண்டுமென்கிறேனா? மூன்றுரூபாய் மதுரைப்புடவை அகப்படுவதே கஷ்டமாயிருக்கிறது. இப்பொழுது எனக்கு ஒரே புடவைதான் இருக்கிறது; அதுவும்கிழிந்துவிட்டது. தைத்துக் கட்டிக்கொள்ளுகிறேன். 'புடவை கிழிந்துவிட்டது. வேறே வாங்கிக்கொடுங்கள்' என்று கேட்கிறேனா? வாங்கிக்கொடுத்தால் கட்டிக்கொள்ளப் போகிறேன். இல்லாவிட்டால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கப்போகிறேன். இந்தவர்ஷத்திற்குள் அவளானாலும் நாலு நார்மடி வாங்கிக் கட்டிக் கிழித்துவிட்டாள். மற்றவர்களைப்போல் 'அவள் அந்த நகை போட்டுக்கொண்டிருக்கிறாள். இவள் இந்த நகை போட்டுக்கொண்டிருக்கிறாள். எனக்கு அதைப்போல் வேண்டுமே, இதைப்போல் வேண்டும், காது மூளியாயிருக்கிறது, வயிரத் தோடுவேண்டும், கையில் ஒன்றுமில்லை. தங்கக் காப்புவேண்டும்' என்று கேட்கிறேனா? அதுவும் இல்லை. பிறந்ததுபோலவே யிருக்கிறேன். 'நாம் வரும்பொழுது என்ன கொண்டுவருகிறோம்.' போகும்பொழுது என்ன கொண்டுபோகப் போகிறோமென்பதை யெண்ணிக்கொண்டு பேசாமலிருக்கிறேன். இப்படி நான் அவர்களுக்கு ஒரு கஷ்ட

மும் கொடுக்காமலிருக்கும் பொழுதே என்னை கண்ணில் காணவொட்டே னென்கிறார்களே. என்னைப்போல் இந்தவூரில் அநாதையாக யாரிருக்கிறார்கள். எனது வாழ்நாள் வ்ருதாவாய்ப் போய்விட்டது. இந்த உயிரிருந்தாலென்ன, போனாலென்ன, நான் போயாவது அவர்கள் ஸுகப்படட்டும்" என்று சொல்லிக்கொண்டே மனமுறிந்து கிணற்றில்விழுந்து சாவோமென்று போவாள். மறுபடியும் "ஐயோ இப்பொழுது கஷ்டப்படுவது போதாதா ? கிணற்றில் விழுந்து பேய் பிசாசாகப் பிறந்து அலையவேண்டுமா" என்று நினைத்துக்கொண்டு திரும்பி வந்துவிடுவாள்.

எவ்வளவுதூரம் மனம்நொந்திருக்கும் பக்ஷத்தில் கனகம் தற்கொலை செய்துகொள்ள எண்ணியிருப்பாளென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். அவள் மிக்க பொறுமை சாலியாயும், புத்தி சாலியாயும் இருந்ததனாலல்லவோ, பின் வருவதை யெண்ணி, அந்தக்கார்யத்தை செய்யக்கூடாதென்று நிறுத்திவிட்டாள். அவள் ஒரு ஸாதாரணப் பெண்ணாயிருந்திருக்கும்பக்ஷத்தில் ஒரு யோசனையுமில்லாமல் கஷ்டங்களைப் பொறுக்க முடியாமல், எங்கேயாவதுவிழுநது உயிரை மாய்த்துக்கொண் டிருப்பாளல்லவா ? காமாக்ஷி தான்செய்த அத்ருஷ்டவசத்தினால்தான் கொலை பாவத்துக்கு ஆளாகாமலிருந்தாள். ரூபத்தில் மிகுந்த கனகத்தை இவ்வாறு கஷ்டங்களுக்குள் படுத்திய கல்நெஞ்சையுடைய காமாக்ஷியினிடம் ஸுப்பலக்ஷ்மி ஸ்நேகம் வைத்தது செல்லத்தின் துரத்ருஷ்டமே யென்று சொல்லலாம்.

## VI - அத்யாயம்.

ஸுப்பலக்ஷ்மி தினந்தோறும் மத்யானம்சாப்பிட்டானதும் காமாக்ஷி வீட்டுக்குவந்து வம்பு பேசுவது வழக்கமென்று முன்னமேயேசொல்லியிருக்கிறோ மல்லவா ? அப்பொழுது ஸுப்பலக்ஷ்மி காமாட்சி வீட்டில் நடக்கும் ஒவ்வொன்றையும் பார்த்துவந்தாள். ஒருநாளிருவரும் வழக்கம்போல் பேசிக்கொண்டிருந்தபோது, காமாட்சி ஸுப்பலக்ஷ்மியைப் பார்த்து, "நீ பழைய நாளையமனுஷி, மாட்டுப்பெண்ணை வைத்துக் கொண்டு குடித்தனம் செய்யவே தெரியவில்லை. மாட்டுப் பெண்களுக்கு மாமியாரைக் கண்டால் ஸிம்மம்போ லிருக்கவேண்டாமா ? அவர்கள் கண்ணில் விரலைக்கொடுத் தாட்டவேண்டும். கொஞ்சம் இடம் கொடுத்தால் குதிரை யேற மாட்டார்களா ? எங்க கனகத்தைப் பார். என்னைக் காணும்பொழுது அவளுக்கு ஸிங்கத்தைக் காணுவதுபோலிருக்கும். ஒரு இரைச்சல்போட்டேனானால், எல்லாக் கார்யங்களையும் ஒரு நொடியில் முடித்து விடுவாள். நான் நின்ற இடத்தில் நிற்கமாட்டாள், உன் மாட்டுப்பெண்ணைப் பார். நீ கீழேஉட்கார்ந்தாயானால் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு பேசுகிறாள். ஆகா ! மாமியாருக்கு என்ன மரியாதை ! நீயும் பார்த்துக்கொண்டு பேசாமலிருக்கிறாயே. உனக்கு வெட்கமாயில்லையா ? நானாயிருக்கும் பக்ஷத்தில் அவ்விடத்திலேயே இரண்டுதுண்டாக வெட்டி மடைவாயில் வைத்துவிடுவேன். உன் மாட்டுப்பெண்ணை பார்க்கக்கூட எனக்குப் பிடிக்கவில்லை. இன்றைக்கு நாற்காலியில் உட்காருவாள், நாளைக்கு உன் தலையின்மேலேயே ஏறி உட்கார்ந்து விடுவாள். அவளைச்சொல்வதிலென்ன ப்ரயோஜனம்? நீ கொடுத்திருக்கும் இடம அவ்வளவு. மாட்டுப் பெண்களை அப்போதைக்கப்போது கொட்டுவாயில் வைத்துக்கொண்டு வரவேண்டாமா ? செல்லம் தடிபோலிருக்கும்பொழுது கார்யம் செய்ய எதற்காக மாலம் தண்டத்திற்கு பணங்கொடுத்து பரிசாரகன் வைத்திருக்கிறாய்? பெட்டைக்குட்டிக்கு பேபர் வாசிப்பென்ன ? அகம்படையான் வாங்கித் தருகிறானே, அவனைச் சொல்லு. உங்காத்தில் தினம் க்ளேயில் காபி போடுகிறாப்போலிருக்கிறது. எங்காத்தில் அந்தக் கெட்ட வழக்கமே கிடையாது. நாமெல்லாம் காபி குடித்துததான் வளர்ந்தோமா என்ன ? போனால் போகி

றது. புருஷர்களுக்கு மாத்ரம் போட்டால் போதாதா. பெட்டைக்குட்டிக்கு காபி என்ன ? நீ ஒன்றையும கவனிப்பதில்லைபோலிருக்கிறது. வீட்டில் பெரியவளென்று ஒருத்தி இருந்தால் இவைகளை யெல்லாம கவனிக்கவேண்டாமா?" என்று பரிகாஸம் செய்தாள். நாம் முன்னமேயே ஸௌப்பலக்ஷ்மிக்கு ஸ்வயபுத்திகிடையாது. கேட்பார் பேச்சைக்கேட்பவள் என்று சொல்லியிருக்கிறோமல்லவா ? காமாக்ஷி இப்படி யெல்லாம தனக்கு ஹிதம்போல் சொன்னவுடன் ஸௌப்பலக்ஷ்மி, "நமக்குவாஸ்தவமாக மாட்டுப்பெண்ணை வைத்துக்கொண்டு குடித்தனஞ் செய்யத் தெரியவில்லைபோலிருக்கிறது. அவள்மாட்டுப்பெண்ணை அடிக்கடி கண்டிக்கவேண்டுமென்றும் சொல்லுகிறாளே. அதேபோல் செய்து பார்க்கவேண்டும்" என்று மனதில் எண்ணிக்கொண்டாள். இப்படி அவள் இயற்கை குணமானது சேர்க்கை வாஸனையால் ஒருநொடியில் மாறியது.

மறுநாட் காலையில் காபி போட்டபொழுது ஸௌப்பலக்ஷ்மி துரைஸாமிக்கும, மீனம்பாளுக்கும் மாத்ரம் கொடுத்துவிட்டு செல்லத்திற்குக் கொடுக்காமலிருந்து விட்டாள். செல்லம், தன் மாமியார் ஒருவேளை மறந்திருக்கக் கூடுமென்றெண்ணி, பேசாம லிருந்துவிட்டாள். ஆனால் 12 மணிக்குமேல் செல்லத்திற்கு காபி சாப்பிடாததினால் பொறுக்கமுடியாமல் தலையை வலித்தது. ஆகையால் பரிசாரகப் பையனைக் கூப்பிட்டு கொஞ்சம் காபி போட்டுக்கொண்டு வரும்படிச் சொன்னாள். அதற்கு ஸௌப்பலக்ஷ்மி இனிமேல் செல்லத்தைக் காபி சாப்பிடக்கூடாதென்றும், பேபர், புஸ்தகம் ஒன்றும் வாசிக்கக் கூடாதென்றும் சொன்னாள். இவைகளைக்கேட்டவுடனேயே செல்லத்திற்கு பயம் பிறந்துவிட்டது. அவளுடனொன்றும் அதிகமாய்ப பேசாமல் தன் கணவன் வநதவுடன் தன் மாமியார் செய்தவைகளைச் சொலலி, அதற்கெல்லாம் காரணம் பக்கத்துவீட்டு காமாக்ஷியாகையால், அவ்விடத்தி லிருந்து உடனே கிளம்ப வேண்டுமென்று சொன்னாள். துரைஸாமியும் மறுநாளே வேறோரிடத்தில் வீடு பார்த்து குடித்தனத்தை அங்கு கிளப்பிவிட்டான். நடந்த ஸமாசாரங்களை கபடமற்ற ஸௌப்பலக்ஷ்மி காமாக்ஷியினிடம் சொல்லிவிட்டாள். அவள் "பார்த்தாயா ! நான் சொன்னது சரியாகப் போய்விட்டது. பெண்டாட்டி சொல்லைக் கேட்டுக்கொண்டு அதன்படி உடனே வீட்டை மாற்றிவிட்டான். நாளைக்கு உன்னுடன் சேர்ந்து குடித்தனம் செய்யமுடியவில்லையென்று அவனிடம் சொல்லி, உன்னையே அடித்துத் துரத்திவிடுவாள், ஜாக்ரதை," என்றாள். இதைக் கேட்டவுடன் ஸௌப்பலக்ஷ்மி மிகவும் பயந்து, ஒருவேளை தன்னை துரைஸாமியே அடித்துத் துரத்தி விடுவானோ என்றெண்ணி "என்பிள்ளை அவளிடம் மிகவும் அன்பாயிருக்கிறான், ஆகையால்தான் அவள் சொன்னபடியெல்லாம் கேட்கிறான். முதலில் அவளிடம் அவனுக்கு ஆசையேயில்லாமல் செய்துவிடவேண்டும். அது எப்படி முடியும் ?" என்று காமாக்ஷியைக் கேட்டாள். காமாக்ஷி ரகஸ்யமாக தன் பிள்ளையும முதலில் அப்படித்தானிருந்ததாகவும், தான அவனுக்கு ஓர் மூலிகையைக்கொண்டு மருந்திட்டபிறகுதான் தன்பேரில் ப்ரியமுள்ளவனானெனன்றும் சொன்னாள். ஸௌப்பலக்ஷ்மி அவளை தனக்கு அந்த மருந்தில் கொஞ்சம் கொடுக்கும்படிக்குக் கேட்டாள். காமாக்ஷி அவளிடம் உருண்டையாக ஏதோ ஒரு மருந்தைக்கொடுத்து, அதை எதிலாவது கரைத்துக் கொடுத்து விடச்சொல்லி, அது உள்ளே போனவுடன் மறுபடியும கட்டியாய் விடுமென்றும், உள்ளே அது இருக்கும் வரையில் பெண்டாட்டியினமேல் அன்பாக இருக்கமாட்டானென்றும், அந்த மருந்தின் குணம் இன்னும் இரண்டு நாளிலேயே தெரியுமென்றும சொன்னாள். ஒன்றும் தெரியாத மூடபுத்தியுள்ள ஸௌப்பலக்ஷ்மியும துரைஸாமிக்குத் தெரியாமல் அந்தமருந்தை

மறுநாள் காலையில் காபியில்கலந்து கொடுத்து விட்டாள். மருந்து கொடுத்து பதினைந்துநாள் வரையில் துரைஸாமி, செல்லத்தினிடம் முன்னிருந்ததுபோலவே ஆசையாயிருந்தான். அதற்குள் ஸௌபாக்யலக்ஷ்மி "காமாக்ஷி, இரண்டு நாளிலேயே குணம் தெரியுமென்றாளே, பதினைந்து நாள்களாயும் இன்னும் ஒன்றும்தெரியவில்லையே. ஒருவேளை பிள்ளை தன்னை அடித்துத் துரத்திவிடுவானோ" என்று எண்ணிக்கொண்டாள். ஸாதாரணமாய் ஒரு நாளிரண்டுநாளில் குணத்தைத் தெரிவிக்கும் அந்த மருந்துக்கு, துரைஸாமி செல்லத்தின்மேல் விசேஷ அன்புவைத்திருந்ததால், அதை மாற்றி தன் குணத்தைத் தெரிவிக்க பதினைந்து நாளாயிற்று. அதற்கப்புறம், மருந்தின் வேகம் கொஞ்சங் கொஞ்சமாக ஏறியது. ஒருநாள் ஆபீஸிலிருந்து வந்ததும் ஒரு காரணமுமில்லாமலே செல்லத்தை தாறுமாறாகத் திட்டினான். அப்பொழுதே செல்லம் மிகவும் பயந்துவிட்டாள். தனது மாமியார் காமாக்ஷியைக் கொண்டு ஏதாவது செய்துவிட்டாளோ என்று எண்ணினாள். "இதுவரையில் என்னை வாயால் ஒரு வார்த்தையும் சொன்னதில்லை. இன்றைக்கு காரணமே யில்லாமல் வாயில் வந்தபடியெல்லாம திட்டுகிறாரே. இது என்ன ஆச்சர்யமாயிருக்கிறதே" யென்று நினைத்தாள். தன்பேரில் ஏதாவது குற்றமிருக்கிறதோ என்று யோசித்தாள். ஒன்றும் தெரியவில்லை. தன்னை ஒரு காரணமுமில்லாமல் அடித்தாரே யென்றழுதாள். அன்று ராத்ரி சாப்பிடவில்லை. ஒருவேளை தன்னை பரிசோதிக்கிறாரோ "வென்னமோ வென்றெண்ணி நாலைந்துதினம் சும்மா இருந்தாள். அதற்குள் மருந்தின்வேகம் அதிகமாய்விட்டது. அவள்பேரில் எவ்வளவு அன்பு வைத்திருந்தானோ அவ்வளவும் வெறுப்பாக மாறியது. அவளுடன் பேசுவதேயில்லை. ஒரு நாள்காலையில் அவள் வருத்தத்துடன் தூணில் சார்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தபொழுது, அவன் மிகவும் விரைவாகவந்து, அவள் மயிரைப் பிடித்து குலுக்கி, வாசலில் தள்ளி, பிறந்தகத்திற்குப் போகச்சொல்லிவிட்டு, கதவைசாத்தி தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு விட்டான். செல்லம் திடுக்கிட்டாள். வாயைத் திறந்து ஒன்றும் சொல்லவில்லை. தன்மேல் வைத்திருந்த அன்பு எப்படித்தான் மாறிவிட்டதோ என்று ஆலோசித்தாள். ஒருவேளை தன் கணவனுக்கு பைத்யம் பிடித்து விட்டதோ என்றெண்ணினாள். இதுவரையில் செல்லம் தன் பெற்றோர்களுக்கு தன் கணவன் ஒருமாதிரியா யிருக்கிறானென்று கடிதமெழுதவில்லை. தன் கஷ்டங்களை அவர்களுக்கு எழுதினால், வருத்தப்படப்போகிறார்களே, ஒருவேளை தன் கணவன் தன்னை பரிசோதிக்கிறானோ, வென்று பேசாமலிருந்துவிட்டாள். தன்னையடித்து வாசலில் தள்ளி, கதவைச்சாத்தினதும், செல்லம் தன்னைப் பரிசோதிக்க வில்லையென்று நன்கு தெரிந்துகொண்டாள். இப்பொழுதும் செல்லம் தன் பெற்றோர்களுக்கு ஸமாசாரத்தைத் தெரியப்படுத்த இஷ்டமில்லாமல், பேசாம லிருந்துவிட்டாள். இவைகளை யறிந்த மூன்றாவது வீட்டிலிருந்த இவள் தோழி அவளைத் தன் வீட்டுக் கழைத்துவந்து சாப்பிடச்சொன்னாள். செல்லம் சாப்பிடமாட்டேனென்று சொல்லிவிட்டு அழுதுகொண்டு, கீழே படுத்துக்கொண்டுவிட்டாள். அவள் படும் கஷ்டத்தைப்பார்க்க ஸகியாத அவள் தோழி, தன் கணவனிடம் சொல்லி ஊருக்குத் தந்தி கொடுக்கச் சொன்னாள். முன் பின் ஒரு ஸமாசாரமுமில்லாமல் திடீரென்று தந்திவந்து சேர்ந்ததும், ராமநாதய்யரும், விசாலாக்ஷியும் திடுக்கிட்டு அலறிக்கொண்டு மறுரெயிலிலேயே புறப்பட்டு வந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் செல்லம் தன் வாய்விட்டு அலறி, தான் ஒன்றும் செய்யாம லிருக்கும்பொழுதே தன்னை இப்படியெல்லாம் செய்துவிட்டதாகச்சொன்னாள். செல்லம் அழுவதைப் பார்த்ததும் அவர்களுக்கு துக்-

கம் மேலிட்டது. விசாலாக்ஷி தன்னை யறியா மலே ஸௌபாக்யலக்ஷ்மியையும், துரைஸாமியையும் திட்ட ஆரம்பித்தாள். ராமநாதய்யர் மிகவும் பொறுமைசாலி யானதால், தன் வருத்தத்தை யெல்லாம் அடக்கிக்கொண்டு, செல்லத்தை அணைத்துக்கொண்டு, அவளைத் தேற்றி, தன் மனைவியினிடம "காலம்போகும்; வார்த்தை நிற்கும். வாயைக் கொட்டாதே" என்று பொறு மையாகச் சொன்னார். பிறகு, ராமநாதய்யர் தன் மாப்பிள்ளையை நேராகப் பார்க்க எண்ணி வீட்டுக்குப்போய் கதவைத தட்டினார். துரை ஸாமி உள்ளே யிருந்துகொண்டே கதவைத் திறக்கவில்லை. ராமநாதய்யர் எத்தனை நேரம் நின்றுகொண்டு கதவைததட்டினாலும் திறக்கா மையால் மன வருத்தத்துடன் செல்லத்தை அழைத்துக்கொண்டு ஊருக்கு வந்து சேர்ந்தார்.

செல்லம் அதன் பிறகு சரியாகவே சாப்பிடு வது கிடையாது. காலையில் சாப்பிட்டால் ராத்ரி சாப்பிடுவதில்லை. ராத்ரியில் சாப்பிட்டால் காலை யில் சாப்பிடுவதில்லை. ஒருவருடனும் பேசுவ தில்லை. ராத்ரியில் தூங்குவதில்லை. தன் நகை களை யெல்லாம் கழற்றி உள்ளே வைத்துவிட்டு, கந்தைத் துணியைக் கட்டிக்கொண்டாள். இப் பொழுதும் தன்னையேவெறுத்துக்கொண்டாளே ஒழிய, துரைஸாமியை ஒன்றும் சொல்லவில்லை. இப்பொழுது அவன்பேரில் முன்னைவிட நான்கு பங்கு அதிகமாக அன்புவைத்தாள். அவள் படும் துக்கங்களைப் பார்க்க ஸகியாத பொறுமையுடைய அவள் தகப்பனார் கண்ணில் நீர் ததும்ப அவ ளிடம் சென்று, "என் கண்ணே! அன்புக்கு அழிவில்லை. நீ அவனிடம் உண்மையான அன்பு வைத்திருநது, நாங்களும உன்பேரில் உண் மையான அன்பை வைத்திருக்கும் பக்ஷத்தில், அவன் இன்னும் கொஞ்ச நாளைக்கெல்லாம் உன்னை எப்படியாவது அழைத்துக் கொள்வான். உன் அன்பு இப்படியே நடுவில் அழிந்துவிடாது. மறுபடி நீங்கள் ஒன்றாய்ச் சேர்வீர்கள். இப்படிச் செய்துவிட்டானே யென்று அவனை வெறுக் காதே. கொஞ்ச நாளில் எல்லோர் மனமும் குளிரும். நீ இதை நம்பமாட்டாய். நான் சொல் வது சரியாகும் பார்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் "அன்புக்கு அழிவில்லை" என்றார்.

தன் மனைவியை அடித்துத் துரத்தினதும், துரைஸாமி தன் தாயாரின்மேல் மிக்க அன்பு டையவனாயிருந்தான். செல்லத்தைப்பற்றி மறந் தேவிட்டான். அவளைப்பற்றி நினைக்கவேயில்லை. ஸௌபாக்யலக்ஷ்மி தன்னை இனிமேல் துரைஸாமி அடித்துத் துரத்தமாட்டானென்றெண்ணி ஸந் தோஷப்பட்டாள். இப்படி கொஞ்சநாளாயிற்று. காமாக்ஷிக்கு ப்ரமாதமாகி ஜ்வரம் வந்துவிட் டது. அதற்கப்புறம் கொஞ்சங் கொஞ்சமாக கால்கைகள் வீங்கின. அந்த வீக்கத்துடனேயே இரண்டுமாதம மிகவும் கஷ்டத்துடன் படுக்கையி லேயே படுத்துக்கொண்டிருந்து பிறகு இறநது விட்டாள். ஊரிலுள்ளோரனைவரும் "காமாக்ஷி இறந்துவிட்டாள். இனிமேல் கனகத்திற்கு நல்ல காலம் பிறந்துவிட்டது. மாட்டுப் பெண்களை படுத்துபவர்கள் திடீரென்று சாவார்களா. பெண் பாவம் பொல்லாதல்லவா. காமாக்ஷியைப் பார். கால்கைகள் வீங்கி ப்ராணன் இழுத்துக்கொண்டு கிடந்தது" என்று சொன்னார்கள். அவர்கள் நினைத்தபடியே காமாக்ஷி இறந்ததும், கனகத் திற்கு நல்லகாலம் பிறந்தது. தன் தாயார் இறந்ததும் தன்னை அன்பாக ஆதரிப்பவர் வே றொருவருமில்லாததை ராகவன் கண்டு, தன் மனைவியின் மேல் கொடூரமாக விருக்கவில்லை. அநேகநாட்களாய் விட்டதினால், மருந்தும் தானா கவேமுறிந்துவிட்டது. பிறகு, இருவரும் ஒத்து வாழ்ந்தார்கள். ஸௌபாக்யலக்ஷ்மி ஜனங்கள் சொன் ன வார்த்தைகளை காதில் கேட்டதும், மிகவும் பயந்து 'நாட்டுப் பெண்ணை படுத்துபவர்கள் கால்கைகள் வீங்கி சாவார்களென்கிறார்களே. நான் துரைஸாமிக்கு காமாக்ஷியினிடம் மருந்து வாங்கிக் கொடுத்து செல்லத்தை ஆகவொட்டாம

லடித்திருக்கிறேனே. நானும் ஒருவேளை கால் கைகள் வீங்கி சீக்ரம் செத்துப்போய்விடுவேனோ என்னமோ? அப்பொழுது என் குற்றம் வெளியாய்விடுமே' என்று எண்ணி, அந்த மருந்தை மாற்றுவதற்கென்ன செய்யலாமென்று யோசித்தாள். கடைசியில் கும்பகோணத்தில் அவளுக்குத் தெரிந்த ஒரு வைத்யன் ஞாபகம் வந்தது. தன் பிள்ளையினிடம் செலவுக்குப் பணம் வாங்கிக்கொண்டு கும்பகோணம் சென்று, அவனிடம் ரகஸ்யமாக தான் செய்தவைகளை விவரமாகச்சொல்லி, மருந்தை யெடுக்கவேண்டுமென்று சொன்னாள். அந்த வைத்யன் மருந்திட்டிருப்பதை எடுப்பதில் மிகவும் கெட்டிக்காரன். அவன ஸுப்பலக்ஷ்மியின் மூடபுத்தியைப் பார்த்து வியந்து, ஏதோ கொஞ்சம் பணம் வாங்கிக்கொண்டு, இரண்டு மாத்ரைகளை அவளிடம் கொடுத்து, முற்றின தேங்காயைத் துருவிசாறு எடுத்து, மிதிபாகல் இலைச்சாறும் கொஞ்சம் சேர்த்து, அதில் அந்த மாத்லரைகளைக் கரைத்துக் கொடுத்துவிடும்படி சொன்னான். ஸுப்பலக்ஷ்மியும் ஊருக்குத் திரும்பிவந்து அபபடியே செய்தாள். அநத மாத்ரைகளைச் சாப்பிட்டதும் துரைஸாமி இரண்டு தரம் வாந்தியெடுத்தான். அவள் கொடுத்திருந்த மருந்து அப்படியே உண்டையாக வெளியேவந்து விழுந்தது. அது வெளியே வந்ததும் துரைஸாமி முன்போலானான. அவன செல்லத்தின்மேல் வைத்திருந்த முழு அன்பும் திரும்பி வநதுவிட்டது. "ஐயோ, என் அருமைச் செல்லத்தை அந்யாயமாகத் திட்டியடித்துஊருக்குஅனுப்பினேனே. எனக்கு ஏன் அவ்வித கெட்ட எண்ணம் உதித்ததோ தெரியவில்லையே" என்று அலறி, மறுரெயிலுக்கே புறப்பட்டு செல்லத்தை அழைத்துப் போக வந்தான். துரைஸாமி ரெயிலைவிட்டிறங்கி மிகவும் வேகமாய் ராமநாதய்யர் வீட்டுக்குவந்து, விசிபலகையில வருத்தத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்த செல்லத்தை ஒரே அணைப்பாக அணைத்துக்கட்டி அவள் ச்வாஸங்கூட்விடாதபடி முத்தமிட்டான். திடீரென்று தன் கணவன் வந்துதன்னை அணைத்துக்கட்டினதும் செல்லம் திடுக்கிட்டு, ஒன்றும் சொல்லாமல் அவனை ஒருதரம் தனது கண்களால் ஏறிட்டுப் பார்த்துவிட்டு, அப்படியே மயக்கமாக அவன் கையில் படுத்துக் கொண்டுவிட்டாள். ராமநாதய்யரும், விசாலாக்ஷியும தோட்டத்திலிருந்து தமது மாப்பிள்ளை உட்கார்ந்திருப்பதையும், அவனது கையில் செல்லம் சோர்ந்து விழுந்திருப்பதையும் பார்த்து நடுநடுங்கி உள்ளே ஓடிவந்தார்கள். அவர்களைக் கண்டதும், துரைஸாமி அப்படியே செல்லத்தை படுக்கவிட்டு விரைவாக ஓடி கீழே விழுந்து இருவருக்கும் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து எழுந்து நின்று, "நான் என்னை யறியாமலே செய்த கார்யங்களுக்கு என்னை மன்னிக்கவேண்டும்" என்று வணக்கமாகக் கேட்டான். ராமநாதய்யரும், "போதாத காலத்தின் விசேஷம்" என்று சொல்லிப் பேசாமலிருந்தார். மறுபடியும் துரைஸாமி, செல்லத்தினிடம் போய், அவளை அணைததுக் கட்டிக்கொண்டு "செல்லம், செல்லம்" என்று கூப்பிட்டான். அவளும் தூங்கி விழித்துக்கொண்டால்போல் ஆனந்தக் கண்ணீரொழுக எழுந்து உட்கார்ந்தாள். துரைஸாமி அவளைப் பாாத்து "உன்னை நான் இப்படியெல்லாம் செய்துவிட்டேனென்று என்பேரில் கோபித்துக்கொள்கிறாயோ, ஏதோ போதாத காலம. நமது ஆசைக்கு ஒருநாளும் அழிவு வராது, பயப்படாதே" என்று சொல்லி, சற்றுநேரம முகததோடு முகத்தை சேர்தது வைத்துக்கொண்டிருந்தான். ராமநாதய்யரும் செல்லத்தைப் பார்தது, "நான் சொன்னது சரியாய்விட்டது பார்த்தாயா. எல்லாருடைய மனமும் குளிர்ந்துவிட்டது", என்று சொல்லி பொறுமையாக "அன்புக்கும் அழிவோ" என்றார். செலலம் அப்பொழுதுதான் அன்புக்கு அழிவில்லையென்று தெரிந்துகொண்டாள்

அன்றையதினம் மாப்பிள்ளைக்கு பலமான விருந்து நடந்தது. துரைஸாமி இரண்டுநாள் லீவுக்கு எழுதிவிட்டு மாமியார் வீட்டிலிருந்து, பிறகு செல்லத்தை அழைத்துக்கொண்டு பட்டணம்போய்ச் சேர்ந்தான். ஸுப்பலக்ஷ்மி செல்லத்தை முன்னிருந்தது போலவே ஆசையாக வைத்துக் கொண்டிருந்தாள். துரைஸாமியும் செல்லமும் உடலும் உயிரும் போலவும், நகமும் சதையும் போலவும், நீரும் நிழலும் போலவும், ஒருவரை யொருவர் விட்டுப் பிரியாது வெகு காலம் ஸுகமாக வாழ்ந்தார்கள். சுபம்.

ஏ. வி. ராமஸாமி.

## EVILS OF DRINK.

BY C. S. SIVARAMAKRISHNA SARMA.

## குடியின் கேடு.

இப்பொழுது நடந்துவரும் மகா யுத்தத்தின் ஸௌகர்யத்தை நோக்கி, ரஷ்யா ராஜாங்கத்தார், யுத்தம் முடிவாகும்வரையில் தங்கள் ராஜ்யத்தில் எங்கும் சாராயம் விற்கக்கூடாதென்று உத்தரவு செய்துவிட்டார்கள். இதனால் ரஷ்யா ராஜாங்கத்தாருக்கு வர்ஷம் ஒன்றுக்கு ஸுமார் 14-கோடி ரூபாய் வருமானம் போய்விட்டது. இதைப்போல் மற்ற ராஜாங்கத்தாரும உத்தரவு செய்தால், அந்த தேசங்களுக்கும் விசேஷ நன்மையுண்டாகும. சாராயக் குடியை நிறுத்தியதால், ரஷ்யாவின் குடிகளுக்குத் தென்புக்குறைவும் இல்லை; வேலை நிறுத்தங்களும் இல்லை; கலகங்களும் இல்லை; கலகாஸ்பதமான ப்ரஸங்கங்களும் இல்லை; அதைர்யமும் உண்டாகவில்லை. மேலும் தேசமெங்கும் உத்ஸாகமும ஒற்றுமையும் உண்டாயிருக்கின்றன. இவ்வளவு நன்மையுண்டாகுமென்று மகாவிவேகிகள்கூட எதிர்பார்க்கவில்லை. ரஷ்யாதேசத்துக் குடியானவர்கள் இந்த யுத்தத்துக்கு ஆவேசத்துடன் செல்லுகிறார்கள். விவேகத்தில் உயர்ந்த வகுப்பார் இவர்களை யுததத்துக்குப் போகும்படி உதஸாகப்படுத்துகிறார்கள். ரஷ்யக் குடிகளுக்கு இந்த யுத்தம் மகா முக்யமான யுத்தம்; தோற்றால் ரஷ்யாவின் நாகரீகம் தாழ்ச்சி அடையும்; ஜயித்தால் உயர்வடையும். யுத்தத்தில் கலந்த மற்ற ராஜாங்கத்தார் கதியும் அவ்வண்ணமே. ரஷ்யாவில் எல்லா சாராயக் கடைகளையும் ஒருமாஸத்துக்கு (ஆரம்பததில்) மூடிவிட்டார்கள்; எவ்வித சாராயமும் கிடைப்பது அஸாத்யமாகிவிட்டது. ஆகையால் தெருக்களில் குடிபோதைக் காட்சியே அற்றுப்போயிற்று. சாராயம் குடிப்பதற்காக பிச்சைவாங்கும் பிச்சைக்காரர் கூட்டமும் அதோடு ஒழிந்து போயிற்று.

லண்டனில் வெளியாகும் டெய்லி நியூஸ் பத்ரிகையில் ஜட்ஜ் ரென்டௌல் (Judge Rentoul) துரை எழுதுகிறதாவது: "லார்ட் கிச்சனர் ஸௌடானில் நடந்த யுத்தத்தில், தன்சேனைக்கு சாராயம்கொடுக்காமல் நிறுத்திவிட்டார். அதைப் போலவே இந்த யுத்தத்திலும் சேனைகளுக்கு யாராவது சாராயம் வெகுமதிகொடுத்தால் அனுப்பப்படமாட்டாது என்றும் ஆஜ்ஞாபித்துவிட்டார். அட்பாரா சண்டையில், சேனைக்காக முன் அனுப்பப்பட்டிருந்த சாராயம் பூராவையும் திருப்பியடித்து விட்டதால்தான் அந்த யுத்தத்தில் ஜயம் அடைந்தார்."

லார்ட் ராபர்ட்ஸ் மதுபானவிஷயமாய்ச் சொல்லியிருப்பதாவது. "எனக்கு சாராயம் குடியாத ஒரு சேனையைக் கொடு; அதை நான் எங்கும் கொண்டுபோய் நடத்துவேன்".

லார்ட் வுல்ஸ்லி சொல்லியதாவது: "ப்ரயாணப்படுவதற்கு முந்தியும், ப்ரயாணம போகும் போதும், ப்ரயாணத்துக்குப் பிந்தியும் சேனைகளுக்கு சாராயம் கொடுப்பது நன்மையென்று பழையகாலத்தில் கொண்ட அபிப்ராயம சுத்தத் தப்பென்று எல்லா தேசத்திலும் சாஸ்த்ரவிசாரணை செய்தவர்கள் ரூபித்திருக்கிறார்கள்." டெல்லி கபீர் பட்டணத்துக்குப்போன நீண்டராத்ரி ப்ரயாணத்தில் தன் சேனைகளுக்கு சாராயம்

கொடுக்காமலே இருந்துவிட்டார். அவர் சொன்னதாவது. "யுத்தத்துக்காக இயற்றப்பட்ட நமது மஹா நவீனமான ஆயுதங்கள் எல்லாவற்றைக் காட்டிலும், சாராயக்குடியால் அதிக ஜனங்கள் கொல்லப்படுகிறார்கள்."

இப்போது இங்க்லண்டின் கப்பல் படைக்குத் தலைவராயிருந்தவரும் அட்மிரல் ஸர். ஜெ. ஆர். ஜெல்லிகோ சொல்லுவதாவது: "நேராக துப்பாக்கி சுடுகிற விஷயத்தில் மகா விசேஷமான தேர்ச்சியடைய வேண்டியதற்கு சாராயக் குடியை விலக்குவது அவசியமென்று ஒவ்வொருவர் அனுபோகத்திலும் ஏற்பட்டிருக்கிறது". துப்பாக்கி சுடும் வித்தையில் பேர்போன போதகரான காப்டன் ஒகில்வி துரை சொன்னதாவது: "துப்பாக்கி சுடும் திறமை ஸைன்யத்துக்கு ரம் சாராயம் கொடுக்க துவக்கின பின் முன்னிருந்ததைவிட 100-க்கு 30 வீதம் குறைந்து விட்டதாக நாம் பல தடவைகளில் கவனமாய் செய்த பரீக்ஷைகளால் ருசுவாகிறது. இப்படி கொடுத்த சாராயம் ஆள் ஒன்று அரைக்கால் பைண்டு* தான்."

பூசக்ரத்தின் வடமுனைக்கும் தென்முனைக்கும் ஸமுத்ர யாத்ரைசெய்த காப்டன் நான்ஸன், காப்டன் ஷாகில்டன் துரைகள் தங்கள்கூட எவ்வித சாராயமும் கொண்டுபோகவில்லை. இவ்விருவரும் சாராயம் தங்கள் ஜனங்களுக்கு மரணபத்தான வஸ்துவென்றும உறுதிகூறியிருக்கிறார்கள்.

நமது சக்ரவர்த்தியின் வைத்யராகிய ஸர் தாமஸ் பார்லோ என்பவரும் இன்னும் நான்கு சிறந்த வைத்யர்களும் சேர்ந்து கையொப்பமிட்டு யுத்தத்தில் உழைக்கும் ஸைன்யங்களுக்கு ஒரு மகஜர் எழுதியனுப்பியிருக்கிறார்கள். அதில் சாராயக்குடியால் விளையும் மகா கொடிய சரீர பாதைகளைப்பற்றி எடுத்துக்கூறி அடியில்கண்ட படி முடித்திருக்கிறார்கள்.

"ஆகையால், உங்களுடைய ஸொந்த ஆரோக்யத்தையும் திறமையையும் நோக்கியே நீங்கள் இந்த யுத்தம் முடிவுபெறும் காலம் வரையிலாவது, சாராயத்தை அடியோடு முற்றிலும் நீக்கிவிடவேண்டுமாய் எங்களால் கூடிய வலுவுடன் வற்புறுத்தி கேட்டுக்கொள்ளுகிறோம்."

1899, 1900 இந்த வருஷங்களில் யுத்தத்தில் சேருவதற்கு முன்வந்த 11,000 போர்வழிகளில் 8,000 போர்வழிகள் துப்பாக்கியை சுமக்கவும், ராணுவ தேகப்பயிற்சியின் (டிரில்) களைப்பைத் தாங்கவும் அசக்தர்களாய் இருந்ததாக ஒரு ப்ரஸித்தமான க்ரந்தத்தில்வரைந்து வெளியிடப்பட்ட பிறகு, இங்க்லீஷ் ராஜாங்கத்தார் விழித்துக்கொண்டு இந்த விஷயத்தை நன்கு விசாரித்து அறிக்கை செய்யும்பொருட்டு ஒரு ஸபையை (கமிட்டி) நியமித்தார்கள். இந்த ஸபையார் இதை வெகுகாலம் பரிசீலனை செய்து இதில் விசேஷ அனுபோகமும் ஞானமுமுள்ள 68 ஸாக்ஷிகளை விசாரித்து "சாராயக் குடியானது தேகத்தை பலஹீனப்படுத்துவதற்கு மகா ப்ரபலமான காரணமாகவும், மரணஸ்பதமான கருவியாகவும் இருப்பதாக" ராஜாங்கத்தாருக்கு அறிக்கைப்பத்ரம் எழுதியனுப்பினார்கள்.

இதைப் பார்த்தாவது உயர்ந்த நாகரீகமென்று சாராயக்குடியைப் பழகும் நமது இந்திய ஸகோதரர்களுக்கு புத்திவந்து இந்த துர் அப்யாஸத்தை அடியோடு விட்டுவிடுவார்களென்று நம்புகிறேன்.

ஸி. எஸ். சிவராமக்ருஷ்ண சர்மா.

* பைண்ட் என்பது பட்டணம் படியால் கால்படிக்கு சற்று மேலாகும்.

---

ஐரோப்பிய யுத்தம்.

400-பக்கங்கள், 100-போட்டோ படங்கள் விலை 1-8-0

ஜனுபிமானி சந்தாதாரர்களுக்கு ரூபா 1-0-0

ஜி. எ. வைத்யாராமன் அண்ட் கம்பெனி,

மதராஸ்.

## INFECTIVE DISEASES OF CATTLE.
## கால்நடைகளின் தொற்று வ்யாதிகள்.

தொற்று வ்யாதியென்பது வ்யாதிகண்டவர்களுடைய வ்யாதிப்பட்ட பாகமோ அல்லது அவர்களின் மலஜலங்களோ அல்லது ச்வாஸமோ, மற்றவர்களின் மேல் படுவதாலும், வேறு வழிகளாலும், பரவும் வ்யாதியாகும். இந்த மாதிரி வ்யாதி கண்ட கால் நடைகளுக்குப் பரிகாரம் செய்கையில், வ்யாதிப்பட்ட கால்நடைகளுக்கு வைத்யம் செய்வதோடு, அந்த வ்யாதி மற்ற கால் நடைகளிடத்துப் பரவாம லிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது அவச்யமாகும். இந்தியாவில கால் நடைகளுக்கு உண்டாகும் தொற்று வ்யாதிகளில் முக்கியமானவை; வெக்கை, தொண்டை அடைப்பான், சப்பைநோய், கோமாரி ஆகிய இவைகளாகும். இவைகளில் சில, கால்நடைகளுக்கே யன்றி வேறு ம்ருகங்களுக்கும், மனிதர்களுக்கும் உண்டாவதுண்டு. அநேக ஸமயங்களில் கால்நடைகளுக்கு அம்மை குத்துவதாலும், இனுகுலேஷன் செய்வதாலும் வ்யாதி வராமல் தடுக்கவும், வந்த வ்யாதியை ஸ்வஸ்தம் செய்யவும் கூடும். இப்படி கால்நடைகளுக்கு அம்மை குத்தியும இனுகுலேஷன் செய்துமிருந்தால், சில ஸமயங்களில் வ்யாதிப்பட்ட கால்நடைகளை தனியான இடங்களில் கட்டிவைக்க வேண்டியதில்லை. இந்த வ்யாதிகள் வ்யாதிப்பட்ட ஒரு மாட்டின்மேல் வேறு மாடுகள் படுவதாலும், வேலையாட்களாலும், வைக்கோல் புல் முதலிய தீவனப் பொருள்களாலும், ஜலத்தாலும், வேறு காரணங்களாலும் பரவக்கூடும். மேலும் வ்யாதி க்ருமிகள் மாட்டுக்கொட்டில்கள், தண்ணீர்த் தொட்டிகள், மாட்டுக்கொட்டில்களில் உள்ள குப்பைகள் ஆகிய இவைகளில் இருக்கக்கூடும். தொற்றுவ்யாதி பரவுவதற்கு இத்தனை மார்க்கங்கள் இருக்கின்றனவென்பதை கால்நடை வைத்திருப்பவர்கள் நன்றாய் கவனித்தால, வ்யாதிகள பரவாமலிருக்கச் செய்ய ரொம்ப ஜாக்ரதையாயிருக்க வேண்டுமென்பது நன்கு புலப்படும். தொற்று வ்யாதிகள் பரவாமலிருக்க பின்வரும் விஷயங்களை கவனித்தல் அவச்யமாகும்.

1. புதிதாய் வாங்கின எல்லா ம்ருகங்களையும் தொற்று வ்யாதிகளுள்ளனவாகவே எண்ணி, குறைந்தது 10 நாள்களுக்காவது அவைகளை மற்ற கால்நடைகளுடன் சேர்க்காமல் தனியாய்க் கட்டி வைக்க வேண்டும். அப்படித் தனிமையாய் வைத்திருக்கும் காலத்தில், அவைகளைப் பராமரிக்க தனிவேலையாட்கள் நியமிப்பதோடு அவைகளின் தேகத்தை, பூச்சிசள், அழுக்கு இராதபடி, நன்றாய்க் கழுவிவிட வேண்டும். கால்நடைகளை அடிக்கடி பரிசோதிக்க வேண்டும். எதற்காவது காய்ச்சலோ, வேறு வ்யாதியின் குறிகளோ தோன்றினுல், இன்னும் அதிக நாள்கள் அவைகளை தனியாய்க் கட்டிவைத்து, எந்த நோய் கண்டதோ அதற்குப் பரிகாரம் உடனே தேடவேண்டும்.

2. கால்நடைகளை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டு போகையில் அவைகளை இதர கால்நடைகளோடு சேர்ந்திருக்கும்படி விடக்கூடாது, மற்ற கால்நடைகள் இருந்த மந்தைமுதலிய இடங்களில் அவைகளை நிறுத்தவும் கூடாது. கால்நடைகளை வேறிடங்களுக்கு ஓட்டிப்போகும்போதும், சந்தை அல்லது கால்நடைக் காட்சிகளுக்கு ஓட்டிக்கொண்டு போகும்போதும் தொற்று வ்யாதிகள் பரவக் கூடுமாதலால், அப்படி வேறிடங்களுக்கு ஓட்டிப்போன கால் நடைகளை புதிதாய் வாங்கினவைகளாகப் பாவித்து தனியாய்க் கட்டி வைக்க வேண்டும்.

3. கால்நடைகளுக்கு ஏதாவது வ்யாதி தோன்றினுல், அது தொற்று வ்யாதியல்ல வென்று வயக்தமாகத் தெரியும் வரையில், அந்த வ்யாதி தொற்று வ்யாதியென்றே எண்ணவேண்

டும். எந்த ம்ருகத்துக்காவது வ்யாதி உண்டாகிவிட்டால், மற்ற ம்ருகங்களுக்கும் வ்யாதிக் குறிகள் தோன்றியிருக்கின்றனவா என்று நன்றாய்ப் பார்க்க வேண்டியது அவச்யமாகும்.

4. ஒரு வ்யாதி தொற்று வ்யாதியென்று தெரிந்தவுடன், நோய் கண்ட ப்ராணிகளையும், ஸௌக்யமான ப்ராணிகளையும், தனியாகப் பிரித்துவிடவேண்டும். ரொம்ப நல்ல வழியென்னவென்றால் தொற்று வ்யாதியுள்ள இடத்தைக் காலிசெய்துவிட்டு, வெவ்வேறு இடங்களில் சில கால்நடைகளாகப் பிரித்துவைப்பது நல்லது. இது முடியாவிட்டால், தேக ஸௌக்யமான மாடுகளை வேறு நல்ல இடங்களுக்குக் கொண்டுபோய்க் கட்டி, நோய் கண்டவைகளை தொற்று வ்யாதியுள்ள இடத்திலேயே விட்டுவிடவேண்டும். பார்வைக்கு ஸௌக்யமுள்ளவைகளாய்க் காணும் ம்ருகங்களில் சில, ஒரு ஸமயம் வ்யாதியால் பீடிக்கப்பட்டு வ்யாதியின் விஷம் முற்றிக்கொண்டிருக்கும் நிலைமையில் இருக்கக்கூடும். அதாவது அவைகளின் தேகத்தில் வ்யாதி க்ருமிகள் இருக்கக்கூடும்; வ்யாதி முற்றாததால், வ்யாதியின் குறிகள் தெரியாமலிருக்கக்கூடும். அப்படிப்பட்ட ப்ராணிகளை ஸந்தேகமான உருப்படிகளாக எண்ணவேண்டும். இப்படி ஸந்தேகித்த ப்ராணிகளை சில சிறு கூட்டங்களாகப் பிரித்து, தனியான இடங்களில் கட்டிவைக்கவேண்டும். ஏனென்றால் வ்யாதி பிடித்து, முற்றி அதன் குறிகள் வெளிப்படையாகத் தெரிவதற்கு எவ்வளவு நாள்கள் செல்லுமோ அவ்வளவு நாள்கள் கழிந்ததும், வ்யாதியில்லாத ப்ராணிகளைத் தனியாகப் பிரித்துவிடுவது ஸுலபம். வ்யாதி முற்றி அதன் லக்ஷணங்களைக் காட்ட செல்லுங்காலம் ஒவ்வொரு வ்யாதிக்கும் வித்யாஸமாயிருக்கும். அதை யறிந்து, கடைசியாக ஒரு கால்நடைத் தொகுதியில் ஒரு வ்யாதி தோன்றினபிறகு, அது வெளிப்படையாகத் தோன்றுவதற்கு எத்தனை நாளாகுமோ அத்தனை நாள் சென்றபிறகும் அந்தக் கால்நடைத் தொகுதியில் ஒன்றுக்காவது அந்த வ்யாதி தோன்றாமலிருந்தால்தான், அந்தத் தொகுதியிலுள்ள மாடுகளை ஸுகதேகமுள்ளவைகளென்று எண்ணவேண்டும். எந்தத் தொகுதியிலாவது ஒரு மாடு காய்ச்சலாயிருப்பதாகவோ, தீனி தின்னாமலிருப்பதாகவோ தெரிந்தால், அதை அந்தத் தொகுதியிலிருந்து பிரித்து, அது நோய் கண்டதென்று தெரிந்தால், நோய் கண்ட ப்ராணிகளோடு சேர்த்துவிடவேண்டும். அப்படிப்பட்ட மாடு கட்டியிருந்த இடத்தை தொத்து வ்யாதியுள்ள இடமென்று தெரிந்துகொள்ளவேண்டும். அவ்விடங்களில் செருப்பு அல்லது ஜோடுகள் போட்டுக்கொண்டு நடந்தால், அவைகளுக்கு வ்யாதி பரவாமல் தடுக்கும் மருந்து போட்டு சுத்தி செய்யவேண்டும்.

5. ம்ருகங்களை வைத்திருக்கும் ஆஸ்பத்ரிகளுக்கும், வேறு இடங்களுக்கும் எவரும் ஜாக்ரதையோடுதான் போய்வரவேண்டும். கூடுமானால் கால்நடைகள் கட்டியிருக்கும் இடங்களைச் சுற்றி வேலி போடவேண்டும். வ்யாதி கண்ட மாடுகள் உள்ள இடங்களிலிருக்கும் வேலையாட்கள் அவ்விடங்களை விட்டு வெளியில் வரக்கூடாது. அவஸர கார்யங்களுக்காக அவர்கள் வெளியே போகவேண்டியிருந்தால், அவர்கள் தேகத்தையும் துணிகளையும் க்ருமிஹரமான மருந்தால் சுத்தம் செய்யவேண்டும். வேலையாட்களுக்கும் ம்ருகங்களுக்கும் கொண்டுபோகும் ஆகாரத்தைத் திரும்பவும் அந்த இடத்திலிருந்து கொண்டுவரக்கூடாது. வ்யாதியைப் பரவச்செய்யக்கூடிய நாய், கோழி முதலியவைகளை கால்நடை இருக்கும இடங்களுக்குள் விடக்கூடாது.

உபயோகமற்ற காய்ந்த குப்பை செத்தைகளை அங்கேயே எரித்துவிடவேண்டும். சாணம், ஈரமான குப்பை முதலியவைகளை கால்நடைகள் கட்டியுள்ள இடத்திலேயே குழிதோண்டிப் புதைத்து விடவேண்டும்.

6. மாடுகள் கட்டியுள்ள இடங்களை ரொம்ப சுத்தியாய் வைத்திருக்கவேண்டும். க்ருமிஹாரமான மருந்துகளை தாராளமா யுபயோகிக்க வேண்டும்.

7. வ்யாதிகண்ட, அல்லது, வ்யாதியுள்ளதாக ஸந்தேகித்த மாடுகளை அடிக்கடி கழுவி சுத்தம் செய்து கூடுமானமட்டும் ஸௌக்யமான நிலைமையில் வைத்திருக்கவேண்டும் லகுவாய் ஜீர்ணமாகக் கூடியதும், மலத்தைக் கட்டாததுமான தீனிபோடவேண்டும். கஷ்டப்பட்டு ஜீரணமாகும் தீனியைப்போடுவது கால்நடைகள் இறந்து போவதற்கிடமாகும்.

8. வ்யாதியுள்ள இடங்களில் ஒரு மாட்டுக்கு வ்யாதி கண்டபிறகு ஒரு மாஸம்வரையில் வேறு மாடுகளுக்கு வ்யாதி காணவிட்டால், அவைகளை வ்யாதியற்ற ம்ருகங்கள் என்று எண்ணி நல்ல இடங்களுக்கு ஓட்டிக் கொண்டு போகலாம். அப்பொழுது நூறு பாகம் ஜலத்தில் ஒரு பாகம் கார்பாலிக் ஆஸிட், பினைல் போன்ற மருந்தைக் கலந்து, அந்த ஜலத்தால் கால்நடைகளைக் குளிப்பாட்டி சுத்தம் செய்யவேண்டும்.

9. தொற்று வ்யாதியால் இறந்த ம்ருகங்களின் பிணங்களை அவ்விடத்திலே முழுவதையும் எரித்துவிட வேண்டும் அதற்குப் போதுமான விறகு கிடைக்காவிட்டால், பூமியில் பள்ளம் தோண்டி பிணத்தைப்போட்டு மேலே சுண்ணும்புக் கற்களைப்போட்டு அதற்கு மேல் குறைந்தது 4-அடி மண்போட்டு மூடவேண்டும். இதற்குத் தகுந்தபடி குழியை ஆழமாய்த் தோண்ட வேண்டும். தொற்று வ்யாதியால் இறந்த ம்ருகங்களின் தோலை உரித்தெடுக்கக் கூடாது. யாராவது தோலுக்காக குழியை வெட்டிப் பிணத்தை யெடுத்துவிடக் கூடுமென்று தோன்றினல், ம்ருகத்தைப் புதைக்குமுன் யாவரும் அறியும்படி அதன் தோலை ஒன்றுக்கும உதவாதபடி கெடுத்துவிட வேண்டும். ஆனல் அப்படிச் செய்யும் போது அதன் ரத்தத்தை கீழே சிந்தவிடக் கூடாது.

10. தொத்து வ்யாதிகண்ட இடத்தில் உள்ள கொட்டில் முதலியவைகளில் புதிதாக மாடுகள் கட்டவேண்டுமானல், அந்த இடங்களை க்ருமிஹாரமான மருந்துகளால் சுத்தம் செய்யவேண்டும். கொட்டில்களின் சுவர்களையும் தரையையும் சுரண்டி ஜலம்விட்டு அலம்பி மருந்து தெளிக்க வேண்டும். சிறு கொட்டில்களை சுத்தம் செய்வது கஷ்டமாகையால் அவைகளைக் கொளுத்தி விடுவதே நல்லது. கார்பாலிக் ஆஸிட்டை கொதிக்கும் ஜலத்தில் கலந்து க்ருமிஹாரமாக உபயோகிக்கலாம். சுண்ணும்பு ஜலத்தை சுவர்களிலும் பூமியிலும் அதிகமாக உபயோகிக்க வேண்டும்.

11. வ்யாதி கண்ட ம்ருகங்களுக்கு உபயோகித்த ஜேணம் முதலியவைகளையும் மருந்து போட்டு சுத்தம் செய்யவேண்டும். நன்றாய் சுத்தம் செய்ய முடியாத ஸாமான்களாயிருந்தால் அவைகளை எரித்து விடுவதே நல்லது.

## THE RAMZAN.

BY MUHAMMAD MUSTAFA.

## ரம்ஸான்.

ரம்ஸான் மாதத்து முதல் பிறையை பெரியோர்கள், சிறியோர்கள், மவுல்வி, உலமாக்கள் முதலிய இஸ்லாம்மனவர்கள் மிக்க ஆவலுடன் பார்ப்பார்கள். கூட்டம் கூட்டமாய் மாளிகை மேலும், மேடு முதலிய விடங்களின்மேலும் ஏறிப்பார்த்துக்கொண்டிருப்பது பார்ப்போர்க்கு கண்காட்சியாக தோன்றுகிறது. பல ஹிந்து கனவான்களும் ஆனந்தமாய் புதுப்பிறையைப் பார்த்து களிப்படைவார்கள். இந்தப் பிறையைப் பார்த்ததும் பெருநாள் ஆரம்பித்த தென்று, உலகமெங்கும் முஹமமதியர்கள் மகிழ்ச்சியடைகிருர்கள். மேகத்தால பிறை தெரியாவிட்டால், பார்த்த விடங்களிலிருந்து பலவிடங்களுக்கு தந்திகிடைக்கிறது.

**ரம்ஸான் மேலான மாஸம்.**—இஸ்லாம் மார்க்கத்தின் ஐந்துபெரிய தூண்களில் முப்பது நாள் நோன்பிருப்பது ஒன்று. (இஸ்லாம் மதத்தின் ஐந்து முக்யமான அம்சங்கள் வருமாறு. முதலாவது ஈமான் கொள்ளுதல்: அதாவது நம்மைப் படைத்தவர் ஒருவரென்றும், அவரையே வணங்க வேண்டுமென்றும், (நபிநாயகம் முஹம்மத் முஸ்தபா ரசூலே சல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) தூதர் என்றும் மனதில் உறுதி செய்து அமல் செய்ய வேண்டியது. இரண்டாவது தினந்தோறும ஆண்டவனை முக்யமாய் 5-நேரங்களில் வணங்கவேண்டும்.

மூன்றாவது ரம்ஸான் மாஸத்தில் நோன்பிருப்பதும, நான்காவது ஜகாத்து அதாவது தானம் செய்வதும், ஐந்தாவது மெக்கா யாத்ரை செய்வதுமே.

ஒருசந்தி எல்லோர் பேரிலும் கடமையாக ஏற்பட்டிருக்கிறது. சிறியோர்கள் வாலிப வயதை யடைந்திருக்கவேண்டும்.

*ரம்ஸான் என்பதற்கு 'பொசுக்கு' என்பது என்பது பொருள். "செய்தபாவத்தைத் தொலைத்தல் என்றர்த்தம்." குர் ஆன் ஷரீபில் சொல்லி யிருக்கிற ப்ரகாரம் நோன்பு எல்லோர் பேரிலும் ஏற்பட்டுள்ளது. அரேபியன் ப்ராபெட் (நபிநாயகம் முஹம்மத் முஸ்தபா ரசூலே சல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள்) "இந்த மாஸத்தில் ஸ்வர்க்கத்தின் கதவு திறந்தும், நரகத்தின் கதவு மூடியும், பேய்கள் கட்டியும், போடப்படும்" என்றும் சொல்லி யிருக்கிறார்.

நோன்பு வைப்பதனால் என்ன ப்ரயோஜனம் என்று சிலர் யோசிப்பார்கள். எந்த ஜாதியிலும் ஒரு சந்தியிருப்பது வழக்கமே. இதன்பலன் எல்லோருக்கும் தெரிந்தவையே. தமிழ் மாஸங்களைப்போல் முஹம்மதிய மாஸங்களில் கோடைகாலம், மாரிகாலம் சரியாய் நேரிடுவதில்லை. கோடைகாலத்தில் வெயிலதிகமாகவும, நாள் நீடித்து யிருந்த போதிலும், தாகத்திற்காக, நோன்பாளிகள் ஒரு துளியாகிலும் குடிக்கக் கூடாது இவ்வளவு கஷ்டமாக இருப்பதனால் பலன் என்ன என்று சிலர் சொல்லக்கூடும்.

நோன்பு இருப்பதனால் பசிக்கொடுமை இன்னதென்று அறியலாம். கல்மன முள்ளவர்களும் ஏழைகளின் பசிக்கொடுமைகளை அறிந்து அன்னதானம் செய்ய மனங் கொள்ளுவார்கள். இரண்டாவது தீயதொழில், தீய எண்ணம், உலகத்தின் ஆசை இவைகளை விட்டு விலக்கி வைக்கிறது. மூன்றாவது நன்மைகளை ஸம்பாதிக்க இதுவே காலமாகிறது.

வ்யாதியஸ்தர்களுக்கும, ப்ரயாணிகளுக்கும், கர்ப்பஸ்த்ரிக்கும, பாலூட்டும் பெண்களுக்கும் நோன்பு மன்னிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் வ்யாதியஸ்தர்களும், ப்ரயாணிகளும் மறுபடி வைக்க வேண்டியது கடனாகிறது. சோம்பேரியாய் எவராகிலும் விட்டுவிட்டால், பலநாள் வரைக்கும் ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டியது.

**இந்த மாஸத்தில் தொழும் விதம்.**—மஸ்ஜிதுகளை பலவர்ண விளக்குகளைக் கொண்டும், பூக்களைக்கொண்டும், வாஸனை த்ரவ்யங்களைக்கொண்டும் அலங்கரிக்கிறார்கள். வழக்கத்தைபபோல் தினந்தோறும் தொழுவதுடன் இஷாவுக்குப் பின்னிட்டு அதாவது கடைசித் தொழுகைக்குப் பிறகு இருபது றகா அததுகளை*தொழவேண்டும. தனவான்கள், தனவான்கள் ஏழைகள் பலர் ஒன்றுக்கூடி ஸமமாய் ஒருவருக்கொருவர் பக்கத்தில் நின்று கடவுளை த்யானிப்பார்கள். வேதப் புஸ்தகம் (குர்ஆன் ஷரீப்) முழுதும் வாய்ப்பாடமாய் செய்த ஹாபித்† அவர்களைக் கொண்டு தினந்தோறும், குர்ஆன் ஷரீப் 30-பா

* கடவுளை வணங்குவதில், குனிந்தும, உட்கார்ந்து, இருப்பதும, பலவழியாய் ஆண்டவனை வணங்குவ, தற்கு ஒரு 'ரகா அத்து' என்று பெயர்.

† 'ஹாபீத' என்பது குர் ஆர் ஷரீபு முழுவதையும் வாய்ப்பாடம் செய்தவர்களின் பெயர்,

சத்தில் இரண்டுமூன்று பாகங்களைக் கொண்டு ஓதுவார்கள். பெரியோர்களும், சிறியோர்களும் வேதப் புஸ்தகத்தை வாசித்த வண்ணமாகவே மஸ்ஜிதி லிருப்பார்கள். ரம்ஸானின் 27-வது நோன்பு பெருநாளாகிறது. இந்தநாள் இரவுக்கு லைலதுல்கதர் என்று சொல்லப்படும். இன்றிரவும் மருகம், மாடு, மரம், செடி, முதலியவைகள் கடவுளை வணங்குவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றிரவு பெரிய மஸ்ஜிதுகளைப் பார்க்க நன்றாயிருக்கும். பல ஹிந்தக் கனவான்களும் வெகுதூரத்திலிருந்து வந்து மகிழ்ச்சியடைகிறார்கள். இன்றிரவு ஒருவரும் நித்திரைக்குப் போகாமல், ஒரே எண்ணத்துடன் கடவுளை வணங்குவார்கள். பலர் ஏழைகளுக்கு அன்னதானமும், பலர் உடைகளையும், மறுநாள் கொடுப்பார்கள். இந்த மாஸத்தில் வரவு செலவு கணக்கைப் பார்த்து, ஜகாத்து பிச்சைக் கொடுக்க வேண்டியது பணமுள்ளவர்களுக்குக் கடமையாக ஏற்பட்டபடியால், அவர்கள் ஏழைகளுக்கும், முடம், குருடு முதலியவர்களுக்கும் தானம் கொடுப்பார்கள்.

ஹிந்துக்களில் குழந்தைகளையும், தீராத வ்யாதிஸ்தர்களையும், சூன்யம் முதலிய பல கஷ்டங்களிலிருந்து நிவர்த்திப்பதற்காக இந்தமாஸத்தில் திரள்திரளாய் மஸ்ஜிதுக்கு அழைத்துவருகிறார்கள். பெரியோர்களும், குரு முதலியவர்களும் பாடம்போட்டு வந்தவர்களை அனுப்புகிறார்கள். இந்த மாஸத்தின் பெருமை ஹிந்துக்களுக்கும் தெரிந்திருக்கிறது. இவ்விதமாய் இம்மாஸமெல்லாம் நடந்து, மறுமாஸம் முதல் பிறையைப் பார்த்து எல்லோரும் ஒரு சந்தியைவிட்டு, ஈதுகாஹ் அதாவது பண்டிகைநாளில் கடவுளை வணங்கக் கட்டப்பட்ட மஸ்ஜிதுக்களில், எல்லோரும், உயர்ந்த துணிகளுடன், கூடியிருப்பது பார்க்கத்தக்கது.

போகும்போதும் வரும்போதும் வேதத்தை எல்லோரும் ஓதி வருவார்கள். ஈதுகாவில் எல்லோரும் தொழுததும் ஏழைகளுக்கு தானம் கொடுத்து வீடு திரும்பிவருவார்கள். சிறியோர்கள் பெரியோர்களையும், இஷ்டக்காரர்களையும் கண்டு நல்வாக்குப்பெற்று இந்நாளை மிக்க ஆனந்தமாய் கழிப்பார்கள்.

முகம்மது முஸ்டாபா.

## INDIAN INDUSTRIAL COMMISSION.
## இந்திய கைத்தொழில் கமிஷன்.

இந்தியாவில் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வது விஷயமாக இன்னின்ன செய்யலாமென்பதைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்காக ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பதைப்பற்றி நமது நேயர்கள் அறிவார்கள். இப்போது அந்தக் கமிட்டியார் என்னமாதிரியில் பரிசீலனை செய்வார்கள் என்பதைப்பற்றி ஒரு குறிப்பு எழுதி ப்ரசுரம் செய்திருக்கிறார்கள்.

இந்தியாவில் கைத்தொழில்களுக்குக் கிடைக்கக்கூடிய மூலப்பொருள்கள், தேர்ந்த வேலைகள் செய்வதற்கு ஜனங்கள் தகுதியானவர்களா என்பது, தேசத்தில் உத்தேசமாய்க் கிடைக்கக்கூடிய பண ஸௌகர்யம் ஆகிய இவைகளைப்பற்றி ஏற்கனவேயுள்ள தகவல்கள், இந்தியாவில் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய ஸௌகர்யங்களும் இடமும் இருக்கின்றனவென்பதைக் காட்டப் போதுமானவையாயிருக்கின்றன. இந்த ரொம்ப முக்யமான ஸித்தாந்தத்தை மேற்படி கமிட்டியார் கைத்தொழில் ஸம்பந்தமான விஷயங்களை தீர விசாரித்து நிர்ணயித்துக்கொண்டு, பின்வரும் நோக்கங்கள் நிறைவேறுவதற்காக இன்ன கார்யங்கள் செய்ய வேண்டுமென்பதை தெரிவிப்பார்கள்.

1. யாதொரு தொழில்களிலும் உபயோகப்படாமல் கிடக்கும் மூலதனத்தை தொழில்களில் உபயோகப்படும்படி செய்வது.

2. ஜனங்களுக்குத் தொழில்கள் கற்றுக்கொடுத்து, தொழிலாளிகள் அதிகமாக ஆகும்படி செய்தல்.

3. மூலப்பொருள்களை கைத்தொழில்களில் உபயோகிப்பதற்கு அவைகள் ஏற்றவையா என்பதைப் பரீக்ஷிக்கவும், கைத்தொழில்முறைகளை சீர்திருத்தவும் வேண்டி, சாஸ்த்ர ஆராய்ச்சி நடத்துவது.

4. அவ்விதம ஆராய்ச்சி செய்வதால் கிடைக்கும் விஷயங்களையும், இதர தேசங்களின் அனுபோகத்திலிருந்து கிடைக்கும் விஷயங்களையும் ப்ரசுரம் செய்தல்.

5. கைத்தொழில்களுக்குப் பண உதவி செய்வதற்கும், தொழில் சாலைகளில் செய்த பண்டங்களை விற்பனை செய்வதற்கும் வேண்டிய ஸாதனங்களை விருத்திசெய்தல்.

ஷை கமிட்டியார் கவர்ன்மெண்ட் தஸ்தாவேஜிகளைப் பார்வையிட்டதோடு அநேக அதிகாரிகளோடு கலந்துபேசினதில், இன்னின்ன ப்ரச்னைகள் கமிஷனுடைய யோசனைக்கு வரக்கூடுமென்பதை ஒருவாறு நிர்ணயித்து அவைகளை மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

மாகாண கவர்ன்மெண்டுகள் அவைகளைப்பற்றி ஆலோசித்து அதிகப்படியாக ஏதாவது ப்ரச்னைகளைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்றாவது, அல்லது கீழே குறிப்பிட்டிருக்கும் ப்ரச்னைகளை வேறுவிதமாக மாற்றவேண்டு மென்றாவது, அவ்விதம் செய்து அனுப்பலாம். மாகாண கவர்ன்மெண்டுகளிடமிருந்து பதில்கள் கிடைத்தவுடன் ஷை கமிட்டியார் இன்னின்னவிடத்தில் சுற்றுப்ரயாணம் செய்வதென்பதை நிர்ணயிப்பதோடு, கமிட்டிமுன் ஸாக்ஷி சொல்ல வருகிறவர்களுக்கு உதவியாக கேள்விகள் தயாரித்துக்கொடுப்பார்கள்.

கமிட்டியார் அடுத்த அக்டோபர் மாஸத்தில் மீட்டிங்குகூடி பரிசீலனை செய்யத் தொடங்குவார்கள். அதற்குப் பிறகு கூடிய சீக்ரத்தில் மாகாணங்களில் சுற்றுப்ரயாணம செய்து, ஒரு கக்ஷியிலும் சேராத ஸாக்ஷிகளையும், அந்தந்த ப்ரதேசங்களிலுள்ள கமிட்டிகள், வேறு ஸ்தாபனங்கள் ஆகிய இவைகளையும், விசாரித்தும், நடந்துவரும் கைத்தொழில்களை நேரில் பார்வையிட்டும் வருவார்கள்.

கமிஷனுக்கு பரிசீலனை செய்ய அதிக காலமில்லாமையால் ஏற்கனவே கைத்தொழில் டிரெக்டரோ, ஆலோசனைசொல்லும்போர்டோ(ஸபையோ) இல்லாத மாகாணங்களில், பற்பல வகுப்பாருக்கும் ப்ரதிநிதிகள் உள்ளதாக ஒரு கமிட்டி உடனே நியமித்தால் ஸௌகர்யமாயிருக்குமென்று தெரிவிக்கிறார்கள். முடியுமானால் ஒரு ஸர்க்கார் உத்யோகஸ்தரை அந்தக் கமிட்டிக்கு உதவியாக நியமிக்கலாம். இதுதமாதிரி சில மாகாணங்கள் ஏற்கனவே செய்திருக்கின்றன.

இப்போது பலர் பல ப்ரச்னைகளைப்பற்றிப் பொதுப்படையாகப் பேசிவருகிறார்கள். அவைகளை பொதுப்படையாக இருக்காமல் வ்யக்தமாக இருக்கும்படி, உதாரணமாக ஒரு குறிப்பிட்ட தொழில் அல்லது நிலைமையில் என்ன செய்ய வேண்டுமென்பதுபோல இருக்கும்படி ப்ரச்னைகளை அமைப்பது மாகாணக கமிட்டிகளின் கடமையாகும்.

இன்னும் அந்தக் கமிட்டிகள் செய்யவேண்டியவை யாவன: புதிதாகக் கைத்தொழில்கள் ஸ்தாபிக்க, அந்தந்த ப்ரதேசத்தில் கிடைக்கக்கூடியவும், அந்தந்தத் தொழில்களுக்கு ஏற்றவையுமான மூலப்பொருள்களைப்பற்றி ஒரு ஜாப்தாவும், இதே நோக்கத்துடன் உதவி மூலப்பொருள்களாகவோ, முக்யமான மூலப்பொருள்களாகவோ இதர தேசங்களிலிருந்து தருவிக்கக்கூடிய மூலப்பொருளகளின் ஜாப்தாவும தயாரிக்கவேண்டும், இந்த விஷயங்களையும, கமிட்டிகளுக்குக் கிடைக்கக்கூடிய வேறு விஷயங்களையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு, அந்தந்த மாகாணத்தின் நிலைமைகளை உத்தேசிக்கையில்

ஆதரிக்கத் தகுந்தவைகள் என்று தோன்றுகிற கைத்தொழில்களுக்கு ஒரு ஜாப்தா தயார் செய்யவேண்டும். இந்த ஜாப்தாவில் ஏற்கனவே பரீக்ஷித்துப்பார்த்த தொழில்களையும் புது தொழில்களையும சேர்த்துக் கொள்ள வேண்டும். அதோடு இன்ன தொழில்கள் நன்ருய், லாபகரமாய், நடந்துவருகின்றன வென்றும், அல்லது இன்ன தொழில்களை ஸ்தாபித்தால் நன்ருய் நடந்து வருமென்றும் குறிப்பிட வேண்டும்.

ஸமீபத்தில் ஏதாவது தொழில்கள் நின்று போயிருந்தால் அவைகள் நின்று போனதற்குக் காரணமென்ன வென்பதைப்பற்றி ஸாங்கோபாங்கமாகவும், அவச்யமானல் ரகஸ்ய மாகவும் ஆராய்ச்சி செய்யவேண்டும், இப்படிச் செய்தால் தொழில்கள் நின்று போனதின் காரணங்களை கமிஷனுக்குத் தெரிவிக்கலாம். மேலும் யாரை ஸாக்ஷிகளாக விசாரிக்கலா மென்பதையும் கமிஷனுக்குத் தெரிவிக்கவேண்டும்.

ஷெ கமிஷன் சுற்றுப் ப்ரயாணம் செய்யும் போது ஒவ்வொரு மாகாணத்திலும் பின்வருமாறு வேலை செய்வதாக உத்தேசித்திருக்கிருர்கள்.

(1) ஸாக்ஷிகளை விசாரித்தல் (2) ஸௌகர்யபட்டால், சில கைத்தொழில் சாலைகளையும், கைத்தொழில் நடக்கும் ஸ்தலங்களையும் போய்ப் பார்வையிடுதல், (3) பிறகு, கமிஷன் மெம்பர்களும், மாகாணக் கமிட்டியாரும கைத்தொழில் ஆராய்ச்சி விஷயமாய்க்கலந்து பேசுதல்.

இனி கைத்தொழில் கமிட்டியார் கவனிக்கப் போகும் விஷயங்களை சுருக்கிச்சொலலுகிறோம்.

**கைத்தொழில் டிபார்ட்மேண்டுகள்.**—சில மாகாணங்களில் கைத்தொழில் டிபார்ட்மெண்டுகளும் கைத்தொழில் விஷயங்களை கவனிக்க போர்டுகளும் ஏற்பட்டிருக்கின்றன. வேறு சில மாகாணங்களில அப்படிப்பட்ட டிபார்ட்மெண்டுகள் ஏற்படுத்த யோசித்துக் கொண்டிருக்கிருர்கள். கைத்தறி நெசவுபோன்ற வீட்டுத் தொழில்களை அபிவ்ருத்தி செய்யவும், ஏதாவது தொழிலில்சாஸ்த்ர ஆராய்ச்சிகளை அனுஸரித்து சீர்திருத்தங்கள் செய்ய அந்தந்த ப்ரதேசங்களின் நிலைமை இடங்கொடுக்காமலிருந்து, அந்தத் தொழிலில் அபிவ்ருத்திசெய்ய வேண்டியிருந்தா லதற்காகவும், கைத்தொழில் டிபார்ட்மெண்டுகள் ஏற்படுத்துவது நன்மைதரக் கூடியது. ஆனல் சாஸ்த்ர விஷயங்கள் அதிகமாய்க் கவனிக்கப்படும் பெரிய கைத்தொழில்களை கவனிக்க இந்தியா முழுவதுக்கும் ஒரு கைத்தொழில் டிபார்ட்மெண்ட் ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கலாம். உதாரணமாக (1) விவஸாயம், உலோகங்கள் தயார்செய்யும் வேலை, சாயவேலை, மருந்து ஆகிய இவைகள் ஸம்பந்தமான ரஸாயன சாஸ்த்ரம்; (2) தோல் ஸம்பந்தமான கைத்தொழில்கள் (3) கண்ணடி செய்தல்; (4) சர்க்கரை செய்யும் தொழில்கள்; (5) கடுதாசி செய்தல்; (6) எண்ணெய் விதைகள் ஸம்பந்தமான கைத்தொழில்கள் ஆகிய இவைகளை கவனிக்க இந்தியா முழுவதுக்குமாக ஒரு இம்பீரியல் கைத்தொழில் டிபார்ட்மெண்ட் ஸ்தாபிக்கலாமென்று சிலர் சொல்லுகிறார்கள்.

மேலேசொன்னபடி இம்பீரியல் கைத்தொழில் டிபார்ட்மெண்ட் ஸ்தாபிக்க வேண்டுமா; அப்படியானல் எந்த நோக்கத்துடன் ஸ்தாபிக்க வேண்டும்; அதன் அமைப்பு அதிகாரங்கள் என்ன; மாகாண கைத்தொழில் டிபார்ட்மெண்டுகளின் அமைப்பு எப்படியிருக்கவேண்டும்; ஒவ்வொரு மாகாணத்திலும் கைத்தொழில் விஷயங்களைப்பற்றி கவனிக்க உதயோகஸ்தர்களல்லாத மெம்பர்கள் சேர்ந்த கைத்தொழில கமிட்டிகள் ஏற்படுத்த வேண்டுமா; இம்பீரியல் டிபார்ட்மெண்டுக்கும் மாகாண டிபார்ட்மெண்டுக்கும் என்ன ஸம்பந்தம் இருக்க வேண்டியது என்பவைகளைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டியிருக்கும்.

(இன்னும் வரும்.)

# REVIEW OF THE PRESS.

# பத்ரிகை ஆராய்ச்சி.

## A NEW METHOD OF CULTIVATION.

## சாகுபடியில் ஒரு புது முறை

நெல்பயிர் அறுவடையான பிறகு அடிகட்டைகளில் சில துளிர்ப்பதுண்டு. இவைகளை மாடுகள் மேய்ந்து விடாதபடி பாதுகாத்துவந்தால், அவைகளில் ஒன்றிரண்டு கதிர்வாங்கி கொஞ்சம் நெல் கிடைக்கும். இது எங்குமஸாதாரணமானது. ஆனால் சைதாப்பேட்டைதாலூகாவில் சிறுகளத்தூர் க்ராமத்தில் பெருங்கார் என்ற நெல்லைப் பயிரிட்டு அறுவடை செய்த பிறகு, அடிக்கட்டைகளைத் தக்கபடி ஜலம் பாய்ச்சுதல், களையெடுத்தல் முதலியவை செய்து பாதுகாத்து வந்தால், முதல் அறுவடையில எவ்வளவு மாஸூல் கிடைத்ததோ, அவ்வளவு மாஸூல் அடிககட்டை துளிர்த்து வளர்ந்த பயிரிலும் கிடைக்கிறதாம். இவ்விதம் 'கிருஷிகன்' பத்ரிகை எழுதுகிறது.

ஷை க்ராமத்தில் நெல் பயிர்களுககு செய்யும் உழுதல், பசுந்தாளுரு அல்லது ஆடுமாடுகளின் எருப்போடுதல் முதலிய செய்நேர்த்திகளை செய்து டிஸம்பர்மீ 20வுக்கு மேல் ஜனவரிமீ 10உக்குள் விதைக்கிறார்கள். மேற்படி விதையை நாற்றுவிட்டு நடுவதானால் வழக்கப்ரகாரம் நாற்றங்கால் தயார்செய்து டிசம்பர் மீ 10வு முதல் 15வுக்குள் நாற்றுவிட்டு டிசம்பர்மீ 20வுக்கு மேல் 30வுக்குள் நட்டுதீர்க்கிறார்கள் விதைத்த பயிரானால 30 நாளைக்கு மேல் 40 நாளைக்குள்ளும், நடுகைப் பயிரானால், 20 நாளைககுமேல் 30 நாளைகுள்ளும் களைபறிக்கிறார்கள். மேலேகண்ட தேதிக்குப் பின்னால் விதைததாலும நடுகை நட்டாலும பயிர் பச்சையாய்ப் போகும. அதாவது வளர்ந்துகொண்டே போகுமலலது அநேக மாதங்களாயினும் கதிர்வாங்காது மேலும் மேகாற்றிலும் அகபபட்டு பயிரழிவடையாகும். மேற்சொன்ன இருதிறப பயிர்களும் நான்கு அல்லது 4½ மாதங்களில் அறுவடைககு லாயக்காகும். இது ஸாதாரணமாய் எல்லாரும் செய்யும் பயிர்.

இதைப் பயிர் அறுவடையான பின் ஸுமார் 10 நாட்களுக்குத தண்ணீர் கட்டாமலிருக்க வேண்டும. தண்ணீர் பாய்ந்தாலும் விசேஷ கெடுதியொன்றுமில்லை. அறுவடையான 10 நாட்களானபின் ஸாதாரண நெல் பயிருக்குத தண்ணீர கட்டிககொண்டு வருவதைப போல் ஜலம் பாய்ச்சி வருகிறார்கள். ஜலம் பாய்ச்ச ஆரம்பித்த முப்பது அல்லது நாற்பது நாட்களுக் கப்பால் அதாவது அறுவடையான நாற்பது நாட்களுக்கு மேல் 50 நாட்களுக் குள்ளாக ஸாதாரண நாட்டேர்க்கட்டைக் கலப்பையால் ஒரு சால் உழுகிறார்கள். உழுத ஒருவாரத்திற்கு மேல் களை எடுக்கிறார்கள். பிறகும் வழக்கப் பிரகாரம் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு வர வேண்டும். முதல் பயிர் அறுவடையானதுபோலவே நாலுமுதல் 4½ மாதத்தில் இந்த இரண்டாவது பயிரும அறுவடையாவதோடு, முதல் பயிரில் எவ்வளவு மாஸூல் கிடைத்ததோ அவ்வளவு மாஸூல் இந்த பயிரிலும் கிடைக்கிறது. இந்தப் பயிருக்குத தண்ணீர் கட்டிவருவதும், கட்டைக் கலப்பைகொண்டு ஒரு சால் உழுவதும, ஒரு களைபறிப்பதும் தான் செலவு. இதற்கு எருப்போடுமே வழக்கமே கிடையாது. இவ்வளவு குறைந்த செலவில் சரியான பூரா மாஸூல் அகப்படுவது ஓர் சிறந்த முறையல்லவா?

ஜலவஸதியுள்ள மிராசுதார்கள் இந்த நெல்லைப் பயிரிட்டால் இரண்டு பங்கு மாஸூல் அடையலாம். பெருங்கார்விதை வேண்டியவர்கள் பாங்கிப்பேட்டையிலுள்ள மத்ய இலாகா அஸிஸ்டெண்ட் விவஸாய டிரெக்டர் மிஸ்டர் ஜே செல்வரெங்கராஜு அவர்களுக்கு எழுதினால் அவர் வாங்கி அனுப்பக் கூடும். அல்லது சென்னை 'கிருஷிகன்' பத்ராதிபருக்கும் எழுதிப பெற்றுக்கொள்ளலாம்.

## SASTRAS ON WATER.

## ஜலத்தைப் பற்றி சாஸ்த்ரங்கள் சொல்வன.

ஜலமானது மனிதர்களுக்கு முக்யமானவைகளுள் ஒன்றாதலாலும, அது பல கார்யங்களிலும் உபயோகப் படுவதாலும், அது கெட்டதாயிராதபடி நாம் பார்த்துக் கொள்ளவேண்டியது அவச்யமாகும். நமது முன்னோர்களாகிய ரிஷிகள் இதுவிஷயமாக சில விதிகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அந்த விதிகளைத் தொகுத்து 'வித்தியாபாநு' வில் ஒரு வ்யாஸம் வெளிவந்திருக்கிறது.

வஸிஷ்டர்.—சுத்தமான ஜலம் அவச்யமாதலாலும், போகிற இடங்களிலெல்லாம் நல்ல ஜலம் கிடைப்பது நிச்சயமில்லாததனாலும், ப்ராமணன் வெளியே

போகும்போது ஒரு பாத்ரத்தில் தீர்த்தம் கொண்டு போகவேண்டும்.

**போதாயனர்.**—கால்களைக் கழுவிக் கொள்ளாமல் குளம் முதலான ஜலாசயங்களில் இறங்கக் கூடாது ஜலத்திலிருக்கும்போது வஸ்த்ரங்களைத் துவைக்கக் கூடாது; சௌசம் செய்துகொள்ளக்கூடாது. ஜலத்தை வடிகட்டி சுத்திசெய்து குடிக்கவேண்டும். வெளியே போகும்பொழுது ப்ராமணன் ஒரு பாத்ரத்தில் தீர்த்தம் எடுத்துக்கொண்டு போகவேண்டும.

**விஷ்ணுஸ்ம்ருதி.**—மயிர் முதலான அசுத்தமான வஸ்துக்களோடு கூடி ஓட்டமில்லாமலிருக்கிற ஜலம் அசுததமானது. ப்ராணிகள் விழுந்து இறந்துபோன கிணற்றின் ஜலத்தை யெல்லாம் இறைத்து அப்புறப் படுத்தவேண்டும்.

**மனுஸ்ம்ருதி.**—நீரில் ஜல மலபாதைகளைத் தீர்த்துக் கொள்கிறவனுக்கு ப்ராயச்சித்தம் ஏற்பட்டிருககிறது. சுத்தமான ஜலம் என்பது சுத்தமான பூமியில் சேகரிக் கப்பட்டதா யிருக்கவேண்டும்; அது சரியான வாஸனை, ருசி, நிறம் ஆகிய இவைகளுடன் கூடி, அசுத்தமான வஸ்துக்களின் ஸம்ஸர்க்கமில்லாததா யிருக்கவேண்டும். மலம், மூத்ரம், எச்சில், அழுக்குத்துணி, அழுக்கு வஸ் துக்கள், விஷம் ஆகிய இவைகளை நீரில் போடக் கூடாது.

**யஜுர்வேத ஆரண்யகம்.**—ஜலத்தில் வாயைக் கொப்புளிக்கக் கூடாது ஜலமல பாதைகளை ஜலத்தில் தீர்த்துக் கொள்ளக்கூடாது. ரத்தம் மயிர், நகம், அஸ்தி (எலும்பு), சாமபல், அழுக்கு வஸ்த்ரங்கள் ஆகிய இவைகளை ஜலத்தில் போடக்கூடாது.

**யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி.**—எழுவிதமான ஜலங்களைக் குடிக்கக் கூடாது. அவையாவன:—(1) மற்றவர்கள் காய்ச்சிய நீர், (2) தரையோடிருக்கும நீர், (3) கலங் கின அழுக்கு நீர், (4) துர்காற்றம் வீசுகிற நீர், (5) மண் கலங்கிய நீர், (6) உப்பு நீர், (7) குமிழிகளெழும்பும் நீர். கைகால் கழுவினபின் பாக்கியிருககும் நீர், சௌசம் செய்துகொண்டபின் பாக்கியுள்ள நீர், மற்றவர்கள் குடித்து மிகுந்த நீர், வண்ணான் துறைக்குப பக்கத்தி லிருக்கும் நீர்; சண்டாளர், கசாப்புககாரர், சக்கிலியா முதலான ஹீனஜாதியார் ஸ்நாநம் செய்த நீர், பஹிஷ் டையான ஸ்திரீகள், சாதீட்டுக கொண்டவாகள் ஆகிய இவர்கள் ஸ்நானம்செய்த இடத்திலிருக்கும் நீர்—ஆகிய இவைகளை யெல்லாம் மற்றவர்கள் உபயோகிககக் கூடாது.

**சதபத ப்ராம்மணம்.**—கண்வலி, தலையில் வ்யாதி, காதில் வ்யாதி, காக்காய வலிபபு, க்ஷயரோகம், குஷ் டம், பெரிய அம்மை, வயிற்றுககழிச்சல், வாந்திபேதி முதலான தொறறு வ்யாதிகள் ஆகிய இவைகளை யுடைய ஜனஙகள் ஸ்நாநம் செய்த ஜலத்தில் மற்றவர் கள் ஸ்நானம செய்யக்கூடாது.

**ராமாயணம்.**—ஓடுகிற ஜலத்தைக கெடுப்பதற்காக அதில் விஷத்தைப போடுவது எவ்வளவு பாபமோ அவ்வளவு பாபம் ராமரைக் காட்டுக்கு அனுபப ஸம்ம தித்தவன் மீது இருக்கட்டும் என்று பரதர் சொல்லு கிறார். (இதனால் குடிக்கிற ஜலத்தைக் கெடுப்பது பெரிய பாபமென்று அந்தக் காலத்தில் நினைத்திருந் தார்களென்பது விளங்குகின்றது.)

**பாகவதம்.**—சுத்தமான 'துணியினால்' வடிகட்டிச் சுத்திசெய்த ஜலத்தைத் தவிர வேறு ஜலத்தைக் குடிக்கக கூடாதென்று உத்தவகீதையில் க்ருஷ்ண னுக்கு உத்தவர் உபதேசித்திருக்கிறார்.

## INSTRUCTIONS TO TEACHERS.

### உபாத்யாயர்களுக்குப் போதனைகள்.

1. வகுபபில் நீர் உம்முடைய இடத்திலேயே இரும். பிள்ளைகள் தத்தம் இடத்தில் இருக்கட்டும். போர்டு பலகையின் வலது பக்கமே உபாத்திக்குத் தகுந்த இடம. 2. வகுப்பில் போதிக்கும்போது போ தனையைத்தவிர வேறொன்றையும் எந்தக் காரணத்தி னாலும் கவனியாதேயும். 3. வகுபபு முழுவதையும் கவனித்துப் போதியும்.

4. நீர் யோசனையுடன் கட்டளையிடும்; கட்டளைக் குப் பிள்ளைகள் கீழ்ப்படியாததற்கு முன் வேறு வேலை யைத் தொடங்காதேயும்.

5 உமக்கு ஸரியெனத் தோற்றினவாறு வகுப்பின் அபிவ்ருத்திக்கு எந்தக் கார்யமுஞ் செய்யும். சிறுவாக ளுடைய பல யோசனையைக் கேளாதேயும் 6. உமக் குக் கோபம் வரவொட்டாமல் காத்துக கொள் ளும். பிள்ளைகளைத் தண்டிகக நேரிட்டால், அவர் களுக்கு நலம் உண்டாகும்பொருட்டே யல்லாமல் உம் முடைய கோபம் ஆறும்பொருட்டாகத் தண்டியாதே யும். 7. சிறுவர்களிடம் அடிக்கடி குற்றம் கண்டு பிடியாதேயும். 8. சிறுவர்களை அடிக்கடி தண்டியா தேயும். 9. ஒரே ஸமயத்தில் அநேகரைத் தண்டிக்க வேண்டாம்.

# Departmental Notes.
# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.
## வித்யாவிஷயம்.

### Primary Education in India.

இந்தியாவில் ப்ரைமரிக் கல்வி.—1915-ம் வர்ஷத்தில் இந்தியாவெங்கும் கவர்ன்மெண்டாலும் ஸ்தலஸ்வயஆட்சி ஸபைகளாலும், கவர்ன்மெண்டின் ஆதரவு பெற்ற இதரர்களாலும் நடத்தப்பட்ட ப்ரைமரி பாடசாலைகளின் தொகையும் அவைகளில் வாசித்த குழந்தைகளின் தொகையும் பின் வருமாறு:—

| மாகாணம் | பாட்சாலைகள். | பையன்களின் தொகை. |
|---|---|---|
| சென்னை | 26917 | 1144,606 |
| பம்பாய் | 9929 | 594,728 |
| வங்காளம் | 28335 | 1047,262 |
| ஐக்யமாகாணம் | 10513 | 576,547 |
| பஞ்சாப் | 4552 | 228,561 |
| பர்மா | 6029 | 209,605 |
| பேஹார் | 21339 | 601,764 |
| மத்யமாகாணம் | 3727 | 271,886 |
| அஸ்ஸாம் | 3926 | 175,414 |
| வடமேற்கு மாகாணம் | 539 | 25,643 |
| குடகு | 94 | 6,662 |
| டெல்லி | 82 | 5,181 |
| மொத்தம் | 116012 | 488,019 |

பெண் பாடசாலைகள்.—மொத்த ப்ரைமரி பெண் பாடசாலைகளின் தொகை 15-ஆயிரத்து 70; அவைகளில் வாசிக்கும் பெண்களின் தொகை 9-லக்ஷத்து 29-ஆயிரத்து 846;

கவர்ன்மெண்டின் ஆதரவு பெறாமல் இந்தியாவெங்கும் நடத்தப்படும் பையன்கள் பாடசாலையின் தொகை 36-ஆயிரத்து 367 ஆகும்; பெண் பாடசாலைகளின் தொகை 2002; இப்பாடசாலைகளிலுள்ள பையன்கள் தொகையும், பெண்களின்தொகையும் முறையே 559, 466; 72, 375.

### A School for Small Industries.

சிறு தொழில்களை கற்றுக்கொடுக்க ஒரு பாடசாலை.—மைஸூர் பொருளாதார கான்பரென்ஸ் ஆதரவில் பங்களூரில் ஒரு தொழில் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதில் இங்க் (மைகள்) செய்தல், போட்டோ பிடித்தல், பாய் செய்தல், மூங்கிலால் ஸாமான்கள் செய்தல், தச்சுவேலை, விராப்புகளும், தலைமயிர் வளர்க்கும் தைலங்களும் செய்தல், தையல்வேலை, சித்ரத் தையல்வேலை, பொம்மை செய்தல், ஆகிய இவைகள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. இவைகளில் பாய் வேலை, மூங்கில் வேலை, தையல் வேலை, பொம்மைசெய்யும் வேலை ஆகிய இவைகள் சிறுவர் சிறுமியர் ஆகிய இருபாலாருக்கும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. ஸரிகை, சித்ரத்தையல் வேலைகள் பெண்களுக்கு மாத்ரம் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. மற்றவைகள் பிள்ளைகளுக்கு மாத்ரம் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. சிறு கைத்தொழில்களில் தேர்ந்தவரான மிஸ்டர் கே. ஆர். சக்ரவர்த்தி என்பவர் இந்தப் பள்ளிக்கூடத்தை மேற்பார்வை செய்கிறார். இந்தப் பள்ளிக்கூடத்தில் பையன்களுக்கு காலையிலும் மாலையிலும் கற்றுக்கொடுக்கிறார்கள். பெண்களுக்குக் காலையில் மாத்ரம் கற்றுக்கொடுக்கிறார்கள். பெண்களுக்குக் கற்றுக்கொடுக்கப்படும் பாடங்களை குடும்ப ஸ்த்ரீகள் பகற்காலத்தில் 2-மணி முதல் 4-மணிக்குள் போய் கற்றுக்கொள்ளலாம்.

இந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசிக்க சம்பளம் கொடுக்கவேண்டியதில்லை. பெண்களுக்குக் கற்றுக்கொடுக்கும் பாடங்களில் சிலவற்றை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க ஸ்த்ரீ உபாத்யாயர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற பாடங்களையும் கற்றுக்கொடுக்க ஸ்த்ரீ உபாத்யாயர்கள் கிடைத்தவுடன் நியமிக்கப்படுவார்கள்.

### Pay of Elementary School Teachers.

எலிமெண்டரி ஸ்கூல் உபாத்யாயர்களின் சம்பளம்.—போர்டு ஸ்கூல்களில் அமர்ந்துள்ள பயிற்சி பெறாத எலிமெண்டரி ஸ்கூல் உபாத்யாயர்களுக்கு இதுவரையில் 8-ரூபாய்க்குக் குறைவாகவே சம்பளம் கொடுக்கப்பட்டுவந்தது. பயிற்சிபெற்ற உபாத்யாயர்கள் வேண்டிய அளவு அகப்படாததால், எலிமெண்டரி ஸ்கூல்களில் இன்னும் பயிற்சி பெறாத உபாத்யாயர்களை நியமிக்கவேண்டியிருப்பதாலும், ரொம்ப குறைவான சம்பளத்துக்கு உபாத்யாயர்கள் கிடைப்பது கஷ்டமாயிருப்பதாலும், இனிமேல் போர்டு ஸ்கூல்களில் பயிற்சி பெறாத உபாத்யாயர்களுக்கு 8-ரூபாய் சம்பளம் கொடுக்கலாமென்று கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### The Author of Jnanavetti.

ஞானவெட்டியை இயற்றினவர்.—ஸித்தர்கள் வெளியிட்டுள்ள தத்வ விஷயங்களில் சிலவற்றைப் பற்றியும் மருத்துவ விஷயங்களில் சிலவற்றைப் பற்றியும் கூறும் ஞானவெட்டி யென்னும் நூல் ஞானமார்க்கத்தை யடைய விரும்பும் சிலரால் பெரிதும் போற்றப்பட்டு வருகிறது. இந்த நூலைச் செய்தவர் திருக்குறளியற்றிய திருவள்ளுவர் என்று பலர் எண்ணுகிறார்கள். ஆனால் திருக்குறளியற்றியவர் வேறு, ஞானவெட்டி எழுதியவர் வேறு என்று 'செந்தமி' ழில் ஒருவர் எழுதுகிறார். ஏனெனில் ஞானவெட்டியின் ஆசிரியர், ஸம்ஸ்கருதத்திலும் தமிழிலும் ஒப்பற்ற புலமையும் தெய்வத்தன்மையும் பொருந்திய சில பெரியோர்களையும் அவர்கள் இயற்றிய நூல்களையும் தமது 'ஞானவெட்டி' யில் வாய்கூசாது நிந்தித்திருக்கிறார். அச்செய்யுள்களில் முக்யமானவை, ஞானவெட்டி 579 வது, 600 வது செய்யுள்களாகும்.

இந்த செய்யுள்களில் வ்யாஸ பாரதம், கம்ப ராமாயணம், அதிவீரராம பாண்டியன் இயற்றிய நைடதம், தேவார திருவாசகங்கள், ஆகிய இவைகள் மக்கட்குப் பயன் படாத பொய்நூல்களென்று சொல்லப்பட்டிருக்கின்றன. கம்பர் 12-ம் நூற்றாண்டிலும், அதிவீரராம பாண்டியன் 16-ம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்களென்று ஆராய்ச்சிகளால் தெரியவருகிறது. திருக்குறள் இயற்றிய திருவள்ளுவர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராவார். ஆகவே கம்பரும் அதிவீரராமபாண்டியரும் திருவள்ளுவருக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டவராகவேண்டும்.

ஆகவே, மேற்கூறிய கம்பரையும் அதிவீரராமபாண்டியரையும் தமது ஞானவெட்டியில் நிந்தித்து எழுதியிருக்கும் ஆசிரியர் திருக்குறளியற்றிய திருவள்ளுவர் என்று சொல்லுதல் சிறிதும் பொருந்தாது. மேலும் திருக்குறளியற்றிய திருவள்ளுவர் வேறு நூல்கள் செய்திருந்தால், திருக்குறளின் உரையாசிரியராகிய பரிமேலழகர், அந்த வேறு நூல்களிலிருந்து ஆங்காங்கு மேற்கோள்கள் எடுத்துக்காட்டியிருப்பார். அப்படிப் பரிமேலழகர் செய்யாமையால் திருக்குறளியற்றிய திருவள்ளுவர் மேற்படி திருக்குறளைத் தவிர வேறு நூல்களை இயற்றவில்லையென்பது நன்கு விளங்கும்.

மேலும் ஞானவெட்டியின் ஆசிரியர் தமது நூலில் சில பெரியோர்களை நிந்தித்திருப்பதுபோல் வேதத்தையும் அந்தணரையும் நிந்தித்திருக்கிறார். குறளாசிரியர் அவ்விதம் செய்யாரென்பது மேற்படி குறளில் வேதத்தையும் அந்தணரையும் ச்லாகித்து எழுதியிருப்பதால் நன்குவிளங்கும். இன்னும் ஞானவெட்டியில் எத்தனையோ செய்யுள்கள் பிழையுடையனவாகவிருக்கின்றன.

மேற்படி 'செந்தமிழ்' நிருபர் இவ்விதம் எழுதிவிட்டு, ஞானவெட்டியானது ஸுமார் 200 வருஷங்களுக்கு முன் தஞ்சாவூர் ஜில்லாவில் கடல் சார்ந்த ப்ரதேசத்தில் இருந்த ஒருவரால் இயற்றப்பெற்றதென்று கூறுகிறார்.

### Sarngadara Samhita

சார்ங்கதர ஸம்ஹிதை.—தற்காலம் ஜனங்கள் ஆயுர்வேதத்தில் அதிக ச்ரத்தை காட்டி வருகிறார்கள். ஸாமான்ய ஜனங்கள் அதில் தக்க தேர்ச்சி யடைய வேண்டுமென்றால், பற்பல நூல்களை வாசிக்கவேண்டியிருக்கும். பலருக்கு இதற்கு அவகாசமிராது. இப்படிப்பட்டவர்களுக்கேற்றதாக ஒரு உயர்ந்த ஸம்ஸ்க்ருத வைத்யநூல் இப்போது ஆயுர்வேத பூஷண பண்டித எம். துரைஸாமி அய்யங்காரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியிருக்கிறது. அது சார்ங்கதர ஸம்ஹிதை என்னும் நூலே. அதன் ஆசிரியராகிய சார்ங்கதரன் சொல்லுகிறபடி, "அளவற்ற நூல்களை ஆராய்ந்தறிவதற்கான திறமையில் குன்றியவர்கள், அல்லது அதற்குத்தகுந்த நீண்ட ஆயுளைப் பெறாதவர்கள் இதுகாறும் அந்த நூல்களையும் படிப்பதில் தமது சக்தியையும் மீறி முயன்றது போதும். வைத்ய சாஸ்த்ரத்தின் ஸாரமசமனைத்தையும் இதில் சுருக்கிக் கூறியிருப்பதால், அத்தகைய விவேகிகள் சுருக்கமான இந்நூலைப் படித்தறிய முயலுவது முற்றிலும் யுக்தமாகும்." இந்த நூலில் தக்க வைத்யர்கள் செய்யக்கூடிய அரிய வைத்யமுறைகளேயன்றி, ஸாமான்ய ஜனங்களும் ஸுலபமாய்ச் செய்யக்கூடிய பல வைத்யமுறைகளும் கூறப்பட்டிருப்பதால் இது வைத்யர்களல்லாதவர்களுக்கும் ரொம்பவும் பயன்படும். இது ஸுமார் 300-பக்கங்கள் கொண்டது. மூன்று பாகங்கள் உள்ளது. முதல் பாகத்தில் வைத்ய சாஸ்த்ர ஸம்பந்தமான பொது விதிகளும் ரோகங்களின் வகைகளும், இரண்டாவது பாகத்தில் ஸ்வரஸம், கஷாயம், கல்கம், சூர்ணம், லேஹ்யம், குளிகை, தைலம் முதலிய ஔஷதங்கள் தயாரிக்கும் விதமும், அவை எந்தெந்த ரோகங்களில் உபயோகப்படுமென்பதும், மூன்றாவது பாகத்தில் ஸ்நேகம், வமனம், விரேசன முதலிய பல சிகித்ஸா முறைகளும் கூறப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூ 3—0—0. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, ஹைகோர்ட்டுக்கெதிரில் 3 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

## SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### A New Method of Irrigation.

ஒரு புதுமாதிரியான நீர்ப்பாசனம்.—மழையானது விவஸாயிகளுடைய ஸௌகர்யம்போல் பெய்வதில்லை. சில ஸமயம் ஸ்வல்ப மழையே பெய்கிறது வேறு சில ஸமயங்களில் அதிக மழைபெய்து பயிர்களை நாசம் செய்து விடுகிறது. சில ஸமயங்களில் வேண்டாத போது ஏராளமாய் மழை பெய்கிறது. வேண்டும் போது சில இடங்களில் மழைபெய்யாமலே இருந்து விடுகிறது. மழையின் இயல்பு ஒருபோதும் ஓரே சீரா யிருப்பதில்லை. இந்த அஸௌகர்யத்தை உத்தேசித்து அமெரிக்காவில் ஒரு விவஸாயி மழையை எதிர்பார்க்கா மலே தமது பயிரை ஸாகுபடி செய்கிறார். ஒரு புது மாதிரியில் தமது பயிருக்கு ஜலம் விடுகிறார்.

அவர் அனுஸரிக்கும முறையானது இயற்கையாய் மழை பெய்வதைக் கிட்டத்தட்ட ஒத்திருக்கிறது. வயல்களின்நடுவில் பற்பல கம்பங்களை நிறுத்தி, அவை களின்மேல் தொடர்ச்சியாகக் குழாய்களை அமைத்து வைத்திருக்கிறார். இந்தக் குழாய்களில் கொஞ்ச தூரத்துக்கொன்றாக த்வாரங்கள் இருக்கும். அந்த த்வா ரங்களில் பித்தளையால் செய்ததும், சிறுத்வாரங்களுள்ள தும், ஜலத்தை மழைபோல் வெளியிடக் கூடியதுமான குழாய் மூடிகள் பொருத்தி யிருக்கும். குளம் அல்லது ஆறுகளிலிருந்து ஜலத்தை இஞ்ஜின்களால் இறைத்து பமபுகளில் பாய்ச்சினால் பித்தளை மூடிகள் வழியாக ஜலமானது மெதுவாய் மழைபெய்வதுபோல பயிர்க ளின் மேல் விழும். இது சிறு துளிகளாக விழுவதால் மண்ணைக் கெட்டியாக்காமல் பூமிக்குள சுவறிப் போய் பயிாகளுக்கு உதவுகிறது. இதில் ஜலச்சேதம் ஏற்படு வதற்கில்லை. கனத்த மழை பெய்தால் நிலத்து மண் ணைக களியாக்கி ஜலம் தங்கும்படி செய்துவிடுகிறது. இநத ஜலம ஸூர்யோஷ்ணத்தால் ஆவியாக மாறிப போய்விட்டால், மேல் மண்ணானது ரொம்ப கெட்டி யாகி விடுகிறது. இபபடி மண் ரொமப கெட்டியாகி விட்டால் மறுபடி மழை பெய்யும்போது மழை ஜலம் பூமியில் ஊறி வேருக்குப் போக முடிவதில்லை. பெய்த மழை ஜலம் மேலேயே தங்கியிருந்து சீக்ரம் ஆவியாகப் போய்விடுகிறது.

கால்வாய்கள் வெட்டி ஜலம் பாய்ச்சுவதிலும் சில அஸௌகர்யங்கள் இருக்கின்றன. ஜலத்தில் பெரும் பாகம் வீணாய்ப் போய் விடுகிறது. பயிரிடக்கூடிய நிலத்தில் கால்வாயகள் வெட்ட வேண்டி யிருபபதால், அந்த நிலம் பயிரிட முடியாமல் வீணாகப் போகிறது. மேலும் இந்த முறையில் அதிக ஜலம் வேண்டியிருக்கி றது. கால்வாய் ஜலத்தில் களைகளினுடைய விதைகள் மிதந்துவந்து பயிர்களுக்குக் கெடுதியுண்டு பண்ணக் கூடும்.

ஆனால் அமெரிக்கவிவஸாயி அனுஸரிக்கும், தலைக்கு மேலிருந்து ஜலம்பாய்ச்சும் முறையில் இந்த அஸௌகர் யங்கள் கிடையா. பயிருக்கு எப்போது ஜலம் வேண் டுமோ அப்போது பாய்ச்சலாம். வேண்டும்போது நிறுத் திக் கொள்ளலாம்.

இந்த முறையில் ஜலம்பாய்ச்சிப் பயிர் செய்வதில் மாஸூல் அதிகமாகக் கிடைக்கிறது. ஸாதாரணமாய் வேறிடங்களில் ஒரு ஏக்கருக்கு 100 முதல் 200 புஷல் வரையில் உருளைக்கிழங்கு மாஸூல் கிடைக்க, இந்த அமெரிக்கருடைய நிலங்களில் ஏக்கருக்கு 625 புஷல் மாஸூல்கிடைக்கிறதாம். அதோடு மற்றவர்கள் ரொம்ப நாள்கழித்து அறுவடைசெய்ய இவர் சீக்ரம் அறுவ டைசெய்து விடுகிறார். முதலில் விற்பனைக்குவரும் புது உருளைக்கிழங்குக்குவிலை அதிகமாதலால், அவருக்குவிலை யிலும் நல்ல லாபம் கிடைக்கிறது. இதே மாதிரி மற்ற காய்கறி வகைப் பயிர்களையும், மற்ற விவஸாயிகளைவிட சீக்ரம் அறுவடை செய்து அதிக விலைக்கு விற்று அவர் நல்ல லாபம் அடைகிறாராம். சில சிறு செடிகளுக்கும், பலன் தரும் பருவத்திலிருக்கும் பெரிய செடிகளுக்கும், அதிக பனி உதவாது. அதற்காக அவர், பனியை உள்ளே விடாத விதமாய்த் தயார்செய்த ஒருவகைத் துணியை செடிகளின்மேல் கூடாரம்போல் போட்டு மூடுகிறார். ஸூர்யோஷ்ணமானது ஸல்லாத் துணி போல் இருக்கும் அந்தத் துணிவழியாகப் போய் செடி க்குதவுகிறது. இரவில் பனி மாத்ரம் செடியை உபத் திரவம் செய்யாமலிருக்கிறது. இதனால் செடிகள் நன் றாய் வளர்ந்து நல்ல மாஸூல் கொடுக்கின்றன.

### Nickel Steel.

நிக்கல் இரும்பு.—7 பங்கு இரும்புடன 1 பங்கு நிக்கலைச்சேர்த்து உருக்கினால் கிடைக்கும் கலப்பு உலோகம் ரொம்ப பாரம தாங்கக் கூடியது நூற்றுக்கு 0·55 பாகம் கார்பன் என்னும் சுத்தமான கரி சேர்த் தால், அது ரொம்ப கடினமான உலோகமாகி விடும். அதை மெஷினால் பற்பல உருவங்களாக்கவும் முடியா தாம்.

## SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Cold.

**ஜலதோஷம்.**—ஜலதோஷம் பிடித்திருக்கும்பொழுது தொண்டை, தலை முதலிய பாகங்களில் மாத்ரம் நோவாயிருப்பதால் அவற்றிற்கு மாத்ரம் மருந்துபோடுவது வழக்கம். இப்படிச் செய்வதால் தற்காலத்திற்கு அதைச் சாந்தி செய்யலாமென்றாலும் மறுபடி வராவொட்டாதபடி செய்ய முடியாதென்று 'வைத்திய கலாநிதி'யில் ஒரு நிருபர் எழுதுகிறார் ஜலதோஷமென்றால் சீதளம் அதிகப்பட்டிருக்கிறதென் றெண்ணுதல் பிழையாகும். தேஹத்தில் எப்பொழுதும உஷ்ணம் உண்டாகிக்கொண்டே யிருக்கிறது. இதற்குக் காரணமாகிய ரத்தஓட்டம் ச்வாஸம் முதலியவற்றில் ஏதோ பிசகு இருப்பதனால்தான் ஜலதோஷமுண்டாகிறது. சிலவேளையில் தேஹத்தில் உஷ்ணம் அதிகமாயுண்டாகும். அப்பொழுது அதிகமாயிருக்கும் உஷ்ணம் சர்மத்தின் வழியாய் வேர்வைரூபமாகப போய்விடும். தேஹத்தில் அதிகமாக உண்டாகும் உஷ்ணத்தை வேர்வைரூபமாக வெளியே போகச்செய்வதுதான் சர்மத்தின் முக்யமான வேலை. ஆகையால் ஜலதோஷம் வராமலிருக்கச்செய்ய சர்மத்தின் தொழில் சரிவர நடக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது. அந்த நிருபர் ஜலதோஷம் வராமலிருக்க பின்வரும் விஷயங்களைத் தெரிவிக்கிறார். ஒன்றின்மேலொன்றாக அனேக உடுப்புகளைப் போட்டுக்கொள்ளுவதாலும், உளவே பட்டு, பருத்தி முதலியவற்றாற் செய்த உடுப்புகளைப் போட்டுக்கொள்ளுவதாலும் வேர்வைக்குத் தடங்க லேற்படும். ரோமத்தாற் செய்யப்பட்ட ஆடைகளை உள்ளே போட்டுக்கொண்டால் வேர்வைக்குத் தடங்கலுண்டாகாது. கெட்டிக்கம்பளிகளைப போட்டுக்கொள்வதைவிட மெல்லியதானவற்றைப் போட்டுக்கொள்ளுவது நலம். உள்ளே போட்டுகொள்ளும் சட்டைகள் வேர்வை தாராளமாய் உண்டாவதைத் தடைசெய்யாதபடி மெல்லியதாக இருக்கவேண்டும். வெளியே போட்டுக்கொள்ளும் சட்டைகள காலத்துக்குத தக்கபடி மெல்லியதாகவாவது கெட்டியாகவாவது இருக்கவேண்டும். அதிகமாக உடுப்புகளைபபோட்டுக்கொள்ளுகிறவர்களுக்கு ஜலதோஷம்விசேஷமாகப் பிடிக்கும். தலை, முகம், கழுத்து இம்மூன்றும் குளிருக்கு வாடிக்கைப்பட்டிருப்பதால் இவற்றை மூடுவது அவச்யமல்ல. இவற்றை மூடினால் நோயுண்டாகும். தொண்டைக் கட்டிக்கொள்ளாதிருக்கச்செய்ய கழுத்துப்பட்டிகளைச் சுற்றிக்கொள்வது பிசகு. தேஹமுழுவதும் ஒரே ஸமமாராகப போர்த்திருக்கவேண்டும்; ஒரு பாகத்தை அதிகமாகப் போர்த்துக்கொண்டிருந்தால் அதன் பாகம் பலமற்றுப்போம். வழக்கமாய் பரதிதினமும் வெந்நீரில் ஸ்நாநம் செய்வதைவிட குளிர்ந்த ஜல ஸ்நாநம் செய்வதே மேல். ஜலதோஷம் உண்டாயிருக்கையில் மட்டும் தாங்கக்கூடிய சூடுள்ள ஜலத்தை ஸ்நாநபாநாதிகளுக்கு உபயோகிக்கவேண்டும்.

### Sunflower and Malaria.

**ஸூர்யகாந்திப்பூவும் மலேரியாவும்.**—அமெரிக்க ஐக்ய நாடுகளின் கீழ்பாகத்திலுள்ள பொட்டாமாக் நதிக்கரையில் ஸூர்யகாந்திப்பூவை ஏராளமாய் பயிரிட்டதில், அங்குள்ள சதுபபு நிலங்களெல்லாம் காய்ந்தபூமியாக ஆனதோடு, மலேரியாவும ஒழிந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்தியாவில் இவ்விஷயத்தைப் பற்றி ஆராய்ச்சிசெய்து ஸூர்யகாந்தியால் மலேரியாவை ஒழிக்கக் கூடுமென்று நிர்ணயிக்கப்பட்டால், இந்த தேசத்தில் ஸூர்யகாந்திப்பூவை ஏராளமாய்ப் பயிர் செயய முயற்சிக்கலாம்.

### Remedy for Falling Hair.

**தலை மயிர் உதிர்வதற்கு சிகித்ஸை**—மா, எலுமிச்சை, நாரத்தை, கொளுஞ்சி, மாதுளை, விளா இவைகளின் வித்துப் பருப்புகளை ஓர் நிறையாய் எடுத்து பசும்பாலில் அரைத்துக் கொதிக்கவைதது ஒரு மண்டலம் வரை காலையில் சிரவில் தளமிட்டு மாலையில் ஸ்நானம் செய்துவர குணம் கொடுக்கும்.

### Bibbili Churnam.

**பிப்பலீ சூர்ணம்**—திப்பலியை மாத்ரம் சூர்ணம் செய்து (இரண்டு மடங்கு) தேன் கலந்து லேஹ்யம் போல் உட்கொள்ளவும். இதனால் காஸம், ஜ்வரம், விக்கல், ச்வாஸம், ப்லீஹரோகம் இவை தீரும். கண்டத்திற்கு நல்ல வலுவைத்தரும். மேற்கூறிய ரோகங்களில் பாலர்களுககு இந்த பிபபலீ சூர்ணத்தை உபயோகிக்கலாம்.—சார்ங்கதரஸம்ஹிதை.

## LAW.

## சட்டம்.

### Assigfiment of Decree.

டிக்ரியை மேடோவர் செய்வது.—பி என்பவர் வாங்கியிருந்த ஒரு டிக்ரியை 'மேடோவா' வாங்கிக்கொள்வதாக டி-என்பவர் பி-க்கு ஒரு ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார். டி-என்பவரால் ஏற்பட்ட சில காரணங்களால் மேடோவர் பூர்த்தியாகாமல் நின்று போயிற்று. இதற்குள் டிக்ரி காலாவதி யாகிவிட்டது. பி-என்பவர் ஒபபந்தப்படி டி-என்பவா டிக்கிரியை மேடோவர் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று வ்யாஜ்யம் போட்டார். இதில் ஹைக்கோர்டாா தீர்பபு பின்வருமாறு. டிக்ரி காலாவதியாகிவிட்டதால், டிக்ரியை மேடோவர் வாங்கிகொள்ளும்படி டி-யைக் கட்டாயபபடுத்துவதற்கில்லை. ஆகவே பி-என்பவர் ஒப்பந்தப்படி தமது காரியத்தைச் செய்ய முடியாது. டிக்ரி காலாவதியாகாம லிருக்கும்படி வேண்டிய நடவடிக்கைகளைச் செய்திருக்க வேண்டியது பி-என்பவரின் கடமையாகும். 3, லா வீக்லி-553.

### Absconder and Joint Family Property.

அவிபக்தகுடும்பத்தில் குற்றஞ்செய்து ஓடிப்போனவன் பாகம்—அவிபக்த குடும்பத்தைச்சேர்ந்த ஒருவன் குற்றஞ்செய்து அகப்படா விட்டால் குடும்ப ஸொத்தில் அவனுககுள்ள பாகத்தை கவரன்மெண்ட் ஜப்திசெய்யலாம். அபபடிச்செய்தால் அதற்கு ரிஸீவர் நியமித்து பாக வ்யாஜ்ஜியம் செய்யச்சொல்லியோ அல்லது வேறுவிதமாகவோ அந்த பாகததைப் பெறலாம். ஜபதிசெய்ததனுல், ஓடிபபோனவன் பாகமாகி விட்டதாகவாவது அல்லது அந்த ஸொத்து ஸாககாருக்கே ஸொந்தமாகி விட்டதாகவாவது எண்ணக்கூடாது. ஜப்தியிருக்கிறவரையில ஸர்க்கார் ஸொத்தின்வருமபடியை அடையலாம். அந்த ஸொத்து பூர்வீக ஸொத்தாயிருந்தால் ஜப்திக்குப் பிறகு ஓடிப்போனவனுககு பிள்ளைகளும் பிறக்கும்பட்சத்தில் ஹிந்துலா ப்ரகாரம் அவர்களுக்கு பங்குகளும் உண்டு.

4 லாவீக்லி 21-ம் பக்கம்.

### A Carpenter as Witness.

ஒரு தச்சன் சாட்சி சொன்னது.—ஒரு அடிபிடி சண்டைகேஸில் ஒரு தச்சன் சாட்சியாக வந்தான். குற்றவாளியின் வக்கீல் தச்சனைப்பார்த்து, குற்றவாளி ப்ராதுகாரனை அடித்ததாகச் சொல்லுகிறாயே, அபபடி அடிக்கும்பொழுது நீ, எவ்வளவு தூரத்திலிருந்தாய் என்று கேட்டார். அதற்குத் தச்சன் சரியாய் காலறையடி ஐந்தரையங்குலம் இருக்குமென்று சொன்னன். அப்பொழுது வக்கீல், அதெப்படி அவ்வளவு திட்டமாகத் தெரியுமென்று தச்சனைக் கேட்கவே, அவன் "யாராவது ஒரு மடையன் கேட்பானென்று அளந்து பார்த்தேன்" என்று சொன்னன்.

### Suit for Interest.

வட்டிக்கு வ்யாஜ்யம்.—பந்தக பத்ரத்தில் பந்தக முதல் தொகையை திருப்பிக்கொடுக்கவேண்டிய கெடுவுக்குள் ஒருவித வ்யாஜ்யமும் செய்யக்கூடாதென்றிருந்தால், பந்தகம் வாங்கினவன் வட்டிக்குக்கூட வ்யாஜ்யம் செய்யக்கூடாது. ஆனல் மேல்சொன்னபடி வ்யாஜ்யம் செய்யக்கூடாதென்ற நிபந்தனை இல்லாவிட்டால், முதலைத் திருபபிக்கொடுப்பதற்கு ரொம்ப கெடுவிருந்தபோதிலும், வட்டிக்குமட்டும் வ்யாஜ்யம போடலாம்

### Joint Family Property.

அவிபக்த குடும்பஸொத்து.—அவிபக்த குடும்பத்தில் ஒரு பாகஸ்தனுடைய பாகத்தை வாங்கின அன்யன் ஒருவன் ஸொத்தைப பிரித்துவிடவேண்டுமென்று வ்யாஜ்யம் செய்யலாமே ஒழிய அந்த மற்ற பாகஸ்தர்களோடுகூட தானும் ஆளவேண்டுமென்பதற்கு வ்யாஜ்யம் போடக்கூடாது.

### Property Purchased by Widow.

விதவை வாங்கின ஸொத்து.—ஒரு விதவை அவளுக்கு ஜீவனும்சத்துக்காக விடப்பட்ட நிலத்தின் ஐவேஜியிலிருந்து வேறு நிலம் வாங்கினல் அந்த நிலம் அவளுடைய ஸ்த்ரீதனமாகுமே ஒழிய, ஜீவனும்சததுக்காக விடப்பட்ட நிலத்தைச் சேர்நததாகி அதை அடையவேண்டிய ஸொந்தககாரர்களைச் சேராது.

3 லாவீக்லி 422-ம் பக்கம்.

### Labour in Lieu of Interest.

வட்டிக்கு பதிலாக வேலைசெய்தல்.—வாதி ப்ரதிவாதிகளுககுக கொடுத்த கடனுககு வட்டியாக கடனுக்காக வ்யாஜ்யம் போட்ட தேதிக்கு மூன்று வர்ஷத்துக்குள் ப்ரதிவாதிகள் வேலைசெய்ததாக வாதி ரூபித்தால், வாதியின் வ்யாஜ்யம காலாவதியாகமாட்டாது. 3, லாவீக்லி-552.

## SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### An Innovation in Nattukkottai Caste.

**நாட்டுக்கோட்டை ஜாதியில் ஒரு புதிய வழக்கம்.** நாட்டுக்கோட்டை ஜாதியாரில் சிலர், தலைமயிர் வைத்துக்கொள்ளும் வழக்கத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர முயற்சிசெய்துவருகிறார்கள். எம். சின்னையா செட்டியார் என்பவர் இதைப்பற்றி ப்ரஸங்கித்தும் பத்ரிகைகளில் எழுதியும் வருகிறார். ஸமீபத்தில் தலைமயிர் வைத்துக்கொள்ளவேண்டியதின் அவசியத்தைப்பற்றிப் பின் வரும் பாட்டை வெளியிட்டிருக்கிறார்.

நியாயந்தானோ நீர் சொல்லும்—நம்மன்
ஜாதிக்கடுக்குமோ சொல்லும்.

ஜாதியிலில்லாத வழக்கம்
நீர், செய்துகொண்டுவந்த பழக்கம்
இந்த ஊரிலெங்குமது முழக்கம்
வெகு உறுதியாச்சுது ஒழுக்கம். (நியா)

தலையிற்சிகையிருக்க வேண்டும் அது
சாஸ்திர சம்மதமாகும்.

வழக்கம் வழக்கமென்ற பேச்சு
அதை மாற்றுங்கால மீதாச்சு
உலக நாகரீக மிஞ்சிப்போச்சு நாம்
நகராமலிருப்பது எச்சு. (தலை)

நாகரீகமென்ற சொல்லே அது
நல்லதோ கெட்டதோ தொல்லை
சேர்ந்து, நாலுபேர் நடந்தாற் குற்றமில்லை
இன்றேல், நடந்தவர்க்கே வருஞ்சள்ளை. (நியா)

தொல்லையென்று மிதிவில்லை மனித
சுதந்தரமே னமக்கில்லை
பயம் தொடர்ந்து வருத்துவதே தொல்லை அது
தொலைந்துவிட்டாற் குற்றமில்லை. (தலை)

படித்தவர் சொளத்தரும் வேஷம் இதைப
பலருங்கைக் கொள்வது நாசம சிறு
பாலர்களுக்குச் சந்தோஷம் நீர்
பண்ணிவைத்ததெல்லாம மோசம். (நியா)

படித்தவராக நாம் முயல்வோம் அதைப்
பாராட்டா மூடரை யிகழ்வோம் சிகை
வளர்த்துச் சிறந்தவரைப் புகழ்வோம்
நல்ல வழியிற் சென்று அறிவடைவோம். (தலை)

### Religious Rites for Non-Brahmans.

**ப்ராம்மணரல்லாதவர்களுக்கு சடங்கு முதலியவைகள்.**—ப்ராம்மணர்களல்லாத மற்ற ஜாதியார்கள் தோஷ பரிகாரார்த்தமாகச் செய்யும கர்மாக்களையும, கல்யாணங்கள் முதலிய சுபகர்மங்களையும், இறந்தவர்களின் பொருட்டுச் செய்யும் கர்மங்களையும் செய்யும்போது, புராணப்படி செய்வதே இதுவரையில் வழக்கமாயிருந்துவருகிறது. ஆயினும சிலர் ப்ராம்மணர்களைப போல் நடக்க எண்ணங்கொண்டு வேதோக்தமாய் வேத மந்த்ரங்களைச் சொல்லியே கர்மாக்களை நடத்துகிறார்கள். அதற்கு சில ப்ராம்மணர்களும் ஸம்மதபபடுவதோடு, அப்படி நடத்தும்படி ப்ராம்மணரல்லாதவர்களைத் தூண்டியும் வருகிறார்களென்று ஒரு தனவைச்யர் 'வித்யாபானு' வில எழுதுகிறார். புராணோக்தமாய்ச செய்யவேண்டிய கர்மாக்களை வேதோக்தமாய்ச் செய்வதால் செய்தவருக்கும் செய்துவைத்தவருக்கும் பாபம் ஸம்பவிக்கிறது. அதோடு கர்மாவைச் செய்தவர் உத்தேசித்த பலனையும் அடைவதில்லை. காலஞ்சென்ற புதுக்கோட்டை மகாராஜா பல ப்ராம்மணர்களைக் கூட்டி, ப்ராம்மணர்களல்லாதவர்களுக்கு வேதோக்தமாய்ச் செய்துவைக்கலாமா, புராணோக்தமாய்த்தான் செய்துவைக்கவேண்டுமோ வென்று விசாரித்ததில், புராணவழியேதான் செய்யவேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள். அதன்படியே அவர் தன் ஆயுள் முடிய நடத்திவந்திருக்கிறார்

### Elevating the Depressed Classes.

**தாழ்ந்த ஜாதிகளை உயர்த்தல்.**—இந்தியா கவர்னமெண்டார் இது விஷயமாய் மாகாண கவர்ன்மெண்டுகளுக்குக் கடிதமெழுதி, அதில் ஒடுக்கப்பட்ட ஜாதிகள் என்று சொல்லப்படும் தாழ்ந்த ஜாதிகளுக்குக் கல்வி கற்பிப்பது, அவர்களுடைய பொருளாதார நிலைமையை உயர்த்துவது, குற்றங்கள் புரியும் ஜாதிகளை, மற்ற ஜனங்களுக்குக் கெடுதி ஏற்படாமல் நல்வழிக்குக் கொண்டுவருவது ஆகிய இவைகள் விஷயமாய் ஒவ்வொரு மாகாணத்திலும் என்னென்ன முயற்சிகள் நடந்து வருகின்றன; இன்னும் என்ன ஏற்பாடுகள் செய்யலாமென்பதைப பற்றியும், பொது ஜன ஸங்கங்கள் இது விஷயமாய் என்னசெய்து வந்திருக்கின்றன வென்பதைப பற்றியும் தெரிவிக்கும்படி கேட்டு விட்டிருக்கிறார்கள்.

## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Treatment for Burns.

நெருப்புப் புண்களுக்கு சிகித்ஸை—நெருப்பு பட்டுக் காயமுண்டானால் சில ஸமயம் தோல் மாத்ரம் கழன்றுவிடுவதுண்டு. கொப்புளங் கிளம்பி நீர் கோத்துக் கொள்வதுமுண்டு. அதிகக் கெடுதி நேரிடவும் கூடும். கபாலத்திலாவது மார்பிலாவது முதுகிலாவது அக்கினிபாதை ஏற்பட்டால் ப்ராணனுக்கு ஹானியுண்டாகலாம். நோயாளிக்கு மயக்க முண்டாகி விட்டால், படுக்கையில் வைத்து கைகால்களுக்குச் சூடுவரும்படி, வீஸாவில் வெந்நீர் வார்த்து வீஸாவை மூடிக் கைகளுக்கும் ஹ்ருதயத்திற்கும் மேல் ஒற்றடம் கொடுத்துக் கம்பளியைப் போர்த்தி கொஞ்சம் பாலாவது காப்பியாவது உள்ளுக்குக்கொடுக்க வேண்டும்.

ரணங்களில் துணிகளிருந்தால் துணிகளை இழுத்து எடுக்காமல், துணியைக் கத்தரிக்கோலால் கத்தரித்து விடவேண்டும். தெளிவான சுண்ணாம்புநீருடன் தேங்காய் எண்ணெயைக்கலந்து அதில்துணிகளை நனைத்துப் புண்ணில்போடவேண்டும். கொப்புளங்களைக் குத்திவிடக்கூடாது. அப்படியே விட்டால் அவை சீக்ரம் ஆறிவிடும். உருளைக் கிழங்கின் உள்பாகத்தைச் சுரண்டி அதை ஒரு துணியில் பரப்பிப் புண்ணின்மேல் போடலாம். கட்டியிருக்கும் துணி தீப்பற்றிப் கொண்டால், உடனே தீயானது சரீரத்தின் மேல் பக்கமாய் இருக்கும்படி தரையில் படுக்கவேண்டும். அதாவது முன் பக்கத்துத் துணி பற்றிக்கொண்டால் மல்லாக்கப் படுக்க வேண்டும். பின் பக்கத்துணி பற்றிக் கொண்டால் குப்புறப் படுக்க வேண்டும். ஏன் அப்படி செய்ய வேண்டும் என்றால், தீயானது எப்போதும் கீழேயிருந்து மேலே பரவுகின்றது. ஆகையால் நின்றபடியிருந்தால், தீயானது சீக்ரம் மேலே பரவித் தேகம், கழுத்து முகம் இவைகளைச் சுட்டுவிடும். இல்லாவிட்டால் தீயானது தேகத்தின் கீழ்பாகத்தில் இருக்கும்படியாய்ப் படுத்துக் கொண்டால், தீ அணையாமற்போனால் மேலே பரவிக் கைகால்களைச் சுட்டுவிடும். மற்றத் துணிகளும் பற்றிக் கொள்ளும். கீழே படுத்தும் கையில் அகப்படும் துணியால் தீயை அமுக்கி அணைக்கவேண்டும். அந்தத் துணி ஈரமாக இருந்தால் மிகவும் நல்லது. ஒத்தாசை செய்யப்போகிறவர் தீயின் ஸமீபம் போகும்போது ஒரு கம்பளி அல்லது போர்வையைத் தலைக்கு முன்னால் பிடித்துக் கொள்ள வேண்டும். தீப்பிடித்தவுடன் படுத்துவிட வேண்டுமே யொழிய ஓடக்கூடாது.

### Uses of Charcoal.

அடுப்புக் கரியின் உபயோகங்கள்.—கண்ணாடி பாத்ரங்கள், வேறு பாத்ரங்கள் ஆகிய இவைகளில் கெட்டநாற்ற மிருந்தால், கரித்தூளால் அதைப்போக்கி விடலாம். முதலில் பாத்ரங்களை மணல், சாம்பல் இவைகளால் தேய்த்து சுத்தம்செய்து, பெரும்பாகம் அழுக்கைப் போக்கின பிறகு, கரியைத் தூளாக்கி அதனால் பாத்ரங்களைத் தேய்த்து ஜலத்தை விட்டு அலம்பி எடுக்கவும். நாற்றமிராது. பல்ஈறுகள் கோளாறடைந்து அதனால் வாயில் நாற்றம் உள்ளவர்கள் பல் துலக்கவும் வாயைக் கொப்புளிக்கவும் நன்றாய்ப் பொடிசெய்தகரித்தூளை உபயோகிப்பது நல்லது. நாற்றம் நீங்குவதோடு, பல்லும் நன்றாய் வெள்ளையாகும். ஜலம் அசுத்தமாயிருந்தால் அதில் கரிக்கட்டையைப் போட்டுவைத்தால் ஜலத்திலுள்ள கெட்டநாற்றங்கள் போய்விடும்.

### Prickly Pear.

சப்பாத்துக் கள்ளி—சப்பாத்துக் கள்ளியை சுண்ணாம்படிப்பதில் உபயோகிக்கலாமென்று முன் ஸஞ்சிகை யொன்றில் எழுதியிருக்கிறோம். தென்னமெரிக்காவில் இதை சுண்ணாம்படிப்பதில் விசேஷமாய் உபயோகிக்கிறார்களாம். சப்பாத்திக் கள்ளியை ஜலம் விட்டு வேகவைத்து குழம்பாய்வரும்பாகத்தை இறுத்து அதில் சுண்ணாம்பு ஜலத்தைக் கலந்து சுவர்களுக்கேயன்றி மரம், செங்கல், இரும்பு முதலியவைகளுக்கும் பூசுகிறார்களாம். சுண்ணாம்பு பளபளப்பா யிருப்பதோடு, மழைபெய்தாலும் கெடுவதில்லையாம். பல வருஷங்கள் வரையில் சுண்ணாம்பு பூசவேண்டி யிருப்பதில்லையாம்.

### Honey in Diabetes.

நீரிழிவு ரோகத்துக்கு தேன்.—ஒரு ரஷ்ய வைத்யர் நீரிழிவுரோகத்தால் வருந்திக்கொண்டிருந்த ஒரு நோயாளிகளுக்கு பத்யம் சொல்லுகையில் தற்செயலாய் தேன் சேர்த்துக் கொள்ளச் சொன்னார். அப்படி தேன் சேர்த்துக்கொண்டு வந்ததில் மூத்ரத்தில் சர்க்கரை அதிகமாகாம லிருந்தது. அதன்மேல் வைத்யா மற்ற நீரிழிவு ரோகிகளுக்கும் தேன் சேர்த்துக் கொள்ளும்படி சொன்னார். நோயாளிகளில் சிலருக்கு மூத்ரத்தில் சர்க்கரை அதிகரிக்காம லிருந்ததோடு, வேறு சிலருக்குக் குறைந்தும் வந்ததாம்,

# AGRICULTURE.
## விவஸாயம்.

**Striga Lutea.**

பல்லிப்பூண்டு.--புன்செய் நிலங்களில் வரகுப்பயிரில் பல்லிப்பூண்டு என்று ஒருவகைப் பூண்டு முளைத்து பயிரை ரொம்பவும் நாசம் செய்துவிடுகிறதாக புதுக்கோட்டை விவஸாய இன்ஸ்பெக்டர் மிஸ்டர் கே. ஆர். சங்கரய்யர் தெரிவிக்கிறார். இந்தப் பல்லிப்பூண்டால் அநேகவிடங்களில் விவஸாயிகள் நிலத்தைத் தரிசு போட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இது ஒரு புல்லுருவி. மரங்களில் புல்லுருவிகள் விழுந்து மரத்தின் ஸாரத்தை உறிஞ்சி வளர்வதை அநேகர் பார்த்திருப்பார்கள். பூமியில் பல்லிப்பூண்டு தனியாக வளர்வதுபோல இருந்தாலும், மண்ணிற்குள் இதன்வேர் தான்யப்பயிரின் வேரை ஒட்டிக்கொண்டு வரகுப்பயிர் வேரின் வழியாய் நிலத்திலிருந்து உணவை மேலே பயிருக்கு போகவொட்டாமல் அப்பயிருணவை பல்லிப் பூண்டிற்கு சேர்க்கிறது. இதனால் தான் செழிப்பாய் வளர்ந்த பயிர்கள் நல்ல மாஸூலைக் கொடுக்காமல் எரிந்துபோனதுபோல் வாடிப்போகின்றன. இதற்கு வெண்மையான பூக்கள் உண்டு. விதைகள் லேசாயும் கடுகைப்பார்க்கிலும் மூன்று நான்கு பங்கு சிறியவையாயு மிருக்கின்றன. ஒன்றிரண்டு செடிகளிலிருந்து ஆயிரக்கணக்கான விதைகள் உண்டாகின்றன. விதைகள் காற்றில் வெகுதூரம் பறந்து போகக்கூடியதால், அநேக பூமிகளில் இப்பூண்டு பரவுவதற்கிட மேற்படுகிறது. உழைப்பாளிகள் நிலத்தில் எவ்வளவு ப்ரயாஸைப்பட்டு களை எடுத்தபோதிலும் வருஷாவருஷம் இது உண்டாகிறது. ஆகையால் ஒரு க்ராமத்தில் உள்ள எல்லா குடியானவர்களும் சேர்ந்து இதைத் தடுப்பதற்கான முறைகளை செய்தால் தான் இப்பூண்டை அடியோடே தொலைக்கலாம்.

இப்பூண்டு அதிகமாய் வளர்ந்து நாசம்செய்யும் நிலங்களில் மூன்று நான்கு வருஷத்திற்கு வரகு, சாமை, கம்பு, சோளம், கேப்பை முதலிய தானியப்பயிர்களை ஸாகுபடி செய்யாமல் உளுந்து, துவரை, பருத்தி முதலிய இதர தினுஸுகளைப் பயிர்செய்வதே உத்தமமெனச் சொல்லலாம். பூண்டின் விதைகள் மிகச் சிறியவைகளா யிருப்பதால் தூர்தூராய்ப் பிடுங்கியும் களைகொத்தி எடுத்தும் தொலைக்க ப்ரயாஸப்படும். ஆனால் கூலிகள் சுளுவாயும் ஸ்வல்ப சம்பளத்திற்கும் கிடைக்கும் பக்ஷத்தில், பல்லிப் பூண்டுகள், பூப்பதற்குமுன், பிடுங்கி நெருப்பில் எரித்துவிட இதனால் உண்டாகும் கெடுதல்கள் மிகவும் குறையும்.

**Citrus Cultivation.**

எலுமிச்சை ஸாகுபடி.—எலுமிச்சை, கொளுஞ்சி முதலிய மரங்களைப் பயிர் செய்வதில் பின்வரும் விஷயங்களை கவனிக்கவேண்டும்.

(1) செடிகளை ஆழமாய் நடக்கூடாது.

(2) ஒரு செடிக்கும், மற்றொன்றிற்கு மிடையே சரியான இடைவெளி வேண்டும்.

(3) எவ்வளவு செடிகளை சரியாய் கவனித்துப் பார்த்துவர முடியுமோ அவ்வளவேதான் நடவேண்டியது.

(4) பூச்சிகளடைந்து செடிகளைப் பாழாக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டியது.

(5) சீக்ரத்தில் பலனை எடுக்கவேண்டுமானால் பூமியை நன்றாய் உழவேண்டும்.

(6) களிப்பான பூமியானால் மண்ணை நன்றாய்க் கொத்தி விடவேண்டியது. ஆனால், மரம் காய்த்துக் கொண்டிருக்கும்போது அப்படி மண்ணைப் புரட்டக் கூடாது.

(7) நிலத்திற்கு நல்ல வடிகால் ஏற்படுத்தவேண்டும்.

(8) நல்ல பலன் வேண்டுமென்றால், தாராளமாக எருவிடவேண்டும்.

**Cotton Seed for Cattle.**

மாடுகளுக்குப் பருத்திக்கொட்டைத்தீனி.—மாடுகளுக்குப் பருத்திக்கொட்டை நல்ல தீவனமாகும் ஆனால் சிறுகன்றுகளுக்கு அதை உபயோகிக்கக் கூடாது. வைக்கோல்புல் அதிகமாய் அகப்படாத காலங்களில் பருத்திக்கொட்டையைதினம் 2-அல்லது 2½-ராத்தல் வீதம் தீனியாக மற்ற தீவனத்தோடு போட்டால் அதிகச்செலவு ஆகாதென்று சொல்லப்படுகிறது. வளரும் மாடுகளுக்கு பருத்திக்கொட்டை போடுவதால், அவைகளுக்கு தீனி எடுக்க ஆவலுண்டாகி, அவைகள் நன்றாய்க்கொழுத்து வளருகின்றன. இப்படி பருத்திக்கொட்டை அதிகமாய்ப் போடுவதில், வைக்கோலும் கலந்து போடுவதா யிருந்தால் ஸுமார் 100-அல்லது 120-நாட்கள் வரையில் பருத்திக்கொட்டை போடலாம். பச்சை புல் போடுவதாயிருந்தால் 150-நாட்கள் வரையில் தொடர்ச்சியாகப் பருத்திக்கொட்டையைத் தீனியாகப் போடலாம். அதற்குப் பிறகு கொஞ்சகாலம் பருத்திக்கொட்டையை ரொம்ப குறைந்த அளவிலேயே போட்டுவரவேண்டும்.

# CO-OPERATION.
# கோவாபரேஷன்.

## Co-operative Grain Banks.

கோஆப்பரேடிவ் தான்ய பாங்கிகள்.—சென்ற மாஸத்து 'ஜனாபிமானி'யில் பேஹாரில் உள்ள கோவாபரெடிவ் தான்ய ஸங்கங்களைப் பற்றி எழுதினோம்.

இந்த மாதிரி ஸங்கங்கள் ஐரோப்பாவில் விசேஷமாய் இட்டலி தேசத்திலும், ஸ்பெய்ன் தேசத்திலும் நடந்துவருகின்றன. இந்த தேசங்களில் கவர்ன்மெண்டாரே இவைகளை மேற்பார்வை செய்து ஆதரித்து வருகிறார்கள். இட்டலியில் உள்ள ஸங்கங்கள் 15-ம் நூற்றாண்டு முதல் நடந்து வருகின்றன. இவைகளின் நோக்கம் விவஸாயிகளுக்கு வேண்டியபோது தான்யம் கடன்கொடுப்பதும் முக்யமாய் விதை தான்யம் கடன் கொடுப்பதும்

ஸ்பெய்னிலுள்ள ஸங்கங்கள் இப்போது ரொம்ப ஏற்பாடாக நடந்து வருகின்றனவாம். அங்கே ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு நிலைவரமான கமிட்டி இருக்கிறது. இதில் ஜில்லா கலெக்டர், அந்த ஜில்லாவின் விவஸாய உத்யோகஸ்தர், ஜில்லா விவஸாய போர்டின் இரண்டு மெம்பர்கள், அந்த ஜில்லாவிலுள்ள 50 பெரிய மிராசுதார்களால் தெரிந்தெடுக்கப்பட்ட 2 மிராசுதார்கள் ஆகிய இவர்கள் மெம்பர்களாக இருப்பார்கள். இந்தக் கமிட்டியார் க்ராம பாங்கிகளை மேற்பார்வை செய்வார்கள். ஒவ்வொரு க்ராமத்திலும் பஞ்சாயத்து போன்ற ஒரு ஸபையுண்டு அதுதான் ஷை பாங்கியை நிர்வாகம் செய்யும். கடனாகக் கொடுக்கப்படும் தான்யத்தை முதலில் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தின்படி தான்யமாகவோ அல்லது பணமாகவோ திருப்பிக் கொடுக்கலாம். அடுத்த மாஸூல் அறுவடையாகும் போது கடனைத் திருபபிக் கொடுப்பதானால், வட்டிவிகிதம் 100-க்கு $4\frac{1}{2}$ ஆகும். ஸ்வல்ப காலத்துக்கானால் மாஸத்துக்கு 100-க்கு $\frac{1}{2}$ வீதமாகும். க்ராம ஸபைக்குக் கிடைக்கும் லாபத்தில் 6-ல் ஒரு பாகத்தை நிர்வாகச் செலவுக்கு எடுத்துக்கொள்வார்கள். பாக்கி லாபத்தை மூலதனத்தோடு சேர்த்துக்கொள்வது வழக்கம். இதனால் வட்டி விகிதம் குறைவாகும்.

## Co-operation in United Provinces.

ஐக்யமாகாணங்களில் கோவாபரேஷன்.—சென்ற 1914-15-ம் வர்ஷத்தில் ஐக்யமாகாணங்களில் நான்கு கோவாபரெடிவ் கால்நடை இன்ஷூரான்ஸ் ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இவைகள் வெகுவாய் பரீக்ஷார்த்தமாகவே ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. இவைகளுக்கு அவச்யம் வேண்டுமானால் விசேஷ உதவிசெய்வதாக கவர்ன்மெண்டார் வாக்களித்திருக்கிறார்கள். பர்மாவில் இந்த மாதிரி ஸங்கங்கள் நன்றாய் நடந்து வருவதை உத்தேசித்து இந்த மாகாணங்களிலும் இவைகள் த்ருப்திகாமாக நடந்துவரும் என்று கவர்ன்மெண்டார் எதிர்பார்க்கிறார்கள். பர்மாவில் கால்நடை இன்ஷூரன்ஸ் எப்படி நடந்துவருகிற தென்பதை நேரில் அறிந்து வருவதற்காக அம்மாகாணங்களின் ரெஜிஸ்ட்ரார் இந்த வர்ஷம் பர்மாவுக்குப் போவார் என்று தெரிகிறது.

இந்த மாகாணத்தில் விவஸாயத்துக்கு வேண்டிய பொருள்கள் ஸப்ளைசெய்ய ஒரு ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு வேண்டிய அளவு மூலதனம் சேர்ந்திருக்கிறதாம் இந்த ஸங்கம் நல்ல விதைகள் விதைக்கவும், விதைகளை மொத்தத்தில் வாங்கி க்ராம ஸங்கங்களுக்கும் விவஸாயிகளுக்கும் விற்கவும் ஏற்பாடுகள் செய்யப் போகிறதாம.

## Co-operative Cattle Breeding

கோவாபரேஷன்முறையில் கால்நடை அபிவ்ருத்தி செய்தல்.—ஐரோப்பாவிலுள்ள ஸ்விட்ஸர்லண்ட் தேசத்தில் கால்நடை வளர்ப்பதற்காகவென்றே 850-ஸங்கங்கள் இருக்கின்றன. இவைகளைத் தவிர காளைகளை வாங்கிவைத்து உபயோகத்துக்குவிட அநேக ஸங்கங்கள் இருக்கின்றன.

கால்நடைகளை வ்ருத்திசெய்ய ஏற்பட்டிருக்கும் கோவாபரெடிவ் ஸங்கங்களின் நோக்கங்கள் பின்வருமாறு:-

(1) நல்ல காளைகளைத் தெரிந்தெடுத்து ஸங்கத்தில் பரிபாலித்துவந்து மெம்பர்களுக்கு உதவுதல். (2) நல்ல பசுக்களையும் கடாரிகளையும் தெரிந்தெடுத்து, அவைகளுக்கு அடையாளமிடுதல. (3) கால்நடை வ்ருத்திக்கென்று ம்ருகங்களைப் பரிபாலித்து வருவது. அவைகளினிடமிருந்து உண்டாகும் கன்றுகளை சரியாய் பாராமரித்து வருவது. (4) இன்னமாடு இன்னபலன் தரும் என்பதைப்பற்றி விசாரித்து அறிந்துகொள்ளுவது. (5) கால்நடை வ்ருத்திக்காக வேண்டிய மாடுகளை விற்பதற்கு ஸௌகர்யங்கள் செயதுகொடுப்பது (6) கால்நடை வ்ருத்திசெய்வது விஷயமாயும், அவைகளுக்குத் தீனிபோடுவது ஸம்பந்தமாகவும வேண்டிய விஷயங்களை மெம்பர்களுக்குள் பரவச்செய்தல்.

## COMMERCE.

## வ்யாபாரம்.

### Low Wages.

**குறைந்த சம்பளம்.**—கூலியாட்கள் குறைந்த சம்பளத்தில் கிடைப்பதாலேயே, தொழில்சாலையில் செலவு மட்டுப்படுமென்பதற்கில்லை ஸாதாரணமாய் இந்தியாவில் மண் வெட்ட ஒரு கூலியாளுக்கு 3-அல்லது 4-அணா கொடுத்தால் ஒரு சிறிய மண்வெட்டி அல்லது கட்டப்பாறையைக்கொண்டு வெகு தாமஸமாய மண்வெட்டுகிறான். தொழிலில் தேர்ச்சி யடைந்த தேசங்களிலோ 3-பேர்களுக்கு உயர்ந்த சம்பளம கொடுத்து ஒரு பெரிய யந்தரத்தைக் கொடுத்தால், அந்த யந்த்ரமானது 3-நிமிஷத்துக்கு ஒரு டன் வீதம் பூமியிலுள்ள கனிஜப்பொருள்களை வெட்டி யெடுக்கிறது. இவர்களுடைய வேலையை உத்தேசிக்கையில் இந்தியர்கள் செய்யும் வேலை பூமியை சிறு குச்சியால் தோண்டுவதுபோல இருக்கிறது.

செலவு எவ்வளவு ஏற்படுகிறதென்பதை எவ்வளவு சம்பளம் கொடுக்கப்படுகிறதென்பதைக் கணக்கிட்டுச் சொல்வது கூடாது ஒரு குறிப்பிட்ட சம்பளத்தில் ஒரு ஆள் எவ்வளவு செய்கிறான் என்பதைப் பார்த்து அதன்மேல் வேலைக்குத்தகுந்த கூலியா, அதிகமான கூலியா என்று பார்க்கவேண்டும்.

தற்போது ஜப்பானியர்கள் இஞ்ஜின்களைத் தாங்களே செய்துவருகிறார்கள். அவர்கள் வேலையாட்களுக்குக் கொடுக்கும் சம்பளம அமெரிக்காவில் அதேமாதிரி வேலையாளுக்குக் கொடுக்கும சம்பளத்தைவிட மூன்றிலொரு பாகம் குறைவாயிருக்கிறது. இருந்தாலும், அமெரிக்காவில் உள்ள இஞ்ஜின் செய்யும் தொழில் சாலையில் ஏற்படும் கூலியாள் செலவு ஜப்பானில் ஏற்படும் செலவைவிட மூன்றிலொரு பங்கு குறைவாயிருக்கிறது. இதற்குக் காரணம் அமெரிக்காவில் கூலியாட்கள் செய்யும வேலை அதிகமாயும் திறமையுள்ளதாயு மிருப்பதே சீனாவில் ஒரு பருத்தி யந்த்ரசாலையில் வேலையாட்கள் மலிவாகக் கிடைத்தபோதிலும் அதில் செய்யும் சரக்குகளுக்காகும் செலவு, இங்கிலண்டிலுள்ள லங்காஷையரில அதிகக் கூலி கொடுக்கும் பருத்தி யந்த்ரசாலையில் சரக்குகளுக்கு ஏற்படும் செலவைவிட அதிகமாகவே இருக்கிறது. குறைந்த ஸம்பளத்தில் கூலியாட்கள் நியமிப்பதால் அதிக லாபம் கிடைப்பதில்லை திறமையுள்ளவனும், தொழிலில் நன்றாய்ப் பயிற்சியடைந்தவனுமான வேலையாட்களை நியமிப்பதில் தான் கம்பெனிகளுக்கு லாபமுண்டாகிறது.

### Industrial Progress of Japan.

**ஜப்பானின் கைத்தொழில் அபிவ்ருத்தி.**—ஆதியில் மேல்நாட்டு வ்யாபார விஷயங்களைக் கொஞ்சங்கூட அறியாத ஜப்பான் தேசமானது தற்காலத்திற்கு ஏற்றபடி கைத்தொழில், வ்யாபாரம் முதலியவைகளில் விசேஷமாய் வ்ருத்தியடைந்திருப்பது மிகவும் வியக்கத்தக்கது. ஆகையால் அந்தவிஷயமாக அந்த ராஜாங்கத்தார் தங்கள் குடிகளுக்கு இப்படிப்பட்ட அபிவ்ருத்தியின் பொருட்டு எவ்விதமாய் உதவி செய்தீர்கள் என்று தெரிந்துகொள்வது நல்லது. ஆனதுபற்றி, இந்தியா கவர்ன்மெண்டார் கல்கத்தாவிலிருக்கும் மிண்டோ ப்ரொபொஸர் ஆப் எகனாமிக்ஸ் என்ற உத்யோகம்பெற்ற ப்ரொபெஸர் ஹாமில்டன் என்பவரை ஜப்பானுக்குப் போய் மேற்சொல்லிய விஷயமாக தீரவிசாரித்து ஒரு ரிபோர்ட்டு தயார்செய்ய சில மாஸங்களுக்கு முன்னால் நியமித்திருந்தார்கள். ப்ரொபெஸர் ஹாமில்டன் ஜப்பானுக்கு போய் அங்கே 4-மாஸம் ப்ரயாணம செய்து ஸமீபத்தில் இந்தியாவுக்குத் திரும்பி வந்திருக்கிறார்.

### Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஸங்கர்.**—இந்தியாவில் சென்ற ஜூன்மாஸத்தில அடியிற்கண்ட விவரப்படி 10 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | ரூ. |
|---|---|---|
| 2 | பாங்கிலேவாதேவி கம்பெனிகள் | 1,20,000 |
| 1 | அச்சடித்து ப்ரசுரம செய்யுங் கம்பெனி | 2,50,000 |
| 1 | வ்யாபாரக் கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 20,000 |
| 3 | தேயிலைத் தோட்டக் கம்பெனிகள் | 8,00,000 |
| 1 | தோட்டக் கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 3,00,000 |
| 2 | நிலக்கரிச் சுரங்கக் கம்பெனிகள் | 1,20,000 |
| 10 | | 16,10,000 |

# ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### Sunflower.

**ஸூர்யகாந்தி.**—நமது ராஜதானியில் ஸூர்யகாந்திச்செடி விசேஷமாக அலங்காரார்த்தமாகத்தான் தோட்டங்களில் பயிர் செய்யப்படுகிறது. இந்தப் பயிரால் வேறு ப்ரயோஜனம் நாம் அடைவதில்லை. கிழக்கு ஐரோப்பாவிலும், மத்யஐரோப்பாவிலும் இது விசேஷமாய் ஒரு எண்ணெய் வித்துப்பயிராக ஸாகுபடி செய்யப்படுகிறது. ஸூர்யகாந்தியில் பல தினுஸுகள் உண்டு. அவைகளுள் ரொம்பச்லாக்யமானது 'ஜெயண்ட் ரஷ்யன்' என்னும் தினுஸாகும். ஸூர்யகாந்தி எல்லாவித நிலத்திலும் பயிராகும். ஆனால் சோளத்துக்கேற்ற நிலம் இதற்கு ரொம்ப ஏற்றதென்று சொல்லுகிறார்கள். நிலத்தை நன்றாய் உழுது நயமான புழுதியாக்கிவிடவேண்டும். காள்படாத புதியசாணி எருப்போட்டால அதிக விதைகள் கிடைப்பதில்லை. விதையும் நன்றாயிருப்பதில்லையாம். ஆகையால், முந்தின பயிருக்கு நல்ல எருவிட்டுப் பயிர்செய்து மாஸூல் எடுத்தபிறகு, ஸூர்யகாந்தியைப் பயிர்செய்தால் ஸௌகர்யமாயிருக்குமாம்.

ஸூர்யகாந்தியிலுள்ள விதையை எடுத்தபிறகு, தாள்களை மாடுகளுக்குத் தீனியாகப்போட்டு, அவைகளின் சாணத்தை நிலத்துக்கு இடுவதால், ஸூர்யகாந்தி பூமியிலிருந்து கிரஹித்த பயிருணவில் பெரும்பாகம் நிலத்துக்கே சேர்ந்துவிடும். இல்லாவிட்டால், ஸூர்யகாந்தித்தாளை சிறுதுண்டுகளாக நறுக்கி நிலத்தில்போட்டு, உழுதுவிட்டாலும், நிலத்தின் வளமை குறையாமலிருக்கும். ஒரு ஏகர் நிலத்துக்கு விதைக்க 15-ராத்தல் ஸூர்யகாந்தி விதை போதும். ஆனால் ரஷ்யாவில் ஒரு ஏக்கருக்கு 46-ராத்தல் விதை உபயோகிக்கிறார்கள். ரஷ்யாவில் ஒரு ஏக்கருக்கு 700-ராத்தல்முதல் 2000 ராத்தல்வரையில் ஸூர்யகாந்திவிதை கிடைக்கிறதாம். ஸாதாரண வளப்பமுள்ள நிலத்தில் 1200-ராத்தல் விதை கிடைக்கும்.

ஸூர்யகாந்திச்செடி பலகார்யங்களுக்கு உபயோகப்படுகிறது. அதை அடியோடு வெட்டி கால்நடைத்தீனியாக உபயோகிப்பதோடு, வெகுகாலம் கெடாமல் பதப்படுத்திவைத்து வேண்டும்போது மாடுகளுக்குப்போடலாம். ரஷ்யாவில 'ஸூர்யகாந்தித் தாள்களையும், விதையிலுள்ள உமியையும் அடுப்பெரிக்க உபயோகிக்கிறார்கள். எரித்தபின் கிடைக்கும் சாம்பலிலிருந்து பொட்டாஷ் என்னும் பொருளைத் தயார்செய்கிறார்கள். சாம்பலிலிருந்து பொட்டாஷ் தயார் செய்வதற்காக காகஸஸ் ப்ரதேசத்தில் அநேக தொழில்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஸூர்யகாந்தி விதையின் முக்ய உபயோகம் அதிலிருந்து எண்ணெய் எடுப்பதே. ரஷ்யர்கள் அந்த விதைகளை பச்சையாகவும், வறுத்தும் உப்பிட்டும், நாம் வேர்க்கடலை தின்பதுபோல், தின்கிறார்கள். இந்த விதையை அரைத்து மாடுகளுக்கும், கோழிமுதலிய பறவைகளுக்கும், கூடுகளில் வளர்க்கும் செல்லப் பறவைகளுக்கும் தீனியாகப் போடுகிறார்கள்.

ஸூர்ய காந்திப் பூவிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழில் ரஷ்யாவிலும் மத்ய ஐரோப்பாவிலுந்தான் விசேஷம். இதன் எண்ணெய் வெளுத்த மஞ்சள் நிறமாக இருக்கும். உயர்ந்த எண்ணெய் நெய்க்கு பதிலாகவும், சமையலிலும், உபயோகப்படுகிறது. மட்டமான எண்ணெய் ஸோப் செய்வதற்கும் அடுப்பெரிக்கவும் உதவுகிறது. ஜெர்மனியிலும் ரஷ்யாவிலும் இதை வார்னிஷ் செய்வதில் உபயோகிக்கிறார்களாம். எண்ணெய் எடுத்தபின் நிற்கும் பிண்ணாக்கு மாடுகளுக்கு விசேஷமாய்த் தீனியாக உபயோகப்படுகிறது. ரஷ்யாவிலிருந்து இது ஏராளமாய் டென்மார்க், ப்ரான்ஸ், ஸ்வீடன் முதலிய இடங்களுக்கு ஏற்றுமதியாகிறது.

### Human Hair.

**மனிதர்களின் தலைமயிர்.**—இப்போது நடந்துவரும் யுத்தத்தின் ஆரம்பத்தில் ஜெர்மனி தேசத்திலுள்ள ஹாம்பர்க் என்னும் பட்டணத்திற்கு முப்பது மூட்டை சீனருடைய தலைமயிர் அனுப்பப்பட்டது. அதை நடுவழியில் கைப்பற்றி லண்டன் நகரத்தில் ஏலம் போட்டார்கள். மயிரின் நீளத்துக்குத் தக்கபடி ராத்தல் ஒன்றுக்கு 8 அணா முதல் ரூ. 6—6—0 வரை விலைப்போயிற்றாம். ஜெர்மனி, ஆஸ்ட்ரியா என்னும் இவ்விரண்டு தேசங்களிலும் வ்யாபாரிகள் அதிகமாய் தற்காலத்தில் இந்த மயிரை விலைக்கு பிடிக்காத காரணத்தினால் சீனதேசத்து மனிதத் தலைமயிருக்கு விலை இறங்கியிருக்கிறது. ஸாதாரண காலங்களில் ஆஸ்ட்ரியா தேசத்தில்தான் இது அதிகமாய் செலவாகுமாம்.

பெண்களின் தலைமயிர் காற்றுக்குப் பறவாமல் தடுக்கவல்ல வலைகள் செய்யவும், இன்னும் அநேகவித ஸாமான்கள் செய்யவும், உபயோகப்படுகிறது. எண்ணெய் முதலிய வஸ்துக்களை வடிகட்டுவதற்கும், சட்டைகளினிடையில் லயனிங்குக்காகவும் தலைமயிர் அதிகமாய் செலவாகிறது.

## BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

### Oddities of the Number Nine.

9-என்னும் எண்ணின் விநோதங்கள்.—9-என்னும் எண்ணால் எந்த எண்ணைக் கொண்டு பெருக்கினாலும் பெருக்கி வந்த தொகையைக் கூட்டினால் 9-ஆகவே இருக்கும். உதாரணமாக $2 \times 9 = 18$; $1 + 8 = 9$. $3 \times 9 = 27$; $2 + 7 = 9$. $9 \times 11 = 99$; $9 + 9 = 18$; $1 + 8 = 9$. எவ்வளவு பெரிய எண்ணைப் பெருக்கினாலும் கடைசியில் 9-தான் வரும். உதாரணமாக $875 \times 9 = 7,875$; இதிலுள்ள எண்களைக் கூட்டினால் வருந் தொகை 27; இதிலுள்ள தொகையையும் கூட்டினால் 9 வருகிறது.

ஏதாவது ஒரு பெரிய எண்ணை எழுதி, அதை மறுபடியும் தலைகீழாய் எழுதி, இரண்டு தொகைகளிலும் பெரியதிலிருந்து சிறியதை கழித்தால், வரும் தொகை 9 அல்லது அதன் பெருக்குத் தொகையாயிருக்கும். உதாரணம். $5071 - 1705 = 3366$. கழித்து வந்த தொகையிலுள்ள எண்ணைக் கூட்டினால் 18 வருகிறது. அதிலுள்ள எண்களையும் கூட்டினால் 9-வருகிறது. இந்த மாதிரி எவ்வளவு பெரிய எண்ணை வைத்துக்கொண்டு கணக்குப் போட்டாலும் கடைசியில் வருவது 9-தான்.

ஏதாவது ஒரு பெரிய எண்ணை எழுதிக்கொள்ளவும். அந்த எண்ணிலுள்ள தனி எண்களைக் கூட்டி, கூட்டி வந்த தொகையை பெரிய-எண்ணிலிருந்து கழிக்கவும். கழித்து வந்த மிச்சத்திலுள்ள தனி எண்களைக் கூட்டினால் 9-வரும். உதாரணம். 74345; இதிலுள்ள எண்களை கூட்டினால் 23-வருகிறது. $74345 - 23 = 74,322$; $7 + 4 + 3 + 2 + 2 = 18$; $1 + 8 = 9$.

### Laziness.

சோம்பேறித்தனம்.—இல்லாமை. சோம்பேறிக்கு உரியது: விசனத்தைத் தவிர வேறொன்றும் அவனுக்குண்டாவதில்லை.

சோம்பேறித்தனம் சரீரத்துக்கு ஒரு பெரிய வ்யாதி. எப்படியென்றால் அதனால் மிகுந்த பாபமும், விசனமும், தொந்தரவும் உண்டாகின்றன

முதலாவது: உடம்பு வணங்காதவன் பிறரிடத்தில பொய் சொல்வதற்குப் பின் வாங்கமாட்டான். அதற்கு திருஷ்டாந்தமாக யாராயினும் அவனை ஒரு மனிதனிடத்திற்குப் போய் வரும்படி சொன்னால், உடனே அவன் வீட்டிலில்லையென்று சொல்லிவிடுகிறான். யாதாயினும் ஒரு வஸ்து கொண்டுவரும்படி சொன்னால் "அது அகப்படாது; எனக்குத் தெரியும்" என்று சொல்லுகிறான்.

இரண்டாவது: சோம்பேறி தனக்கு உத்ஸாகமாயிருப்பதைத்தான் அனுஸரிப்பான். வேலைக்கு அருகனல்ல. எப்பொழுது தன் வேலையை செய்கிறதில்லையோ, அவன் ஸொத்தும் ஸௌக்யானுபவங்களும் நாளுக்கு நாள் குறையும். கடைசியில் துஷ்டத்தனத்துக்கே அருகனாகிறான்.

மூன்றாவது: சோம்பேறிகள் பிறரை ஆச்ரயித்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருப்பார்கள். ஆகையினால் அவர்களுடையக்கூடிய வஸ்து ஸமீபத்திலிருந்தபோதிலும், பிறருதவியில்லாமல் அது அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

ஆனதினால் ஒவ்வொரு மனிதனும் தன் தன் அந்தஸ்துக்கு ஸம்பந்தமான வேலையில் முயற்சியுடன் பிரவர்த்திக்க வேண்டியது.—விவேக சிந்தாமணி.

### Deep Wells.

ஆழமான கிணறுகள்.—தென்னாப்ரிக்காவிலுள்ள ஒரு கிணறு 8000-அடிக்கு மேல் ஆழமுள்ளதாம். ஜெர்மனியைச் சேர்ந்த அப்பர்-ஸைலீஷ்யா நாட்டில் 7350 அடி ஆழமுள்ள கிணறு ஒன்று இருக்கிறதாம். அமெரிகக ஐக்ய நாடுகளில் பிட்ஸ்பர்க் என்னும் ஊருக்கு 15 மைல் மேற்கில் ஒரு கிணறு இருக்கிறது. அது 7174 அடி ஆழமுள்ளதாம். இது இன்னும் ஆழமாய் தோண்டப்படுமென்று தெரிகிறது. இந்த கிணறு 6776 அடி ஆழத்தில் 145·8 டிக்ரி சூடாயிருக்கிறது. அமெரிக்காவில் 1 மைல் ஆழத்துக்கு மேல் உள்ள கிணறுகள் இன்னும் 2-இருக்கின்றனவாம்

### A Silver Carriage.

வெள்ளி வண்டி.—பாவ்நகா மகாராஜா ஒரு லக்ஷ ரூபாய் செலவுசெய்து வெள்ளியினால் ஒரு வண்டி செய்திருக்கிறார் அது பம்பாயிலுள்ள வண்டி பேட்டைக்காரர் மிஸ்டர் பெஸ்டான்ஜியால் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது அது பாவ்நகரில் காட்சிப் பொருள்போல் வைக்கப்பட்டிருக்கின்றது. அதனை பார்க்க விருப்பமுடையோர் 4-அணா டிக்கட் வாங்கிக் கொண்டு பார்த்தல் வேண்டும். இவ்வாறு வசூலாகும் பொருள் பம்பாய் யுத்த நிதிக்குச் சேர்க்கப்படும்.

## LADIES' PAGE.
## ஸ்த்ரீகள் பக்கம்.

### A Heroic Woman.

ஒரு தைர்யமுள்ள ஸ்த்ரீ.—இங்கிலண்டிலுள்ள ஒரு ஆஸ்பத்ரியில் டாக்டர் டெய்லர் என்பவர் ஸோல்ஜர்களுக்கு விஷக்காற்றால் ஏற்படும் வ்யாதிகளுக்கு ஒரு மருந்து கண்டுபிடித்தார். ஆனால் அது நல்மருந்தா அல்லவா என்று நிச்சயிக்க அவ்யாதியால் வருந்தும் ஒரு மனிதர் தேகத்தில் அந்த மருந்தை ரத்தத்தின் மூலமாய்ச் செலுத்தவேண்டும். அதற்குத் தக்க மனிதர் ஒருவரும் கிடைக்கவில்லை. முன்பு இந்தியாவில் ஒரு மாகாணத்துக்கு கவர்னராயிருந்த ஸர் ஹென்ரி டேவிஸ் என்பவருடைய கடைசி புத்ரியாகிய மிஸ் மேரி டேவிஸ் என்பவள் இதையறிந்து, தானே அந்த மருந்தைப் பரீக்ஷித்தறிவதாக எண்ணி, விஷக்காற்றை நிறைய உட்கொண்டு, பிறகு டாக்டருக்குச் சொல்லியனுப்பினள். டாக்டர் வந்ததும், விஷயத்தையறிந்து ஆச்சர்யமடைந்து அவளுக்குத் தாம் கண்டுபிடித்திருந்த மருந்தை ப்ரயோகம் செய்தார். மருந்து பிடித்து அவள் ஸ்வஸ்தமாக சிலமணி நேரம் செல்லும். அது வரையில் எல்லாருக்கும் கவலையாகவே யிருந்தது. ஏனென்றால் மருந்து பலிக்காவிட்டால் அவள் வீணில் இறந்துவிடுவாள். ஆனால் 24-மணி நேரம் சென்றதும் அவள் ஸ்வஸ்தமடைந்தாள். அவள் தேகம் ரொம்ப பலஹீனமாயிருந்தது. அவள் ஸ்வஸ்தமடைந்ததால் பல ஸோல்ஜர்களுக்கு கதிமோக்ஷம் மேற்பட்டது. ஜெர்மானியருடைய விஷக்காற்றால் மரணவஸ்தையிலிருக்கும் ஸோல்ஜர்களுக்கு இம்மருந்தை உபயோகிக்கலாம். தன்னுயிரையும் லக்ஷ்யம் செய்யாமல் இந்த தீரமான செய்கையைச் செய்த இந்தப் பெண்மணிக்கு சக்ரவர்த்தி ஸன்மானமளிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

### Infant Mortality.

சிசு மரணம்.—சிசுமரணம் அதிகமாவதற்கு அநேக காரணங்கள் இருக்கின்றனவென்று 'ப்ராக்டிகல் மெடிஸன்' என்னும் வைத்ய பத்ரிகை எழுதுகிறது. நமது நாட்டில் ஸ்த்ரீகளில் பெரும்பாலார் கல்வியறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். பெரும்பான்மையான குழந்தைகளுக்குப் பால் அகப்படுவது கஷ்டம். கிடைத்தாலும், அது சுத்தமாயிருப்பதில்லை. வீட்டின் ஆகாரம் த்ருப்திகரமா யிருப்பதில்லை. ஆகாரவஸதிகள் ரொம்ப சீர்கேடாயிருக்கின்றன. பெற்றோர்கள் ரொம்ப ஏழையாயிருப்பதும் சிசு மரணத்துக்கு ஒரு காரணம் தான். எல்லாவற்றிலும் முக்யமானது தாய் தந்தையரின் அறிவின்மையே. அவர்களுடைய மூடத்தனத்தால் அநேகம் குழந்தைகள் நோய்க்கு ஆளாகின்றன. தாய்மார்களுக்குத் தக்க கல்வி கற்றுக்கொடுத்தால் சிசு மரணம் குறைவுபடுமென்று சொல்லலாம். தற்போது பிரிட்டனில் தாய்மார்களுக்கும் சிசுக்களுக்கும் உதவி செய்ய 500 பாடசாலைகள் இருக்கின்றன. இந்தியாவிலும் ஜன நெருக்கமுள்ள பட்டணங்களில் இப்படிப்பட்ட ஸ்தாபனங்களை ஏற்படுத்தி, தாய்மார்களுக்கு குழந்தைகளைப் பராமரிக்கும் முறைகளைக்கற்பிக்க தாதிமார்களை நியமித்தால், இந்தியாவில் சிசுமரணம் குறைவடையக்கூடும்.

சிசு மரணத்தைக் குறைக்க பற்பல தேசங்களில் பற்பலவிதமாய் முயற்சி எடுத்து வந்திருக்கிறார்கள். இங்கிலண்டிலுள்ள ஹெட்டர்ஸ்பீல்ட் என்னும் ஜில்லாவில் ஒரு கனவான், ஒரு வர்ஷத்துக்குமேல் ஜீவித்திருக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு பவுன் கொடுப்பதாகச் சொன்னார். அப்படிச் சொன்ன வர்ஷத்தில் 112 குழந்தைகள் பிறந்தன. அவற்றுள் 107 குழந்தைகள் ஒருவர்ஷத்துக்குப் பிறகும் ஜீவித்திருந்தனவாம். நியூஸீலண்டில் கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்ட முயற்சிகளால் சிசு மரண விகிதம் ரொம்பக் குறைந்துபோய் இப்போது 100-க்கு 5-வீதமாயிருக்கிறதாம்.

### Sugar Ladu.

சர்க்கரைலாடு.—அரைப்படி அரிசியை ஊறவைத்து ஸன்னமாக மாவரைத்து வைத்துக்கொள்ளவேண்டியது. அடுப்பில் பாணலியைப் போட்டு 10-பலம் நெய்யைவிட்டுக் காய்ச்சவேண்டியது. பிறகு அந்த நெய்யில் வைத்திருக்கும் மாவை கொஞ்சம் சிவக்கும்படி பக்குவமாய் வறுத்துக்கொள்ளவும். வேறு 10-பலம் நெய்யில் 20-பலம் சீனிசர்க்கரையை ஒரு தாம்பாளத்தில் போட்டுப் பிசைந்துகொள்ளவேண்டும். ஏலரிசிப்பொடி கால்பலம், வறுத்தவாதம்பருப்பு 3-பலம், கற்கண்டுதூள் 3-பலம் இவைகளையும் மேலே வறுத்து வைத்திருக்கும் அரிசிமாவையும் தாம்பாளத்தில் வைத்திருக்கிற சர்க்கரை கலந்த நெய்யில்கொட்டி, நன்றாய்ப் பிசைந்து எலுமிச்சங்காயளவு உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவேண்டியது.—பெண்கல்வி.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### A Clever Russian Officer.

ஒரு ஸாமர்த்யமுள்ள ரஷ்யாராணுவ உத்யோகஸ்தர்.—லெப்டினெண்ட் ஆல்டாப என்னும் ரஷ்ய ராணுவ உத்யோகஸ்தர் ஒரு ஸமயம் ஆஸ்ட்ரியர்களால் கைதி செய்யப்பட்டு, யுத்தக் கைதிகளோடு வைக்க பட்டிருந்தார், அபபடி யிருககையில் அவர் ஆஸ்ட்ரிய அதிகாரிகளை ஏமாற்ற நினைத்து, தாம் துருக்கியர்களுக்குப் பிறந்தவரென்றும, மகம்மதியரென்றும், துருக்கிய ஸேனையுடன் சேர்ந்து யுத்தம் செய்ய ஆவலாயிருக்கிறதென்றும் ஆஸட்ரிய உதயோகஸ்தர்களிடம சொன்னார். அதன் மேல் அவர்கள் அவரை வீயன்னாவிலுள்ள துருக்கிய தூதரிடம் அனுபபினார்கள். துருக்கியதூதர் அவரைக்கண்டு, அவருடைய பிறப்பு, மதம் ஆகிய இவைகளைப் பற்றிக் கேட்டு, அவர் மகம்மதியர்தானென்று நிச்சயித்து, அவரைப் பற்றி கான்ஸ்டாண்டிநோபிளிலுள்ள துருக்கிய யுத்த மந்த்ரிக்கு எழுதினார்.

அதன்மேல் ஆஸ்ட்ரிய அதிகாரிகளும் துருககிய அதிகாரிகளும் அவரை ரொம்ப மரியாதையாக நடத்தினார்கள். துருக்கிய தூதா அவருககு உயர்ந்த குல்லா கொடுத்து அவருக்காக ஒரு விருந்து நடத்தினார். பிறகு அவர் மார்ஷல் வான் டெர்கோல்ட்ஸ் என்னும் பெரிய ஜெர்மன் ஜெனராலைக்கண்டுபேசி, அவருடன் கூட இருந்து போஜனம் செய்துவிட்டு துருக்கிய ஸைனயத்தில் சேர்ந்து யுத்தம் செய்வதற்காக கான்ஸ்டாண்டிநோபிளுக்குப் புறபபட்டுப போனார்' போகும்போது ருமேனியா வழியாக ரெயிலில் போக நேரிட்டது. அப்படிப் போகையில் அவருடன் கூடவந்த ஆஸ்ட்ரிய உத்யோகஸ்தர்கள் வேறு பக்கமாகப் பார்த்துக கொண்டிருக்கையில், அவர் வண்டியிலே நடந்து கடைசி வண்டியின் கடைசிக் கம்பார்ட்மெண்டுக்குப போய் அங்கிருந்து வண்டியை விட்டிறங்கி, ஸ்டேஷனில் ஒரு வண்டி பேசி ரஷ்ய தூதர் வஸிக்கும் ஆபீஸுக்கும், அங்கிருந்து ரஷ்யாவுக்கும் போய் தமது ஸைன்யத்தில் சேர்ந்து கொண்டார்.

### The Editor and the Subscriber.

பத்ராதிபரும் சந்தாதாரரும்.—ஒரு பத்ராதிபர் தம் சந்தாதாரர் ஒருவரிடமிருந்து ஒரு புஸ்தகத்தைப் பெற்றுச் சென்றார். அது ஐந்துரூபா விலையுள்ளது. அதைப் படிக்க நேரமின்றி மூனறு வர்ஷம் ஒரு மூலையிற் போட்டுவைத்தார். இதற்கிடையே புஸ்தகம தந்தவர் கடிதங்கள் அனுபபி உடனே திருப்பித்தராவிட்டால் கோர்ட்டு மூலமாய் வாங்கப்படுமென்று நோட்டீஸும் கொடுத்துவிட்டார். பார்த்தார் பத்ராதிபர்! அந்த மனுஷ்யன் ஏதேனும் சந்தா பாக்கியுண்டோ என்று கணக்குகளைப் பார்க்கவே ரூ. 4—8—0 வரவேண்டியிருந்தது. அந்தப்பணம தந்தால் புஸ்தகம் கிடைக்குமென்று எழுதினார. அநதப புஸ்தகத்தை அந்த பாக்கிக்கு வி. பி. யில் அனுபபும்படி கடிதம வந்தது. பாக்கி ரூ. 4—8—0. புஸ்தக தபாற்செலவு ஆறணா; ஆக ரூ. 4—14—0 க்கு புஸ்தகத்தை வி. பி. யில் அனுபபினார். வி பி. பணமும் வந்துவிட்டது. புஸ்தகக்காரன் தான் திரும்பவும் புஸ்தகத்தைப் பெற்றுவிட்டதாகத் தனது நண்பனிடம் சொல்லிக்கொள்ள, அவனது நண்பன் அப்பா! நீ பத்ராதிபரை விரோதம் செய்துகொள்ளாமல் அந்தப் புஸ்தகத்தை அவருக்கே தந்துவிட்டு, இப்போது வி. பி. க்குச் செலுத்திய ரூ. 4—14—0 வுடன் ஒரு இரண்டணாவையும் சேர்த்து ஐந்து ரூபாய்க்குப் புது புஸ்தகமாக வாஙகிக்கொண்டிருந்தால் எவ்வளவோ நலமாயிருக்குமே; பத்ராதிபர் நட்பும் கெடாதே, இவ்வளவு விரோதப்பட்டு இரண்டணா லாபம் தேடியது ஒரு சிறப்பாமா என்று கூறினான். பத்ராதிபரோ, இவ்விதம் பலரிடமிருந்து பல ஸாமான்களை வாங்கி வைத்திருந்தால், அவர்கள் சந்தா பாக்கி தராதபோது அந்த ஸாமானை வி. பி. யில் அனுப்பி வஸூலித்துவிடலாம் என்று தமக்குள் ஸந்தோஷப்பட்டுக் கொண்டார்.

### The Barber's Dog.

அம்பட்டனின் நாய்.—ஒரு அம்பட்டன் ஒருவனுக்கு க்ஷவரம் செய்துகொண்டிருக்கையில் அமபட்டனின் நாய், அவன் வேலைசெய்வதைக் கவனித்த வண்ணமாக விருந்தது. இதை கவனிதது க்ஷவரம் செய்துகொள்ள வந்தவன் பரியாரியைப் பார்த்து "நல்லநாய் இது!" என்றான்.

" ஆம் நல்ல நாயதான் "

" நீ க்ஷவரம் செய்வதை கவனித்துக்கொண்டிருப்பதில் அதற்கு ரொம்ப ஸந்தோஷம் போலும் ? "

" அதல்ல ஐயா ; பாருங்கள், நான சில ஸமயம் மயிரைக் கத்தரிக்கும்போது, தவறிப்போய் காதைக் கொஞ்சம கத்தரித்துவிடுவேன், அதை உத்தேசித்து அது அவ்வளவு கவனமாயிருக்கிறது."

## CURIOSITIES.

## விநோதங்கள்.

### An Infant Marriage.

ஒரு சிசு விவாகம்.—வடக்கே விண்ட் மாகாணத்தில் 12 மாஸம் வயஸுள்ள ஒரு ஆண் குழந்தைக்கு 10-வயஸுப் பெண் கல்யாணம் செய்து கொடுக்கப் பட்டதாக ஸமாசாரம் எட்டுகிறது. பெண்ணைப் பெற்றோரும் பிள்ளையைப் பெற்றோரும் மகம்மதியர்களாம். பெண்ணின் தகப்பன் துர்நடத்தையால் தன் ஸொத்தெல்லாவற்றையும் இழந்து பணத்துக்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். கனயாசுல்கம் ரொம்ப கிடைக்குமென்ற எண்ணத்துடன், அவன் தனது பெண்ணை ஒரு வயஸுக் குழந்தைக்குக் கல்யாணம் செய்து கொடுத்தான். பெண்ணின் தாயார் இதை ஸகியாமல், கோர்ட்டில் பிராதுசெய்தாள். இப்படி அநீதமான கல்யாணங்கள் நடந்தால் கோர்ட்டார் அதில் பரவேசித்து ரத்துசெய்ய மகம்மதிய சட்டம் இடங்கொடுக்கிறது. பெண்ணைப்பெற்ற தாயார்கொடுத்த பிராதை விசாரித்த கோர்ட்டார், இந்தக் கல்யாணம் கொடூரமானதென்றும், வெறுக்கத் தக்கதென்றும் சொல்லி, கல்யாணத்தை ரத்துசெய்ததோடு, கோர்ட்டுசெலவை பெண்ணின் தகப்பனும் குழந்தையின் தகப்பனும் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்புக்கொடுத்தார்கள்.

### A Dream Come True.

கனவின்பலன் கைமேல்கிட்டியது.—வங்காளத்திலுள்ள ராஜஷாஹி யென்னுமிடத்திலிருந்து ஒரு அதிசய ஸம்பவம் எட்டியிருக்கிறது. உள்ளூர் கலாசாலையில் படிக்கும் கணேந்திர நாத் டேயென்ற மாணவனுக்கு ரங்கப்பூரிலிருந்து ஒரு கடிதம் கிடைத்ததாம். அக்கடிதம் அவனுடைய தாயாரெழுதியது. அக்கடிதத்தில்-முதல்நாளிரவு தன் மகன் பத்மாவென்னும் நதியில் ஸ்நானம்செய்து கொண்டிருக்கும்பொழுது முழுகிப்போய் விட்டாற்போல கனாக்கண்டதாகவும், அவ்வாறு அந்நதியில் ஸ்நானஞ் செய்யப்போக வேண்டாமென்றும் எச்சரிக்கைசெய்து எழுதியிருந்தாள். அதை மகன் நம்பிக்கையற்ற வார்த்தை என்று அசட்டைசெய்துவிட்டான். மறுநாள் அவன் கலாசாலை மாணாக்கர்கள் சிலருடன் பத்மாநதியில் ஸ்நானஞ்செய்யப் போனதாகவும், அவன் ஸ்நேகிதர்களால் உதவிசெய்யப்பட்டும் முழுகி இறந்துபோனதாகவும் வடதேசத்து பத்ரிகை ஒன்றால் வெளியாகிறது.

### Taking Oath in Court.

கோர்ட்டில் ஸத்யம் செய்தல்.—லண்டன் போலீஸ் கோர்ட்டில் ஒரு இந்தியா ப்ரமாணம் செய்யும்போது, தாம் சொல்லுவது உண்மையென்று ஸ்தாபிப்பதற்காக மெழுகுவர்த்தி தீபமொன்றை வாயால் ஊதி அணைத்துவிடுவதாகச் சொன்னார். இவ்விஷயம் லண்டனிலுள்ள பலருக்கு விநோதமாயிருந்தது. இந்த வழக்கம் இந்தியாவில ஸாதாரணம்.

சீனதேசத்தில கோர்ட்டில் பிரமாணஞ் செய்வதற்கு மூன்று வழிகளுண்டு. அவைகளில் மேற்கூறிய வழி ஒன்று. சீனர்கள் ப்ரமாணஞ் செய்யும்போது, தாம் சொல்லுவது உண்மையென்று ஸ்தாபிப்பதற்காக ஒரு கோழியின் தலையை வெட்டுகிறதோ அல்லது ஒரு பீங்கான் தட்டை உடைக்கிறதோ, அல்லது ஒரு மெழுகுவர்த்தி தீபத்தை ஊதி அணைத்துவிடுகிறதோ, ஏதாவது ஒன்றை செய்து ப்ரமாணஞ் செய்வார்கள். அதனுடைய தாத்பரிய மென்னவென்றால, தாங்கள் மேற்கூறிய மாதிரி ப்ரமாணஞ்செய்து ஏதாவது பொய் ஸத்தியம்செய்யும் பக்ஷத்தில், அதினாலுண்டாகக் கூடிய கஷ்டத்திற்கோ ஸுகத்திற்கோ, பாப புண்யத்திற்கோ தாங்கள் பாத்யப் படுவார்களென்கிற அபிப்ராயம் தான். கோழியின் தலையை வெட்டுவது இங்கிலண்ட் போன்ற நாகரீகமுள்ள தேசத்திற்கு ஏற்றதாயிராததால், லண்டனிலுள்ள ஈஸ்டு எண்டு கோர்ட்டுகளில், ஸாக்ஷியஞ் சொல்லவரும் சீனர்கள், பீங்கான் தட்டுகளை உடைப்பதோ அல்லது மெழுகுவர்த்தி தீபத்தை அணைத்துவிடுவதோ வழக்கம்.

### A Silent Litigant.

மௌன விரதம்பூண்ட ஒரு வழக்காளி.—ஸமீபத்தில் ஒரு ஸந்யாஸி கல்கத்தாவிலுள்ள ஒரு கோர்ட்டில் ஒரு பையன்மேல் திருட்டுக்குற்றம் சாட்டினார். கோர்ட்டில் அவர் வாயைத்திறந்து பேசவேயில்லையாம். சைகைகளாலேயே விஷயங்களைத் தெரிவித்தாராம். குற்றவாளியும் குற்றம் ருசுவாகி தண்டனையடைந்தான்.

### Pig Gives Birth to an Elephant.

பன்றி யானைக் குட்டியை ஈன்றது.—மதுரையில் ஒரு பன்றி தும்பிக்கையுடைய முகத்தோடும் உருண்டை வடிவமாய் இருந்த குந்தாணிக் கால்களோடும் ஒரு குட்டி போட்டதாகவும், அந்தக் குட்டி இறந்துவிட்டதாகவும் தெரியவருகிறது.

## MISCELLANEOUS NEWS.

## நாநா ஸங்கதி.

### Leaving the World together.

**ஸதிபதிகள் இருவரும் மாண்டது.**—தற்காலம் யூனிவர்ஸிட்டிகள் நடத்தும் பரீக்ஷைகள் ரொம்ப கடுமையாயிருப்பதால் அநேகர் தவறிப்போகிறார்கள். அவர்களில் சிலர் தாங்கள் பரீக்ஷையில் தேறமுடியாமல் போனதைக் குறித்து விசனப்பட்டு உயிரை மாய்த்துக்கொண்டதாக பற்பல இடங்களிலிருந்து ஸமாசாரமெட்டுகிறது. கல்கத்தாவைச் சேர்ந்த ஹௌராவிலுள்ள ஒரு மாணவன் சிலகாலமாக தனது மாமனாருடைய பொருளுதவியைப்பெற்று பீ.ஏ. பரீக்ஷைக்கு வாசித்துக்கொண்டிருந்தான். இந்த வர்ஷம் அவன் பி.ஏ. பரீக்ஷையில் தவறிவிட்டான். இதனால் மனமுடைந்த அந்த மாணவன் ஒருநாள் கடையில் 3 தோலா அபின் வாங்கி வந்து, தானும் தனது பால்ய மனைவியுமாக அதைத் தின்றார்கள். மறுநாள் அவர்கள் குற்றுயிரா யிருந்தபோது பையனது தகப்பன் அதையறிந்து, வேண்டிய வைத்யம் செய்தும் பயன்படாமல் இருவரும் இறந்துபோனார்கள்.

பையனுடைய மனைவி குற்றுயிராயிருக்கும்போது, தானிறந்ததும் தன்னை புருஷனுடன் சேர்த்து தகனம் செய்ய வேணுமென்று கேட்டுக்கொண்டதன்மேல், அப்படியே அவன் இறந்ததும் இருவரையும் சேர்த்து தகனம் செய்தார்கள். ராதாராணி யென்னும் அந்தப் பெண் தனது புருஷனிடத்திருந்த அன்பால், புருஷனிறந்தபின் பூமியிலிருக்க மனமின்றி தானும் அபின் தின்று இறந்துவிட்டான்.

### The Cost of the War.

**யுத்தச் செலவு.**—இந்த மாஸத்து வியாஸங்கள் ஒன்றில் இரண்டு வர்ஷத்துக்கு யுத்தத்துக்காகக்கூடிய செலவை ஒருவாறு மதிப்பிட்டு எழுதியிருக்கிறோம். அமெரிக்காவில் வெளியாகும் ஒரு பிரபலமான பத்திரிகை ஜூலை மாஸத்தோடு முடியும் 2-வர்ஷத்துக்கு என்ன செலவாயிற்றென்பதைப்பற்றி கணக்குகள் எழுதி வெளியிட்டிருக்கிறது. அந்தப் பத்திரிகையின்படி இதுவரையில் எல்லா யுத்த தேசங்களுக்கும் மொத்தத்தில் 15,000 கோடிரூபாய் செலவழிந்திருக்கிறதென்று தெரிகிறது. இதில் 9,900 கோடி ரூபாய் இங்கிலண்டுக்கும் அதன் நேசஅரசுகளுக்கும் ஏற்பட்ட செலவாகும். 5,100 கோடி ரூபாய் ஜெர்மன் கக்ஷியாருக்கு சேர்ந்த செலவாகும். யுத்த தேசங்கள் இதுவரையில் 12,000 கோடி ரூ. கடன்வாங்கி யிருக்கின்றன. ஏற்கனவே யுத்தத்துக்கு முன் மொத்தத்தில் 8,100 கோடிரூபாய் கடன் இருந்தது. இந்த யுத்தத்துக்காக வாங்கியிருக்கும் கடனையும் சேர்த்தால் அவைகளுக்குள்ள மொத்தம் கடன் 20,100 கோடி ரூபாயாகும்.

யுத்தத்தில் சேராத தேசங்கள் தங்கள் ஸைன்யங்களை சேகரித்து யுத்தத்துக்குத் தயாராக வைத்திருப்பதற்காக 150 கோடி ரூபாய் செலவழித்தன.

### Sanitation Grants.

**ஸுகாதார கிராண்டுகள்.**—மதராஸ் கவர்ன்மெண்டார் இந்த ராஜதானியிலுள்ள சில முனிஸிபாலிடிகளுக்கும், ராமநாதபுரம் ஜில்லாபோர்டுக்கும் ஜலவஸதிக்காகவும் வடிகால் ஏற்பாட்டுக்காகவும் 5,21,534-ரூபாய் கிராண்டாகக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். இவைகளுள் பெரியகுளம் முனிஸிபாலிடிக்கு ஜலவஸதி சீர்திருத்தத்துக்கு 10,000 ரூபாயும், சேர்வைக் கானல் ஜலவஸதிக்கு 1925-ரூபாயும், மதுரையில் ஜலவஸதி ஏற்பாட்டை சீர்திருத்த 1-லக்ஷம் ரூபாயும், நாகப்பட்டணம் ஜலவஸதிக்காக 1357-ரூபாயும், வேலூரின் சாக்கடை வடிகால் வஸதிக்காக 47,400-ரூபாயும், கும்பகோணம ஜலவஸதி ஏற்பாட்டுக்காக 15,000-ரூபாயும் செங்கல்பட்டில் ஜலவஸதிக்காக 30,000 ரூபாயும், ராமேச்வரத்துக்கு ஜலவஸதி ஏற்படுத்த ராமநாதபுரம ஜில்லாபோர்டுக்கு 60,000 ரூபாயும் கொடுக்கப்படும்.

### Lalgudi Educational Exhibition.

**லால்குடி வித்யா காட்சிசாலை.**—லால்குடி வித்யா காட்சிசாலை 1916-ம்வருஷம் ஸெப்டம்பர்மாஸம் 16-ம் தேதி காலையில், சென்னை நிர்வாக ஸபையின் மெம்பராகிய கனம் ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயரவர்களால், யுத்தஸகாய நிதிக்காக, திருச்சிக் கோட்டையிலுள்ள நாஷனல் ஹைஸ்கூலிலும் ஸாலிஹாலிலும் திறக்கப்பட்டு, 6-நாள் நடத்தப்படும். ஸெப்டம்பர்மாதம் 10-ம் தேதிவரைக்கும் திருச்சிக்கோட்டையிலுள்ள லால்குடி வித்யா காட்சிசாலை ஆர்கனைஸருக்கு ஸாமான்களை காட்சியில்வைக்க அனுப்பலாம்.

### A Son to the Pudukotth's Raja.

**புதுக்கோட்டை ராஜாவுக்கு புத்ரன் பிறந்தது.**—புதுக்கோட்டை ராஜா மணம் செய்துகொண்டிருக்கும் ஆஸ்ட்ரேலிய ராணிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்திருப்பதாக ஆஸ்ட்ரேலியாவிலுள்ள ஸிட்னியிலிருந்து புதுக்கோட்டை ராஜா தமது திவானுக்கு தந்தியடித்திருக்கிறார்.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பிய யுத்தம்.

**ஜூலை 31-தேதி.**

ப்ரிட்டிஷ் துருப்புகளும் ப்ரெஞ்ச் துருப்புகளும் சேர்ந்து ஸோம் நதியிலிருந்து டெல்வில் காடுவரையில் எதிரிகளைத் தாக்கின. அவைகள் சில இடங்களில் முன் சென்றிருக்கின்றன. ப்ரெஞ்ச் துருப்புகள் ஹெம் என்னுமிடத்துக்கு வடக்கில் உள்ள காட்டையும், மொனுகு தோட்டத்தையும் பிடித்தன.

கோவல்-ஸர்னி ரெயில்வே ஸ்டாகாட் நதியைக்கடக்குமிடத்தில் ரஷ்யர்கள் அந்த நதியைத் தாண்டிப்போயிருக்கிறார்கள்.

**ஆகஸ்ட் 1-தேதி.**

ப்ரெஞ்ச் துருப்புகள் ப்ளூரி பாதேசத்தில் முன் சென்று வருகின்றன. இட்டாலியர்கள் அடிஜ் பள்ளத்தாக்கிலும் ஆஸ்டிகோ பள்ளத்தாக்கிலும் எதிரியைத் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கிழக்கு ஆப்ரிக்காவில் ப்ரிட்டிஷ் துருப்புகள் டோடோமா என்னுமிடத்தைப் பிடித்திருக்கின்றன.

**2-தேதி.**

இட்டாலியர்கள் டோலோமைட் பாதேசத்தில் பானிபெக்கிஸ் என்னும் க்ராமத்தைப் பிடித்தார்கள். ரஷ்யர்கள் கோவலுக்கு 18 மைல் தூரத்தில் வந்திருக்கிறார்கள்.

ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவில் ப்ரிட்டிஷ் துருப்புகள் பங்கனி துறைமுகத்தைப் பிடித்திருக்கின்றன.

**3-தேதி.**

ப்ரெஞ்ச் துருப்புகள் ஸோம் நதிக்கு வடக்கில் எதிரியின் பலமாய் பாதுகாக்கப்பட்ட ஒரு இடத்தைப் பிடித்தன.

ஜெர்மானியர்கள் வெர்டூன் ப்ரதேசத்தில் வாக்ஸிலும் செனுயிலும் முன் சென்றார்கள்.

**4-தேதி.**

ப்ரெஞ்ச் துருப்புகள் வெர்டூனில் ப்ளூரி என்னும் க்ராமத்தையும் அதற்குப் பக்கத்திலுள்ள சில பாதுகாப்பு வேலைகளையும் பிடித்தன.

ஸ்டாகாட் நதியோரமாக பலமாக யுத்தம் நடக்கிறது. ரஷ்யர்கள் ஏர்விசத்துக்கும், டையலக்குக்கும் நடுவிலுள்ள ஆக்னட் என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

**5-தேதி.**

வெர்டூனில் யுத்தம் ரொம்ப கடுமையாய் நடக்கிறது. ப்ரெஞ்ச் துருப்புகள் தியாமாண்டுக்குப் பக்கத்திலுள்ள ராணுவ வேலைகளைக் கைப்பற்றின. ஜெர்மானியர்கள் ப்ளூரி என்னும் க்ராமத்தைப் பிடித்தார்கள். ரஷ்யப் போர்முகத்தில் ப்ராடிக்குத் தெற்கில் யுத்தம் பலமாக நடக்கிறது. ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவில் பெல்ஜியர்கள் உஜிஜி என்னும் பட்டணத்தைப் பிடித்தார்கள்.

**7-தேதி.**

ரஷ்யர்கள் ப்ராடிக்கு 20 மைல் தெற்கில் 6 க்ராமங்களையும் சில குன்றுகளையும் 5500 கைதிகளையும் பிடித்தார்கள்

**8-தேதி.**

ஜெர்மானியர்கள் போவியர்ஸ் என்னுமிடத்தைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். வெர்டூனில் யுத்தம் நடந்து வருகிறது. இட்டாலியர்கள் இஸான்ஸோ போர்முகத்தில் மான்பால்கோனுக்குப் பக்கத்தில் சில எதிரிக் கிடங்குகளைப் பிடித்தார்கள். ப்ராடிக்குத் தெற்கில் விரிதக்தியோரமாக பலமான யுத்தம் நடக்கிறது.

ரஷ்யோ—ஜபானிய யுத்தத்தில் போர்ட் ஆர்தரில் சண்டைசெய்த வைஸ்-அட்மிரல் கோல்ட்சாக் என்பவர் ரஷ்யாவின் கருங்கடல் படைக்குத் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார். இவர் மற்றெல்லா ரஷ்ய அட்மிரல்களையும்விட வயதில் தாழ்ந்தவராம்.

**9-தேதி.**

ப்ரெஞ்ச துருப்புகள் ஸோம் நதிக்கு வடக்கில் 139-வது குன்றுக்குக் கிழக்கில் முன் சென்று ஹெம் என்னுமிடத்துக்கு வடக்கிலுள்ள ஒரு காட்டைப்பிடித்தன. வெர்டூனில் ரொம்ப கடுமையாக யுத்தம் ஆரம்பித்திருக்கிறது. சில இடங்களைப் பிடிக்க ஜெர்மானியர்கள் ரொம்ப முயன்றும் பயன்படவில்லை.

இட்டாலியர்கள் இஸான்ஸோ போர்முகத்தில் மாண்டிஸாபோடினோ, ஸான்மிசிலி என்னுமிடங்களைப் பிடித்திருக்கிறார்கள். அவர்கள் கொரிஸியா என்னும் பட்டணத்தைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் தென்கிழக்கு கலீஷ்யாவில், டைனிஸ்

லாவுக்கு 12 மைல் கிழக்கிலுள்ள துமாக்ஸ் என்னும் பட்டணத்தையும், ஓட்டினியா என்னுமிடத்தையும், ஸ்டானிஸ்லாவுக்கு 12 மைல் தூரத்தில் ஒரு க்ராமத்தையும் பிடித்தார்கள்.

10-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஹெம்காட்டில முன்சென்றன. வெர்னேில் பலமாக யுத்தம் நடந்தது. ஜெர்மானியர்கள் தியாமாண்டில் சற்று முன் சென்றிருக்கிறார்கள். இட்டாலியர்கள் இஸான்ஸோ நதியைக்கடந்து கோரிவியாவைப் பிடித்து அக்கரைக்குப்போயிருக்கிறார்கள். 10000-எதிரிகள் கைதிசெய்யப்பட்டார்கள்.

ரஷ்யர்கள் தெற்கு கலீஷ்யாவில் முன்சென்றிருக்கிறார்கள். அவர்கள் ஸ்டானிஸ்லாவுக்கு 6-மைல் தூரத்திலுள்ள டிஸமியனிசாஸைப் பிடித்திருக்கிறார்கள்.

11-தேதி.

ரஷ்யர்கள் தெற்கு கலீஷ்யாவில் ச்ரிப்ளின் என்னுமிடத்தைப பிடித்தார்கள். அவர்கள் கார்பபேதியன் மலையில் முன்சென்று வருகிறார்கள்.

12-தேதி.

இட்டாலியர்கள் டோபெர்டோ பீட பூமி முழுவதையும் பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் ஸ்டானிஸ்லாவையும், மொனஸ்டர்ஸ்ட்ஸ்காவையும் பிடித்ததோடு, 13000-எதிரிகளையும் கைதிசெய்தார்கள். அவர்கள் துருககியில் ட்ரெபிஸாண்டுக்கு மேற்கில் எரிலன் என்னும் பட்டணத்தைப பிடித்தார்கள். ப்ரெஞ்ச் துருப்புகள் பல்கேரிய எல்லை ப்ரதேசத்துக்குப் பக்கத்திலுள்ள டோரியன் என்னும் பட்டணத்தைப்பிடித்தன.

14-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஸோம்நதிக்குத் தெற்கில் 4-மைல் நீளமுள்ள போர்முகத்தில் எல்லா பாதுகாப்பு வேலைகளையும், கிடங்குகளையும் பிடித்ததோடு, மாரிபாஸ் என்னும் காமத்திலும் புகுந்திருக்கின்றன.

இட்டாலியர்களை ஆஸ்ட்ரியர்கள் பலமாகத் தடுத்துவந்தபோதிலும், இட்டாலியர்கள் டிவோலிக்கு வடக்கிலுள்ள 174-வது குன்றைப் பிடித்தார்கள். சென்ற 6-ந் தேதியிலிருந்து இதுவரையில் ரஷ்யர்கள் 15,392எதிரி ஸோல்ஜர்களைக் கைதிசெய்திருக்கிறார்கள் இந்தமாஸம் 1௳ முதல் 82202-ஸோல்ஜர்கள் ரஷ்யர்களால் கைதிசெய்யப்பட்டார்கள். ரஷ்யர்கள் போட் ஹேஸ்டே, மாரியான்போல் என்னும் ஊர்களைப் பிடித்திருக்கிறார்கள்

ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவில் ஜெனரல் ஸ்மட்ஸின் துருப்புகள ஜெர்மானியர்களை மாலாஞண்டோ என்னுமிடத்தில் தோற்கடித்தன.

15-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் கோரிவியாவைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். 'லாஸ்ஸோ' என்னும் ப்ரிட்டிஷ் டிஸ்ட்ராயர் டச்சுக் கடல்கரையோரமாக டார்ப்பிடோவால் தாக்கபபட்டோ மிதபபு வெடிகுண்டால் தாக்கப்பட்டோ மூழ்கிப்போயிற்று.

## INDIAN NEWS.

## இந்திய வர்த்தமானம்.

ஜூலை 26-தேதி.

**மைஸூர் யூனிவர்ஸிட்டி.**—முன்பு மைஸூரில் கௌன்ஸிலராயிருந்து வேலையிலிருந்து விலகியிருக்கும மிஸ்டா நஞ்சுண்டய்யா மைஸூா யூனிவர்ஸிட்டிக்கு முதல் வைஸ்சான்ஸராக நியமிக்கபபட்டிருக்கிறார்.

29-தேதி.

**காலஞ்சென்ற ஸர் டின்ஷா தேவார்**—பம்பாய் ஹைக்கோர்ட்டில் ஜட்ஜாயிருந்த ஸா டின்ஷா தேவார் சென்ற 4 மாஸ காலமாய் வ்யாதியாயிருந்து இன்று இறந்துபோனார்.

31-தேதி.

**போர்பந்தரில் இலவசக் கல்வி.**—பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த போர்பந்தர் ஸமஸ்தானத்து மைனர் ராஜாவின் 15-வது வர்ஷ தினத்தின் ஞாபகார்த்தமாக, அந்த ஸமஸ்தானத்தில் ப்ரைமெரிக் கல்வியை இலவசமாகக் கற்றுககொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஆகஸ்டு 5-தேதி.

**லேடி ஹார்டிஞ்ஜ் வைத்ய காலேஜ்.**—லார்ட் ஹார்டிஞ்ஜ் டெல்லியில் வெடிகுண்டால் தாக்கப்பட்டு காயமடைந்து பிறகு ஸ்வஸ்தமடைந்ததன் ஞாபகார்த்தமாக ஒரு நிதி சேர்க்கப்பட்டது. அதற்கு இப்போது 1½ லக்ஷம் ரூபாய் சேர்ந்திருக்கிறது லார்ட் ஹார்டிஞ்ஜ் அந்தப பணத்தைக்கொண்டு டில்லியில் ஸ்த்ரீகளுக்காக லேடி ஹார்டிஞ்ஜ் வைத்ய காலேஜும் ஆஸ்பதரியும் ஸ்தாபிக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். 1½ லக்ஷம் ரூபாயின வட்டியை ஆதாரமாகக்கொண்டு டெல்லியில் லேடி ஹார்டிஞ்ஜ் பேரால் ஒரு காலேஜும் ஆஸ்பத்ரியும் ஸ்தாபிககபபடும

12-தேதி.

**மிஸ்டர் பாலகங்காதா திலகர்.**—பூனாவாஸியாகிய மிஸ்டர் பாலகங்காதா திலகர் சில வருஷங்களுக்கு முன் ராஜத்ரோகமான பிரஸங்கங்கள் செய்ததற்காக கவர்ன்மெண்டார் 40,000 ரூபாய்க்கு நன்னடக்கைக்கு ஜாமீன் கேட்டிருந்தார்கள், அவருடைய கேஸ் பூனாவில் விசாரணை செய்யப்பட்டதில் அதை விசாரித்த ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஜாமீன் கொடுக்க வேண்டியதுதான் என்று தீர்மானித்திருக்கிறார்.